# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.
ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ 3] [தனி இதழ் 25 ந. பை

மலர் 29 | ஆகஸ்ட் 1965 | இதழ் 8


# அரசாங்கத்தார் ஏற்கவேண்டிய அருமையான தீர்மானம்

இம் மாதத் தொடக்கத்தில் தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தில் இன்றியமையாத தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

அந்தத் தீர்மானம், தமிழ் நாட்டில் உள்ள ஆயிரமாயிரம் ஆரம்ப ஆசிரியர்களுக்குப் புதியதொரு சிறப்பையும் செல்வாக்கையும் அளிக்கவல்ல தீர்மானம்.

அந்தத் தீர்மானம், ஆரம்ப ஆசிரியர்களுக்கு முன்னரே தரப்பட்டிருக்கவேண்டிய—ஆனால் இன்றுவரை தரப்படாமலிருக்கிற இன்றியமையாத உரிமை ஒன்றை உடனே தந்தாகவேண்டும் என்று வற்புறுத்துகிற தீர்மானம்.

அந்தத் தீர்மானம், ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்தில் உண்மையான ஆர்வமும் அக்கறையும் படைத்த அத்தனைப் பேர்

களாலும் அட்டியின்றி ஆதரிக்கப்படவேண்டிய அருமையான தீர்மானம்.

அந்தத் தீர்மானம், தமிழகத்துச் சட்டமன்றத்தில் செய்யாறு தொகுதியில் உறுப்பினராக வீற்றிருக்கும் தலைசிறந்த தமிழ்ப் புலவர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட பொன்னான தீர்மானம்.

அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த தமிழறிஞர், அழகழகான பல தமிழ் நூல்களை அணி அணியாக இயற்றி அருந் தமிழன்னையின் பாத கமலங்களுக்குக் காணிக்கையாகத் தந்த பெருமையும் புகழும் படைத்தவர்; பல ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் தொழிலிலும் ஈடுபட்டு அந்தத் தொழிலின் குறை நிறைகளையும் பண்பு நலன் களையும் நன்கறிந்தவர்; புலவர் கோவிந்தன் என்னும் நற்பெயர் படைத்த நல்லறிவாளர்.

அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் அல்லர்; எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்தான். என்றாலும் அந்தத் தீர்மானம், நியாயம் என்ற அடிப்படையின்மீது, உண்மை விளக்கம்—உரிமை வேட்கை—கல்வியின் முன்னேற்றம்—ஆசிரியர் களின் நன்மை ஆகிய செங்கற்களைக் கொண்டு செம்மையாகக் கட்டப் பட்டுள்ள சீர் மிகுந்த மாளிகையாகக் காட்சி தருகிற காரணத்தால், ஆளும் கட்சியும் அமைச்சரவையும் அதைத் தட்டாமல் தயங்காமல் ஏற்றுக்கொள்ளும் என்று நாடு எதிர்பார்த்தது; ஆசிரியர்கள் எதிர் பார்த்தார்கள், நாமும் எதிர்பார்த்தோம்.

ஆனால், ஏனோ தெரியவில்லை, எதிர்பார்த்தது நடைபெறவில்லை. நாம் துளியும் எதிர்பாராத ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது. தீர்மானத்தை ஆளும் கட்சியும் அமைச்சரவையும் ஏற்றுக்கொள்ள வில்லை.

தற்போது உள்ள இந்திய அரசியல் திட்டத்தின்படி, தமிழ் நாட்டுச் சட்டமன்றத்தின் மேலவையில் ஆசிரியர்களின் பிரதி நிதிகளுக்கு என்று நான்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த நான்கு பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கும் உரிமை, கல்லூரி ஆசிரியர்கள்—உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆகிய இரு சாராருக்கு மட்டுமே தரப்பட்டுள்ளது. அந்த இன்றியமையாத உரிமை ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தரப்படவில்லை. வேதனையும் விபரீதமும் மிகுந்த இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட்டு, ஆரம்ப ஆசிரியர்களின் பிரதி நிதிகளுக்கும் மேலவையில் இடம் இருக்கும்படி அரசியல் திட்டம் திருத்தி யமைக்கப்படவேண்டும் என்பதுதான், புலவர் கோவிந்தன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படை ஆகும்.

இந்தத் தீர்மானம் முற்றிலும் நியாயமானது என்பதை, நடுநிலை உள்ளம் படைத்த யாரும் மறுக்க முடியாது.

மேலவையில் உள்ள ஆசிரியர்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மட்டும் தரப்பட்டிருப்பதும், அதே உரிமை ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தரப்படாமலிருப்பதும், கடைந்தெடுத்த அநீதி; வடிகட்டிய அக்கிரமம்; துளியளவும் நியாயமற்ற ஓர் ஏற்பாடு.

ஆசிரியர்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குரிமை, எல்லா ஆசிரியர்களுக்கும் தரப்படுவதுதான் நியாயம்; ஒழுங்கு; முறை; அறநெறி.

மொத்தம் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையில் ஏறத்தாழப் பாதிப்பேர், ஆரம்ப ஆசிரியர்கள் ஆவர். அப்படி இருக்கும்போது, அவ்வளவு பெருந் தொகையினரைத் துச்சமென ஒதுக்கித் தள்ளி விட்டு, மிச்சமுள்ள பாதிப் பேருக்குமட்டும் அந்த உரிமையைத் தருவது எப்படி நியாயமாகும்?

ஆசிரியர்களில், ஒரு சாராருக்கு மட்டும் உரிமை அளிப்பு; மற்றொரு சாராருக்கு உரிமை மறுப்பா?

ஒரு சாராருக்கு மட்டும் அன்பு, ஆதரவு, அரவணைப்பு! மற்றொரு சாராருக்கு, அலட்சியம், அவமதிப்பு, புறக்கணிப்பா?

ஒரு கண்ணுக்கு மட்டும் வெண்ணெய்! மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பா?

ஒரு நாட்டின் முன்னேற்றம் கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது என்றால், அக் கல்வியின் முன்னேற்றம், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. ஆகவே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படைபோல அமைந்திருப்பது ஆரம்பக் கல்வி. அத்தகைய ஆரம்பக் கல்வியை அளிக்கிற ஆரம்ப ஆசிரியர்களுக்கு, அவர்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிற உரிமை மறுக்கப்படுவது, மாபெருந் தவறு என்பதை, யார் தானாகட்டும், எப்படி மறுத்துவிட முடியும்?

புலவர் கோவிந்தன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய முதலமைச்சர் திருவாளர் பக்தவத்சலம் அவர்கள், மேலவையில் உள்ள ஆசிரியர்களின் தொகுதிகளையே எடுத்துவிட வேண்டும் என்பதுதான் தற்போதைய சிந்தனைப் போக்காக இருக்கிறது என்றும், இத்தகைய சூழ்நிலையில் ஆரம்ப ஆசிரியர்களுக்கென்று புதிய தொகுதிகளை ஏற்படுத்துவது தேவையற்ற செயல் என்றும் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் இந்த வாதம் முற்றிலும் பொருத்தமற்றதாக இருக்கிறது என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

ஒரு தவறு, இன்னொரு தவறுக்குச் சமாதானம் ஆகாது.

ஆசிரியர்களின் தொகுதிகளையே எடுத்துவிடவேண்டும் என்று யாராவது கருதினால்—அப்படிக் கருதுபவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் சரி—அந்தக் கருத்து, முற்றிலும் தவறான ஒன்று ஆகும்.

அந்தத் தவறான கருத்தை ஒரு காரணமாகக் காட்டி ஆரம்ப ஆசிரியர்களின் உரிமையை மறுப்பது, முறையான வாதமாகாது.

பக்கத்து வீட்டுப் பையன் பள்ளிக்கூடம் போகாமல் இன்று மட்டம் போட்டு விட்டான். ஆகவே, எதிர் வீட்டு ஏகாம்பரம், நீயும் மட்டம் போட்டுவிடு என்று யாராவது கூறினால், அந்தக் கூற்றை, நியாயமான கூற்று என்றோ, பொருத்தமான வாதம் என்றோ, சொல்ல முடியுமா ?

" ஆசிரியர்களின் தொகுதிகளையே எடுத்துவிடவேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள்—ஆகவே, ஆரம்ப ஆசிரியர்களே, உங்களுக்கு ஒரு தொகுதி வேண்டும் என்று நீங்கள் கேட்காதீர்கள்" என்று இயம்புவது, ஏறத்தாழ இத்தகைய ஒரு வாதம்தான்.

இரண்டும் இரண்டும் ஐந்து என்று ஒருவன் தவறாக எழுதி வைத்துக்கொண்டு, ஆகவே நான்கும் நான்கும் பத்துதான்—எட்டு அல்ல—யார் சொன்னாலும் இதனை மாற்றி எழுத மாட்டேன் என்று முழக்கமிட்டால், அந்த முழக்கத்திற்கு, வாதம் என்றா பெயர் ? பிடிவாதம் என்று வேண்டுமானால் அதனை அழைக்கலாம். வாதம் என்ற பெயர் அதற்குப் பொருந்தாது.

சட்ட மன்ற மேலவையில் ஆசிரியர் தொகுதிகள் தொடர்ந்து இருப்பது இன்றியமையாதது ஆகும்.

வருங்காலக் குடிமக்களை உருவாக்குகிற நிகழ்காலச் சிற்பிகளாகத் திகழ்பவர்கள் ஆசிரியப் பெருமக்கள். நாட்டினுடைய நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அவர்களுடைய தொண்டு அடிப்படை போன்றது. இந்த நாட்டினுடைய எதிர்கால வழக்கறிஞர்களை, டாக்டர்களை, பொது இயல் வல்லுநர்களை, விஞ்ஞானப் பெருமக்களை, அமைச்சர்களை, சட்டமன்றத் தலைவர்களை, அரசியல் தளபதிகளை—அனைவரையும் உருவாக்குகிற மாபெரும் பணி, அவர்களுடைய பணி. எழிலும் ஏற்றமும் மிகுந்த இத்துணைப் பெரும் பொறுப்பு ஆசிரியர்களுக்கு இருந்த போதிலும், அவர்கள், டாக்டர்களைப் போலவோ, வழக்கறிஞர்களைப் போலவோ, வணிகர்களைப் போலவோ, அரசியல்வாதிகளைப் போலவோ, நேரடியாக அரசியலில் ஈடுபட்டு, தேர்தல் களத்தில் குதித்து, சட்ட மன்றக்

கிழவையின் உறுப்பினர்களாக வரமுடியாது. ஏனென்றால் அவர்கள், அரசியலில் நேரடியாக ஈடுபடுவதைக் கல்வித்துறை விதிகள் தடுக்கின்றன.

ஆசிரியர்களுடைய அறிவும் அனுபவமும் நாட்டை ஆளும் நாயகர்களுக்குக் கிடைத்தாகவேண்டும். ஆனால் அவர்களோ, நேரடி அரசியலில் ஈடுபடமுடியாத நிலையில் இருப்பவர்கள். இந்தச் சிக்கலைப் போக்குவது எப்படி என்பதை ஆர அமர இருந்து ஆராய்ந்து பார்த்ததன் விளைவாக உருவானவைதான், மேலவையில் உள்ள ஆசிரியர் தொகுதிகள். நாட்டின் முன் தோன்றுகின்ற எந்தப் பிரச்சினையையும், நடுநிலை உள்ளத்தோடு ஆராய்ந்துபார்த்து நல்ல தீர்ப்பை வழங்கக்கூடிய பண்பாடும், பக்குவமும், பழக்கமும், ஆசிரியப் பெருமக்களுக்கு உண்டு. ஆசிரியர்கள், ஆசிரியர்களாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு இயல்பாக ஏற்பட்டுவிட்ட சிறப்புப் பண்புகள் இவை. இந்தப் பண்பு நலன்கள், இதே அளவுக்கு, பிறபல வாழ்க்கைப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு இருக்க முடியாது. பல்வேறு பிரச்சினைகளையும், எத்தகைய சார்பும் இன்றி, விருப்பு வெறுப்புகள் இன்றி, நடுநிலை உள்ளத்தோடு ஆராய்ந்து பார்க்க வல்ல இந்த இயல்பு, நாட்டின் நலனுக்கு இன்றியமையாத ஒன்று ஆகும். ஆசிரியர் தொகுதிகள் தொடர்ந்து இருந்தே தீரவேண்டும் என்பதற்கு உரிய முக்கியமான காரணம் இது.

ஆசிரியர் தொகுதிகள் தொடர்ந்து இருந்தாகவேண்டும் என்பதற்கு உரிய இன்னொரு காரணம், ஆசிரிய சமூகத்தினரின் தொல்லைகளை, துயரங்களை, குறைகளை, சங்கடங்களை பிறர் எவரையும் விடத் தெள்ளத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக்காட்டவல்ல ஆற்றல் படைத்தவர்கள் ஆசிரியர்களின் பிரதிநிதிகளே என்பது தான். அவர்களுடைய மனக் குறைகளை அவர்களே எடுத்துக் கூறக் கூடிய அளவுக்கு மற்றவர்கள் கூறுவது என்பது இயலாத செயலே அல்லவா?

சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றுபவர்களில் சிலராவது முன்னர் ஆசிரியர்களாக இருந்திருக்கமாட்டார்களா? ஆசிரியர்களின் குறைகளை அவர்களால் நன்கு உணரமுடியாதா? முடியும் என்றால், ஆசிரியர்களுக்கு என்று தனியாகச் சில தொகுதிகள் எதற்காக இருக்கவேண்டும்?—இத்தகைய ஐயவினாக்களை எழுப்புகின்றனர், ஆசிரியர் தொகுதிகளை விரும்பாத ஒரு சிலர்.

இந்த வினாக்களுக்கு மிகப் பொருத்தமான முறையில் விடை அளித்துள்ளார் புலவர் கோவிந்தன் அவர்கள். சட்டமன்றத்தில் அன்னார் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி இது :—

"ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்கள் பலர் சட்டமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள், ஆசிரியர்களுடைய சார்பில் குறைகளை எடுத்துக்கூறலாம் என்று சிலர் தெரிவித்தார்கள். நானும் ஒரு காலத்தில் ஆசிரியராகப் பணி புரிந்தவன் தான். ஆனால் அன்றைய நிலைக்கும் இப்பொழுது இருக்கிற நிலைக்கும் வேறுபாடு இருக்கிறது. ஆசிரியர் துறையில் புதிய புதிய திட்டங்கள் வருகின்றன; புதுப் புது அரசாங்க ஆணைகள் வருகின்றன. அவற்றின் சிக்கல்களைப் புரிந்து கொண்டு எங்களால் அவர்கள் சார்பில் பணி புரியமுடியவில்லை. அவர்களுக்கு இப்பொழுது இருக்கிற அனுபவத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய குறைகளைச் சொல்லிக்கொள்ளவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள் சட்டமன்றத்தில் இருக்கிறார்கள்—அவர்கள் இந்தப் பணியைப் புரியக்கூடும் என்று சொல்லப்படுகிற வாதம் பொருத்தமாக இல்லை"

திட்டவட்டமாக இருக்கின்றன புலவர் கோவிந்தனின் சொற்கள். உண்மை நிலைமையை இதைவிடத் தெளிவாக எப்படி விளக்க முடியும்?

"ஆசிரியர் தொகுதிகள் என்று சில தொகுதிகள் தனியாக இருக்கின்ற காரணத்தால், ஆசிரியர்கள் அரசியல் பிரச்சினைகளில் நேரடியாக ஈடுபடுகிற ஆபத்து ஏற்பட்டுவிடுகிறது. அத்தகைய ஆபத்து வளர்வது, நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்கத்தக்க நிலைமை ஆகும். எனவேதான் ஆசிரியர் தொகுதிகள் அகற்றப்பட வேண்டும்." என்று சிலர் கூறுகிறார்கள். ஆசிரியர் தொகுதிகளுக்கு எதிராக எழுப்பப்படும் மிகப் பெரிய வாதம்—மிக வன்மையான வாதம் இதுதான் என்று கூடச் சொல்லப்படுகிறது.

ஆனால் இந்த வாதத்தில் உண்மை இருக்கிறதா?

இல்லை இல்லை என்று அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டியிருக்கிறது, சென்னையிலிருந்து வெளிவரும் "மெயில்" என்னும் ஆங்கில நாளிதழ்,

"ஆசிரியர் தொகுதிகள் அகற்றப்படுமானால், அப்படி அகற்றும் செயல்தான், ஆசிரியர்களை நடைமுறை அரசியலுக்குத் தூரத்தும் செயலாக அமைந்துவிடும். ஏனென்றால், ஆசிரியர் தொகுதிகள் அகற்றப்பட்டுவிட்ட அந் நிலையில், அவர்களுடைய மனக் குறைகளை எடுத்துக்கூறுவதற்கு அவர்கள் அரசியல்வாதிகளையே முற்றிலும் சார்ந்திருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அத்தகைய சூழ்நிலையில், அரசியல் வாதிகள், ஆசிரியப் பெருமக்களின் பதவியையும் செல்வாக்கையும் தங்களுடைய நன்மைக்காகப் பயன்படுத்திக்

கொள்வதும், ஆசிரியர்களை அரசியல் களத்தில் மும்முரமாக ஈடுபடும்படிச் செய்வதும் எளிதாகிவிடும்.'' என்று எழில்மிக்க முறையில் எழுதியிருக்கிறது "மெயில்" இதழ். "ஆசிரியர்களின் ஆய்வுரை" என்னும் தலைப்பில் "மெயில்" இதழ், 6—8—65 அன்று தீட்டியுள்ள தலையங்கத்தின் ஒரு பகுதி இது. ஆசிரியர்கள் நடைமுறை அரசியலில் மும்முரமாக ஈடுபடும் ஆபத்து, ஆசிரியர் தொகுதிகள் இருப்பதால் ஏற்படவில்லை என்பதையும்; அந்தத் தொகுதிகள் அகற்றப் பட்டால்தான் அந்த ஆபத்து ஏற்படும் என்பதையும் "மெயில்" இதழின் இந்தத் தலையங்கம் மிக நன்றாக எடுத்துக்காட்டியிருக்கிறது.

ஆம்! "மெயில்" இதழ் எடுத்துக்காட்டியுள்ள இந்தக் கருத்து, முற்றிலும் உண்மையாகும். ஆசிரியர்களை அரசியலில் ஈடுபடாமல் தடுக்கும் அணைகள்போல அமைந்திருப்பவை, ஆசிரியத் தொகுதிகள். அணைகள் அகற்றப்பட்டுவிட்டால், வெள்ளம் பெருக்கெடுத்து விடும்; ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவது எளிதாகிவிடும்.

1950 ஆம் ஆண்டில் இன்றைய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்தது. ஆசிரியர் தொகுதிகள் என்கிற அமைப்பு, அப்போது முதல் இருந்து வருகிறது.

பதினைந்து ஆண்டுகளாக ஆசிரியர் தொகுதிகள் இருந்துவருகின்றன. ஆனால் அந்தத் தொகுதிகளால் ஆசிரியர்களிடம் இதுவரை எத்தகைய அரசியல் ஈடுபாடும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அங்கு ஒருவர், இங்கு ஒருவர் என்பதாக யாரோ சில ஆசிரியர்கள் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கக்கூடும். ஆனால் அவர்கள் அவ்வாறு ஈடுபட்டதற்குக் காரணம், ஆசிரியர் தொகுதிகள் என்கிற அமைப்பு இருப்பதுதான் என்று யாரும் சொல்லிவிட முடியாது. அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் எந்த அளவு தொடர்பு உண்டோ, குலாம் காதருக்கும் கோகுலாஷ்டமிக்கும் எந்த அளவு தொடர்பு உண்டோ, அந்த அளவு தொடர்புதான், ஆசிரியர் தொகுதிகளுக்கும், யாரோ சில ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடும் நிலைமைக்கும் இடையே இருக்கமுடியும்.

ஆசிரியர்களும் அரசியலும் என்னும் பிரச்சினையைப் பற்றிப் பல்வேறு சாராரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கும் இன்றைய நிலையில், அப் பிரச்சினை பற்றிய ஓர் அடிப்படை உண்மையை எடுத்துக்காட்டவேண்டியது, நம்முடைய கடமையாகும். ஆசிரியர்களாகப் பணியாற்றும் பெருமக்கள், அரசியல் கட்சிகளில் ஈடுபாடு கொள்வது கூடாது என்பதும், அரசியல் கட்சிகளின் கிளர்ச்சிகள் அல்லது நடவடிக்கைகளில் பங்குபெறக்கூடாது என்பதும், அப்படியெல்லாம் பங்கேற்றால் அப்படிப் பங்கேற்பதன் விளைவாக அவர்களுடைய ஆசிரியத் தொண்டு களங்கம் உடையதாக மாறிவிடும்

என்பதும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மைகள். ஆனால் அதே சமயத்தில், ஆசிரியர்கள், நாட்டின் அரசியல் சூழ்நிலையைப் பற்றித் துளியளவும் கவலைப்படக்கூடாது என்றோ, அரசியல் உணர்வே கொண்டிருக்கக்கூடாது என்றோ யாரும் கூறிவிட முடியாது. ஏனைய குடிமக்களைப் போல ஆசிரியர்களும் இந்த நாட்டின் குடிமக்கள். நாட்டின் அரசியல் சூழ்நிலைகளைக் கூர்மையான முறையில் கவனித்து வரவும், அந்தச் சூழ்நிலைகளை எப்படி மாற்றியமைத்தால் நாட்டின் முன்னேற்றம் விரைவாக நிகழும் என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்கவும், அத்தகைய சிந்தனையின் முடிவுகளுக்கு ஏற்ற முறையில் தேர்தலின்போது தங்கள் வாக்குகளை அளிக்கவும் ஆசிரியர்களுக்கு முழு உரிமை உண்டு. இந்த உரிமை அவர்களுக்குக் கிடையாது என்று, யாரேனும் வாதாடினால், அப்படி வாதாடுபவர்கள், இந்த நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்கும் முட்டுக்கட்டைகளே என்பதில் துளியும் ஐயமில்லை. நாடு முழுவதிலும் அரசியல் விழிப்புணர்ச்சி வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடும் இம் மறுமலர்ச்சி சகாப்தத்தில், ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த விழிப்புணர்ச்சி இருக்கக்கூடாது என்று எவரேனும் விரிவுரை ஆற்றினால், அவர்கள் யாவரும், கடைந்தெடுத்த பிற்போக்கு வாதிகளே என்பதை யார் மறுக்கமுடியும்.

சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறவேண்டுமானால், ஆசிரியர்களாகப் பணிபுரியும் பெருமக்கள், அரசியல் கட்சிகளில் அல்லது நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது; ஆனால் அதே நேரத்தில், அரசியல் உணர்ச்சியே இல்லாத அப்பாவிகளாகவும் இருக்கக் கூடாது.

ஆசிரியர் தொகுதிகளைப் பற்றி நடுநிலை உள்ளத்தோடு ஆராய்ந்துபார்க்கும் எவரும் கீழ்க்கண்ட முடிவுகளுக்குத் தான் வரமுடியும் :—

1. தற்போது உள்ள ஆசிரியர் தொகுதிகள், நாட்டின் நன்மையை முன்னிட்டும், ஆசிரியர்களின் நன்மையை முன்னிட்டும், தொடர்ந்து இருந்துவரவேண்டும். அவை தொடர்ந்து இருப்பதால், நாட்டின் நலனுக்கு எத்தகைய இடையூறும் இல்லை. அவற்றை எடுத்துவிடுவதால், நாட்டின் நலனுக்கு எத்தகைய உதவியும் ஏற்படாது.

2. ஆசிரியர் தொகுதிகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தரப்பட வேண்டும். அல்லது, ஆரம்ப ஆசிரியர்களுக்கென்று தனியாக ஒரு தொகுதி உருவாக்கப் படவேண்டும்.

இந்திய அரசாங்கத்தில் செல்வாக்குள்ள நிலையைப் பெற்றுள்ள பெருந்தலைவர்களிற் சிலரும், மாநில முதலமைச்சர்களிற் சிலரும், ஆசிரியர் தொகுதிகள்மீது காரணமற்ற கசப்புணர்ச்சி கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இந்தக் கசப்புணர்ச்சியைக் கைவிட்டு, அந்தத் தொகுதிகள் தொடர்ந்து இருப்பதற்கும், அந்தத் தொகுதிகளின் பலன் ஆரம்ப ஆசிரியர்கட்குக் கிடைப்பதற்கும் ஏற்ற முறையில் அவர்கள் பணியாற்ற வேண்டும் என்பது, நம்முடைய பேராவல். நாட்டில் உள்ள ஆயிரமாயிரம் ஆசிரியர்களின் உள்ளக் கிடக்கையும் அதுவே.

தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் புலவர் கோவிந்தன் அவர்களால் கொண்டுவரப்பட்ட மிக நியாயமான தீர்மானத்தை, ஆளும் கட்சியினரும் அமைச்சர் அவையினரும் முழுமூச்சுடன் எதிர்த்து நின்று தோற்கடித்திருப்பது, ஆசிரியப் பெருமக்களின் இந்த உள்ளக்கிடக்கைக்கு நேர்மாறான போக்காக இருக்கிறது. எனவேதான், அவர்கள் அப்படித் தோற்கடித்திருப்பதுகண்டு ஆசிரிய சமுதாயத்தின் உள்ளம் அளவற்ற துயரத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

அந்தத் துயரத்தைப் போக்க வேண்டியது, தமிழக அரசாங்கத்தினரின் தனிப்பெருங் கடமையாகும். போக்குவார்களா? எப்போது? ஆசிரியர் உலகம் ஆவலோடு கேட்கும் கேள்விகள் இவை.

## உணர்ந்து எழுமின்!

நீரும் அதன் குமிழியும் ஒன்றே. குமிழியும் நீரில் தோன்றி, நீரில் மிதந்து முடிவில் நீரோடு நீராய் மறைந்து விடுகின்றது. அது போலவே ஜீவனும், பரமாத்மாவும் ஒன்றே. காணப்படும் பேதம் அளவிலேதான். ஜீவன் மற்றொன்றைச் சார்ந்தே நிற்கிறான். பரமாத்மாவோ வேறெதனையும் சார்வதில்லை.

இராமகிருஷ்ணர்.

# சத்தியத்தின் தலைவாயில்

வே. கபிலன்

இந்திய விடுதலைக்கென்று இரவும் பகலும் உழைத்த உத்தமர் பலர்...

பாரதமாதா பெற்றுத் தீர வேண்டிய ஆனந்த சுதந்திரத்துக்காக உயிரைத் தந்தவர், உடலைத் தந்தவர், உடைமையைத் தத்தம் செய்தவர் ஒருவர் இருவர் அல்லர்...

தாயை மறந்தவர், தந்தையை இழந்தவர், தனயனைத் துறந்தவர், தாரத்தை இழந்தவர், கைம்பெண்ணானவர், கதறித்துடித்தவர், காலம் முழுமையும் கவலைப்பட்டவர் அனைவரையும் பற்றிக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தால், அந்த உத்தமர்களின் தன்னலமற்ற தியாக உழைப்பைக் குறித்து யோசித்துப் பார்த்தால் பெற்ற சுதந்திரத்தின் அருமை பெருமை தெரியும்.

ஆம்; அப்படிப்பட்ட சுதந்திரத்துக்காக அரும்பாடுபட்ட இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தியாக சீலர்களுக்குத் தீபச்சுடராக—அவர்கள் வெள்ளையன் அளித்து வந்த கொடுமையைக் கண்டு துவண்டபோது தைரியம் அளிக்கும் தலைவராக விளங்கியவர், மகாத்மா காந்திஜி.

எங்கோ பிறந்தவர் இன்று எங்கும் நிறைந்தவராகி விட்டார்... அகல் விளக்காக உதயமாகி அகிலத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒளி வீசி வழிகாட்டும் வெண்ணிலவுபோல் ஆகிவிட்ட அந்த ஆன்ம ஒளியை—சத்திய மூர்த்தியைஞானகுருவை, பெற்று வளர்ந்துவரும் சுதந்திரக் கொடியின் கீழே நின்று தலைவணங்கி அர்ச்சனை புரிவோமாக! தமக்கென்று வாழாமல் நமக்கென்று வாழ்ந்த அந்த நல்ல குருநாதனை நெஞ்சில் நிறுத்தி இன்றுள்ள பிரச்னைகளுக்கு நல்வழி காண்போமாக...

ஆசையைத் துறக்கச் சொன்ன புத்தரையும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டு, என்று சொன்ன ஏசுவையும், கண்ணன் காட்டிய சத்தியத் துணிகளையும் அகமெனும் பீடத்தில் அமர்த்திக்கொண்டு, இந்திய விடுதலைக்காக இன்னல்பல அனுபவித்து, ஆங்கிலேயனால் இம்சை அனுபவித்துக்கொண்டிருந்த மாந்தருக்கு அகிம்சையெனும் மருந்தைத்தடவிக் குணப்படுத்திய குணக்குன்றை எண்ணிச் செயல்படுவோமாக. அகிம்சையை ஆயுதமாகக்கொண்டு அந்

நியரை விரட்டிய அண்ணல் காந்தியை—ஜாதி பேதக் களைகளைக் களைந்தெறிந்த கருணை வடிவை—சத்திய சோதனை கண்ட சாத்விக சீலரை—ஆன்ம நெறியை அகிலத்துக்கெல்லாம் வழங்கிய அண்ணலை—இரத்தவெறி கொண்டலைந்த அந்நியரை இதோபதேசங்களால் அடக்கி, நமக்கெல்லாம் பூரண சுதந்திரம் பெற்றுத் தந்த பெம்மானை—அகழ்வாரைத் தாங்கும்நிலம்போலத்தம்மைஇகழ்வாரைப் பொறுத்துப் புன்முறுவல் சிந்திய பெருமானை—அவர் அர்ச்சித்த, 'இரகுபதி ராகவ' என்ற கீர்த்தனையை அவருக்கே ஆரமாகப் படைத்து பூஜிப்போமாக!

"சத்தியத்தை அடைவதற்கான சாதனங்கள் எப்படிக் கஷ்டமானவையோ, அப்படி எளிமையானவையாகவும் இருக்கின்றன. இறுமாப்பைக் கொண்ட ஒருவனுக்கு அவை முற்றும் சாத்தியமில்லாதவையாகத் தோன்றலாம்; ஆனால் கபடமற்ற ஒரு குழந்தைக்கு அவை சாத்தியமானவை. சத்தியத்தை நாடிச் செல்பவர், தூசிக்கும் தூசியாகப் பணிவு கொள்ள வேண்டும். உலகம் தூசியைக் காலின் கீழ் வைத்து நசுக்குகிறது. ஆனால், சத்தியத்தை நாடுகிறவரோ, அத்தூசியும் தம்மை நசுக்கும் அளவுக்குத் தம்மைப் பணிவுள்ளவராக்கிக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான்—அதற்கு முன் அல்ல—ஒளியைக் கணப்பொழுதாவது காண முடியும்" என்று சொன்ன மகாத்மாவை, இந்தப் புனித சுதந்திர நாளில் மட்டுமல்லாமல் என்றென்றும் எண்ணி, அவரது ஆன்மீக வழியில் நடந்து நாட்டையும் வீட்டையும் நல்வழிக்குக் கொண்டு வருவோமாக.

## உணர்ந்து எழுமின்!

நீ யார் என்பதை முதலில் அறிந்து கொள்; அப்போது நீ இறைவனை அறிந்தவன் ஆவாய். 'நான்' என்பவன் யார்? அச்சொல்லால் குறிக்கப்படுவது என் கையா, என் காலா, என் மாமிசமா, இரத்தமா அல்லது என் உடலின் வேறு அங்கமா? நன்றாக எண்ணிப் பார். 'நான்' என்று கூறக்கூடிய ஒரு பொருள் இல்லை என்பதை நீ அறிவாய். வெங்காயத்தின் தோலியை உரிக்க உரிக்க, தோலியே தோன்றிக்கொண்டு இருக்கிறது. அதன் உள்ளே வேறு ஒன்றையும் பார்ப்பதில்லை. அப்படியே 'நான்' என்பதை விசாரிக்கத் தொடங்கினால், முடிவில் அது ஒன்றுமற்ற நிலையில் நின்று மறையும். பின்னால் முடிவில் எஞ்சி நிற்பது சின்மயமாகிய சுத்த ஆத்மா ஆகும். 'நான்' என்பது அழிந்தால் பிரம்மம் தோன்றும்.

—ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

# க்ஷயரோகம்

பிரான்சிஸ் கார்ஃபி மாட்ரங்கா

புற்று நோயைப் போன்று க்ஷயரோகமும் எவ்வித முன்னெச்சரிக்கையும் விடுக்காமல், எவ்விதமான அறிகுறிகளும் காட்டாமல் வந்துவிடுகிறது. எனவே, ஆண்டுக்கு ஒரு முறையாவது க்ஷயரோக சோதனை செய்துகொள்வது இன்றியமையாதது. இவ்வியாதி இருக்கிறதா, இல்லையா என்று நிச்சயித்துக்கொள்ள இச்சோதனை உதவும்.

பொல்லாத இந்த வியாதியைக் குறித்து முக்கியமான சில சங்கதிகளைக் கீழ்க்கண்ட கேள்வி–பதில்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

க்ஷயரோகம் குடும்பத்தில் வழிவழியாக வருகின்ற ஒரு பரம்பரை வியாதியா?

அல்ல. க்ஷயரோகக் கிருமிகள் தான் இவ் வியாதிக்குக் காரணம். அவை இருந்தால் தான் வியாதி வரும்.

க்ஷயரோகம் ஒட்டுவார் ஒட்டியா?

ஆம்; ஒட்டுவார் ஒட்டிதான். க்ஷயரோகக்காரருடன் வசிப்பவர்களுக்கு இவ்வியாதி வாலாம்.

குழந்தைகளுக்கு இந்த வியாதி வருவதுண்டா?

இது குழந்தைப் பருவத்தில் தொடங்கி மெதுவாக வளர்ந்து, வாலிபத்தின் ஆரம்பத்தில் வலுவாகப் பிடித்துக் கொண்டுவிடும். சின்ன வயதிலேயே கவனமாக இருந்தால், வியாதியைக் கட்டுப்படுத்தி விடலாம். தீமை ஒன்றும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள இயலும்.

பள்ளி செல்லும் பருவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் மரணத்திற்கு க்ஷயம் முக்கிய காரணமாகிறதா? அவர்களுக்கு இவ் வியாதி சுலபமாகக் காணுகிறதா?

இதற்கு "ஆமாம்" என்கிற பதிலையே டாக்டர் ஹென்றி டி. சாட்விக் கூறியிருக்கிறார். மேலும் கூறுவதாவது; "பள்ளி செல்லும் பருவத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் மரணத்துக்கு முக்கிய காரணமாக இந்த க்ஷயம் அமைந்துள்ளது என்பதைக் கேட்டுப் பலர் திகைப்படைகிறார்கள். 5 வயதுக்கு உட்பட்டவர்களுக்குச் சாவை விளைப்பதில் இந் நோய் இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. ஐந்து வயதுக்குப் பிறகு இரண்டாவது ஸ்தானத்திலிருந்து முதல் ஸ்தானத்துக்கு வந்துவிடுகிறது. இந்த ஸ்தானத்தைப் பள்ளிப் பருவம்

ழுடியும் வரையிலும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு, வாலிபத்தின் ஆரம்ப தசையில் தன் ஆட்சிக்கு வலுவைத் தேடிக் கொண்டுவிடுகிறது."

க்ஷயம் கண்டிருக்கிறது, இல்லை என்று கண்டுகொள்ள என்னென்ன சோதனைகள் அனுஷ்டிக்கப்படுகின்றன ?

இரண்டு சோதனைகள் இதற்கு உண்டு. ஒன்று டுபெர்குலின் டெஸ்ட் என்கிற தோல் சோதனை. இரண்டாவது மார்பை எக்ஸ்கதிர் பாய்ச்சிச் சோதிப்பது. முதல் சோதனையால் வியாதி கண்டிருக்கிறதா, இல்லையா என்று சொல்லிவிடலாம். இரண்டாவது சோதனையால் எந்த அளவுக்கு நுரையீரல்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொண்டுவிடலாம்.

க்ஷயம் தொடங்கும் போது, காய்ச்சல் காணுவது உண்டா?

காய்ச்சல் காணும் என்கிற கட்டாயம் கிடையாது. ஒரு வித அறிகுறியும் இல்லாமல் வருகிற வியாதி இந்த வியாதி. உடம்புக்குக் காய்ச்சல் வரத் தொடங்கும் போது, உள்ளே வியாதி நன்றாக வளர்ந்திருக்கும். பிறகு சொஸ்தப்படுத்துவது என்பது கடினம்; வெகு நாட்கள் பிடிக்கும் ஒரு காரியம்.

உடம்பில் எந்தப் பாகத்தில் க்ஷயம் முதலில் தொடங்குகிறது?

பெரும்பாலும் இது சுவாச கோசத்தில் தான் தொடங்குகிறது. சில சமயங்களில் உள் நாக்குச் சதைகளிலோ வேறு உறுப்புக்களிலோ தொடங்குவதும் உண்டு.

குடலில் க்ஷயம் கண்டவர்கள் இளைத்துக் களைத்து மெலிந்திருப்பார்களா ?

அப்படி இருக்கமாட்டார்கள். மாறாக, பார்வைக்குக் காடுமுரடாகவோ, பருத்துக் கனமாகவோ இருப்பார்கள்.

க்ஷயத்தைக் காட்டும் அறிகுறிகள் சிலவற்றைச் சொல்லுங்கள்.

அஜீரணம், எடைக் குறைவு, பசியின்மை, இருமல், சோர்வு இவற்றைக் குறிப்பிடலாம். இந்த அறிகுறிகளைக் காண்பதற்கு முன்னமே வியாதி நன்றாக வளர்ந்து விட்டிருக்கும். அறிகுறியே காட்டாமல் வருகின்ற நோயாயிற்றே இது.

இதனால் இரத்தம் கக்குவது உண்டா ?

இரத்தம் கக்கினால், அது க்ஷயத்துக்கு அறிகுறி என்று நிச்சயப்படுத்திக்கொண்டு விடலாம், வேறு காரணம் இல்லாத பட்சத்தில்.

க்ஷயம் எவ்வாறு பரவுகிறது ?

நெருங்கிப் பழகுவது காரணமாக க்ஷயரோகக் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது. முத்தமிடுவது, க்ஷயரோகக்காரர்கள் துப்பும் எச்சிலில் பட்டு வரும் காற்றைச் சுவாசிப்பது, நோய்க் கிருமியுள்ள

பொருள்களைக் கையாளுவது—இவற்றாலும் இந்த வியாதி பரவும். இது ஒரு தொற்று நோய்; நெருங்கி வந்தவரைப் பிடித்துக் கொள்ளும். அத்துடன், தானகப் பயணம் புறப்பட்டு, மற்றவர்களையும் பிடித்துக்கொள்ளும்.

இவ்வியாதி கண்டவர்களில் பெரும்பாலோர் ஏழ்மைப் பட்டவர்களா?

ஆம்; வசதிக் குறைவான வாழ்வில் இந்த நோய்க்கு வாழ்வு அமைந்திருக்கிறது!

க்ஷயம் கண்டுள்ளது எனத் தெரிந்தாலும், என்ன செய்ய வேண்டும்?

உடனே அருகில் உள்ள சுகாதார சிகிச்சை இல்லத்துக்குச் செல்ல வேண்டும். அங்கு க்ஷயம் பற்றிய சகல தகவல்களும் தெரிவிக்கப்படும். அஃது அறிவு மிகுந்த உதவியாய் இருக்கும். மற்றவர்கள் இழைத்த பிழைகளையும் எடுத்துச் சொல்லுவார்கள். அவற்றை யெல்லாம் தவிர்க்க வேண்டும். சுகாதாரச் சிகிச்சை இல்லத்தில் மனத்துக்கும் உடம்புக்கும் ஓய்வு கிடைக்கிறது. பொறுப்பு என்பது கிடையவே கிடையாது. எல்லாப் பொறுப்புக்களையும் மற்றவர்கள் வகிக்கிறார்கள். அத்தோடு, அன்பும் பரிவும் அங்கு நிறையக் கிடைக்கின்றன.

க்ஷயரோக சிகிச்சையில் சீதோஷண நிலைமைக்கு முக்கியத்துவம் உண்டா?

ஒரு காலத்தில் இருந்தது. இப்பொழுது கிடையாது. இன்றைக்கு க்ஷயத்தை எந்த இடத்திலும்—நெருக்கடியான நகரத்தில் கூட—சொஸ்தப்படுத்த முடியும். நவீன சாதனங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதே இதற்குக்காரணம்.

க்ஷயரோக சிகிச்சைக்கு நிறைய சூரிய வெளிச்சம் அத்தியாவசியமோ?

இது குறித்து அமெரிக்க ஐக்கிய மாகாணத்துத தேசிய க்ஷயரோக சங்கத்தின் வெளியீடான வெற்றிக்கு ஆரோக்கியம் என்னும் இதழ் இவ்வாறு கூறுகிறது: "சுவாசகோசத்தில் க்ஷயம் கண்டுள்ளவர்கள் நீண்ட நேரம் சூரிய வெளிச்சத்தில் இருப்பது பெருத்த கெடுதலாய் வந்து முடியும். உடம்பில் மற்றப் பகுதிகளில் க்ஷயம் கண்டிருந்தால், சூரிய வெளிச்சத்தைச் சில சமயம் பயன் படுத்துவதுண்டு. இதையும் டாக்டரின் ஆலோசனையின் பேரில் தான் செய்ய வேண்டும்."

வீட்டில் இருந்து கொண்டு சிகிச்சை பெறும் க்ஷயரோகக்காரர் துப்பும் எச்சிலை எவ்வாறு அகற்றி அப்புறப்படுத்தவேண்டும்?

அந்த எச்சிலை எரித்துவிட வேண்டும். காகிதத்தில் துப்பச் செய்து, அந்தக் காகிதத்தை எச்சிலோடு எரித்துவிட வேண்டும். நோயாளியின் எச்சிலில் நோய்க் கிருமி வாழ்வதால், இக் காரியத்தில் மிக்க கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு தடவை வந்து போன க்ஷயம் மறுபடியும் வருவதுண்டோ?

வருவதுண்டு. மற்ற வியாதிகளைப்போல் அல்ல இந்த வியாதி, ஒரு தடவை வந்துவிட்டது, இனிமேல் வராது என்பதற்கு. இது தொடர்ந்து வாழும் ஒரு வியாதி.

இந்த க்ஷயம் மனிதர்களுக்கு மட்டும் தான் வருமா?

அப்படி ஒன்றும் இல்லை. மிருகங்களுக்கும் வருவதுண்டு.

இதைக் குணப்படுத்தச் சாதாரணமாக எத்தனை நாள் ஆகும்?

சமீப காலம் வரையிலும் பல ஆண்டுகள் வேண்டியிருந்தன குணப்படுத்துவதற்கு. மருத்துவக் கலை வேகமாக முன்னேறி எத்தனையோ புதுமைகளைக் கண்டு பிடித்திருக்கிறது இந்தத் துறையில். எனவே முன்னைக் காட்டிலும் இன்றைக்குச் சீக்கிரமாகக் குணப்படுத்த முடிகிறது. வருங் காலத்தில் இன்னும் சீக்கிரமாகக் குணப்படுத்த முடியலாம்.

க்ஷயத்துக்கான அறிகுறிகள் எல்லாம் அகன்றுவிட்ட பின்னர் தேகப்பிரயாசை மேற்கொள்ளலாமா?

சில வாரங்களுக்கு எந்த விதமான தேக உழைப்பையும் மேற்கொள்ளக் கூடாது. இது மாதிரி உழைப்பு எத்தனையோ பேர்களின் உயிருக்கு உலை வைத்துவிட்டது. டாக்டரைக் கேட்டுக்கொண்டு, அவர் யோசனையின் பேரில் தான் இக் காரியத்தில் இறங்க வேண்டும்.

குடலில் க்ஷயம் கண்டு குணமாகிவிட்ட பின்னரும் அவ்வப்பொழுது டாக்டரிடம் உடம்பைக் காட்ட வேண்டியது அவசியமா?

அவசியம், வெகு அவசியம். வியாதி குணமாகி, உடம்பில் சீரமைப்பு நடக்கும் இக் காலத்தில் டாக்டரின் கண்காணிப்பு மிக அவசியம். இல்லையேல் வியாதி திருப்பிக்கொண்டாலும் கொள்ளலாம்.

க்ஷயத்துக்குச் சிறந்த சிகிச்சை எவை?

நல்ல ஆகாரம், சுத்தமான காற்று, வசதியான வாழ்க்கை, மன அமைதி, ஓய்வு—இவை தான்.

க்ஷயம் வாராமல் தடுப்பது எவ்விதம்?

க்ஷயம், பொதுச் சுகாதாரம் இவற்றுக்கான சங்கம் ஒன்று இவ்வாறு சொல்லுகிறது: "நுரையீரல் க்ஷயம் கண்டவர்களுடன் கூட இருந்து வேலை செய்பவர்கள், சேர்ந்து வசிப்பவர்கள், விளையாடுகிறவர்கள் இவர்களையெல்லாம் நன்கு சோதிக்க வேண்டும். இத்தகைய பேர்வழிகளுக்கு உடம்பில் ஒரு கோளாறும் இல்லாமல் இருக்கலாம். க்ஷயக் கிருமி கூட இவர்கள் தேகத்தில் நுழைந்திருக்காது. இருப்பினும், அவர்களையெல்லாம் அடிக்கடி மருத்துவ சோதனைக்கு உட்படுத்த வேண்டும். க்ஷயரோகத்தைத் தடுக்க அதுவே வழியாகும்."

—"நல்வழி"

ஏழ்மையில் பிறந்தார்; உறுதியும் வலிமையும்
மென்மையும் வாய்ந்த வீரனாக வாழ்ந்தார்:

# ஆப்ரகாம் லிங்கன்

"இவர் இரும்போ மென்பட்டோ என்று வியக்கும்படி, கல் போன்ற உறுதியும் பனி போன்ற மென்மையும் ஒருங்கே வாய்ந்து, பயங்கரப் புயலும் சொல்லவொண்ணாத பேரமைதியும் முரண்படாது இணைந்து வாழும் உள்ளமும் மனமும் உடைய ஒருவர், மண்ணில் தோன்றுவது மன்பதை வரலாற்றில் அடிக்கடி நிகழும் ஒன்று அல்ல. இத்தகைய முரண்பாடுகள் ஒருங்கே அமைந்த மக்கள் இப்பல நூற்றாண்டுகளில் இங்கொருவர் அங்கொருவர் இருந்ததாகச் சொல்லக் கேட்கிறோம். ஈடிணையற்ற ஆபிரகாம் லிங்கன் இத்தகைய பண்பு முழுமையும் உடைய ஒருவர் அல்ல என்றாலும், அது கிட்டத்தட்ட முழுமையும் வாய்க்கப்பெற்ற ஒருவர்." என்று நூல்பல எழுதிய வரலாற்றறிஞர் கார்ல்ஸாண்ட்பர்க், ஆபிரகாம் லிங்கனின் 150-வது பிறந்த நாள் விழாவில், அமெரிக்க மத்திய சட்டமன்றத்தின் இரு சபைகளும் குழுமிய கூட்டுக் கூட்டத்தில் தொடுத்துரைத்த புகழ்மாலை இது.

ஆபிரகாம் லிங்கன் 1861 மார்ச் 4-ம் தேதி ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற நாள் அமெரிக்காவுக்கு மிகவும் படுமோசமான காலம். ஏற்கெனவே ஏழு அமெரிக்க மாநிலங்கள் பிரிந்து போய்த் தனி நாடு அமைத்துக்கொண்டன. ஆறு வாரங்களுக்குள் வடக்கும் தெற்கும் இரத்தக் களரியான உள்நாட்டுப் போரில் சிக்கிக் கொள்ளவிருந்தன.

வேறு எந்த அமெரிக்க ஜனாதிபதியும் பதவியேற்ற காலத்தில் இவ்வளவு கடுமையான பிரச்னைகளைக் கண்டதில்லை; இவ்வளவு வெறுப்புக்கும் பழிச் சொல்லுக்கும் இலக்கானதும் இல்லை; இறுதியில் இவரைப்போல மக்கள் அன்பைப் பெற்றதும் இல்லை. சூழ்நிலை மாறாக இருந்தாலும், லிங்கன் பொறுமை குலையாமல் இருந்தார்; அமெரிக்க நாட்டின் ஐக்கியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியில் சற்றும் தளராதவராக இருந்தார்.

"படைப்பால் அனைவரும் ஒன்றே என்ற கொள்கைக்காக அர்ப்பணிக்கப்பட்ட" நாடு உலகமெல்லாம் இந்த ஜனநாயகக் கொள்கை சரிதான் என்று காணும்படி வாழுமா என்பதுதான் உள்நாட்டுப் போரின் உண்மையான விவகாரம் என்று உணர்ந்தார் லிங்கன். கடுமையான அந்நெடும் போராட்டம்

59ஆம் பக்கம் பார்க்க

# தெளிந்த குரல்

[டாக்டர். மு. வரதராசன்]

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னே திருவள்ளுவர் தோன்றிய காலத்தில் நாட்டில் பிரிவினை பல இருந்தன. மனிதர் என்று பொதுவாக நோக்கும் நோக்கமும் இருந்தது. இன்ன நாட்டைச் சேர்ந்தவன், இன்ன சமயத்தைச் சேர்ந்தவன், இன்ன சாதியைச் சேர்ந்தவன் என்று பார்க்கும் வேறுபட்ட மனப்பான்மைகளும் இருந்தன. சமயங்களுக்கு இடையே பொதுவான உண்மைகள் இவை என்று காண்பதைவிட, அவற்றின் வேறுபாடுகளை வலியுறுத்துவதில் ஆர்வம் மிகுதியாக இருந்தது. இலக்கியத் துறையில், காதல் பற்றியவை அகம் என்றும், போர் வீரம் கொடை முதலியவை பற்றியவை புறம் என்றும் பகுத்த மரபுகள் கட்டுப்பாடுடையனவாக இருந்தன. வாழ்க்கையில் கண்மூடித் தன்மையால் சில மாசுகள் குடிபுகுந்தது போலவே, இலக்கியத்திலும் அந்த மரபுகளால் சில குறைகள் இடம் பெற்றன. அந்த நிலையில் தோன்றிய திருவள்ளுவர் தக்கவை தகாதவை என்று ஆராய்ந்து பார்க்கும் நடுநிலைமை உடையவராகவிளங்கினார். ஆகையால் தோற்றங்களையும் மரபுகளையும் அவ்வாறே கொள்ளாமல் அவற்றினுள் விளங்கிய உண்மைகளை ஆராய்ந்து பார்க்கமுடிந்தது.

**குணம்நாடிக் குற்றமும்**
**நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

என்று அவர் எழுதிய குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது அவருடைய வாழ்க்கை. எங்கே எதைக் கண்டாலும் அதன் குணத்தையும் குற்றத்தையும் சீர்தூக்கும் திறன் பெற்றிருந்தார். பொதுவாக மக்கள் தாம் வாழும் சூழ்நிலையில் அமிழ்ந்து போகும் இயல்புடையவர்கள். ஆனால் மெய்யுணர்வுபெற்ற சான்றோர்கள் அவ்வாறு அமிழ்ந்து விடுவதில்லை. அந்தச் சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டே உண்மையை ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் அவர்களுக்கு உள்ளது.

உண்மை காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படாதது. காலமும் இடமும் செய்யும் மாறுதல்களைக் கடந்து விளங்குவதே உண்மையாகும். ஆகையால் உண்மை உணரும் சான்றோர்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் வாழ்ந்து எழுதும் நூலில் எல்லாக் காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான உண்மைகளைக் காண்கிறோம்.

திருவள்ளுவர் காலத்து அரசு முதலியன எவ்வளவோ மாறிவிட்டன. ஆயினும் இன்றும் அவருடைய எழுத்துக்கள் பயன் தருகின்றன. தமிழ் நாட்டின் ஒரு மூலையில் இருந்து திருவள்ளுவர் எழுதினார். ஆனால் அவருடைய நூல், பாரதியார் கூறுவதற்கேற்ப தமிழ் நாட்டிற்கு மட்டும் அல்லாமல் உலகத்திற்குப் பொதுவான உண்மைகளை எடுத்துரைக்கின்றது.

அவர் காலத்தில் தமிழ்நாடு - சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்ற முப்பிரிவு உடையதாக இருந்தது. மூன்று வேந்தர்கள் ஆண்டு வந்தார்கள். ஆனால் திருவள்ளுவரின் நூலில் அந்த மூவேந்தர்களைப் பற்றிய குறிப்போ, முப்பிரிவு பற்றிய குறிப்போ இல்லை. படை, அரண் முதலிய அங்கங்களைப் பற்றி எல்லாம் பொதுவான உண்மைகளைக் கூறும் திருவள்ளுவர், நாட்டின் முப்பிரிவு பற்றிக் கூறிச் செல்லவில்லை. ஆட்சியின் அடிப்படை உண்மைகளை மட்டும் உணர்ந்துகூற வல்லவராக விளங்கியதே அதற்குக் காரணம். இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானக் கருவிகளின் முன்னேற்றத்தால் உலகம் ஒரு குடும்பம் போல் சுருங்கிவிட்ட நிலையில் சான்றோர்கள் இன்ன நாட்டாருக்கு என்று இல்லாமல் மனித சமுதாயத்திற்கு என்று அறிவுரை கூறுகிறார்கள். இது காலத்திற்கேற்ற வரவேற்கத்தக்க நல்ல மனப்பான்மை ஆகும்.

இந்தப் பரந்த மனப்பான்மையைத் திருக்குறளில் காண்கிறோம். திருவள்ளுவர் தாம் கூறும் அறவுரைகளைச் சோழநாட்டார்க்கு என்றோ, பாண்டிய நாட்டார்க்கு என்றோ கூறாமல், தமிழ் நாட்டார்க்கு என்றும் எடுத்து உரைக்காமல், மனிதர்க்கு என்று பொதுவாகக் கூறுகிறார். அவர் காலத்திற்குச் சிறிது முன்பு "யாதும் ஊரே யாவரும்கேளிர்" என்று சான்றோர் ஒருவர் ஒரு தமிழ்பாட்டின்வாயிலாகவலியுறுத்திய உண்மை அவருடைய உள்ளத்தை மிகக் கவர்ந்திருக்க வேண்டும். அப்படியானால் திருவள்ளுவர்க்குச் சொந்த நாட்டுப் பற்றும் இல்லையா என்று கேட்கலாம். ஒருவன் தான் பிறந்த குடும்பத்தைக் காக்க வேண்டும் என்றும், சுற்றத்தாரைப் போற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். ஒருவன் தன் நாட்டு மக்களைப் பெரிய சுற்றமாகக் கொண்டு போற்ற வேண்டும் என்பது அவருடைய கொள்கையேயாம். அவருடைய நோக்கத்தின்படி ஒருவனுடைய குடும்பம் சிறிய எல்லை உடையது. நாடு பெரிய எல்லை உடையது. மனித சமுதாயம் என்பதே (எல்லை வரையறுக்காமல்) அவர் முழுவதும் போற்றியதாகும். அவரவர்க்கு அமைந்த சிறு கடமைகளுக்காக எல்லைகள் வேண்டும். ஆனால் பொதுவான நோக்கத்திற்கும் அறநெறிக்கும் எல்லை வேண்டா என்பதே அவர் கருத்து.

இவ்வாறு நாடு முதலிய வேறுபாடு கருதாது பொதுவான உண்மைகளை உணர்த்தும் திறன் பெற்

திருந்த அவர்க்கு சாதிப் பாகுபாடு பொருத்தமற்றதாகத் தோன்றியது; தேவையற்றதாகவும் தோன்றியது. அதனால் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று முழங்கினார். ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள் கழிந்த பின்னும் இந்த அறிவுரை இன்னும் நமக்கு வேண்டிய புதியபாடமாக உள்ளது.

சமயங்களை யெல்லாம் ஊடுருவிக் கண்டு பொதுவான உண்மைகளைப் போற்றும் ஆற்றலும் அவர்க்கு உண்டு. இராமலிங்க சுவாமிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், காந்தியடிகள் முதலானவர்கள் போல் அக்காலத்தில் அவர் சமயப் பொதுமை உணர்ந்தார் என்பது வியத்தற்கு உரியதாகும்.

> எப்பொருள் எத்தன்மைத்
> தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப
> தறிவு

என்று அவர் வலியுறுத்திய நெறியின்படியே அவருடைய சமய வாழ்க்கையும் அமைந்தது. அவர் எல்லாச் சமய நூல்களையும் கற்றார். எல்லாச் சமயத்தாரோடும் பழகினார். அவரவர்களின் சாத்திரங்களையும் சடங்குகளையும் குறியீடுகளையும் கடந்து பார்க்கும் பார்வை பெற்றார். பொதுவான கடவுள் வழிபாட்டையும் நல்லொழுக்கத்தையும் சமுதாயத் தொண்டையும் தம் நூலில் எடுத்துரைத்தார். அதனால்தான் அவருக்குப்பின் வந்த அறிஞர்கள் அன்று முதல் இன்று வரை சமய வேறுபாடு இல்லாமல் அவருடைய நூலைப் போற்றி வருகிறார்கள்.

திருவள்ளுவருக்கு முற்பட்ட பழைய நூல்களில் காதல் பற்றிய பாடல்களில் ஒரு மாசு இருந்தது. காதலன் தன் மனைவியை விட்டுப் பரத்தை வீட்டுக்குச் சென்று வருவதை மருதத்திணை என்று மரபாகக்கொண்டுபாடிவந்தார்கள். திருவள்ளுவர் காதல் பற்றிப் பாடிய பகுதியில் அந்த மாசு இடம் பெறவில்லை. அவருடைய காமத்துப்பாலில் ஊடல் உள்ளது. முப்பது குறளில் ஊடல் கூறப்படுகின்றது. ஆனால் பரத்தை இல்லை. தலைவன் ஒழுக்கம் கெடவில்லை. காதலி ஐயுறுகின்றாள். காதலன் திகைக்கிறான். அந்த அளவிலேயே ஊடலை முடிக்கின்றார். அது மட்டுமல்லாமல் வரைவின் மகளிர் என்ற தலைப்பில் பத்துக் குறள் எழுதி விலைமகள் இல்லாத சமுதாயம் அமையவேண்டும் என்ற தம் ஆர்வத்தை எடுத்துரைக்கின்றார்.

திருவள்ளுவருக்குமுன் போர் வீரம் பற்றிய பாடல்களைக் கள் இல்லாமல் காண்பது அரிது. அரச சபைகளில் கள் இடம்பெற்றது போலவே புலவர்களிடமும் இடம் பெற்றிருந்தது. ஆனால் திருவள்ளுவர் எங்கும் எவ்வகையிலும் கள்ளுக்கு இடம் தர மறுத்துவிட்டார். அறிவோடு வாழப் பிறந்த மனிதன் விலை கொடுத்துக் கள் குடித்து அறிவை மயக்கிக்கொள்வது மிக இழிந்த செயல் என்று கடிந்துரைத்தார்.

பத்துக்குறளில் கள்ளுண்ணாமை என்ற தலைப்பில் அக்காலத்தார்க்குப் புரட்சியான கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இல்லறம் துறவறம் என்று வேறுபட்ட இருவகை நிலைகள் இந்த நாட்டில் நெடுங் காலமாக இருந்து வருகின்றன. இல்லறம் இயல்பான நடைபோன்றது. துறவறமோ கடுமையான தசை நார்ப் பயிற்சிகள் போன்றது. தண்டால் முதலியன செய்து பழகித் தசைநார்களை முறுக்கேற்றியவர்கள், மற்றவர்களின் உடம்புகளைப் பார்த்து எள்ளி நகையாடக் கூடாது. ஆனால், துறவிகள் இல்லறத்தாரைப் பார்த்து இரக்கத்தோடும் இரக்கமில்லாமலும் இகழ்ந்து பேசும் வழக்கம் இருந்து வந்தது. சென்ற நூற்றாண்டு வரையிலும் அவ்வாறு இல்லறத்தாரை இகழ்ந்துரைப்பதற்குச் செல்வாக்கும் இருந்தது எனக் கூறலாம். திருவள்ளுவர் இந்த வகையிலும் உண்மையை ஊடுருவிப் பார்த்தார். இருவகை நிலையிலும் கடமையைப் போற்றி நெறிதவறாமல் வாழ்கின்றவர்களை உயர்ந்தவர் என்றார். ஏற்றத் தாழ்வு கற்பிக்க அவர்க்கு மனமில்லை.

இயல்பினான் இல்வாழ்க்கை
வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

என்று ஒழுங்காக இல்லறம் நடத்துபவரையும் போற்றினார்.

தலைப்பட்டார் தீரத் துறந்
தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

என்று உண்மையாகவே பற்றற்ற துறவிகளையும் போற்றினார். பற்று அறாமல் சில ஆசைகளுக்கு அடிமைப்பட்டு துறவு வேடம் மட்டும் பூண்டவர்களை மயங்கி வலைப்பட்டவர் என்று ஒதுக்கினார்.

பிறந்த சார்பு, வாழ்ந்த சூழ்நிலை முதலியவைபற்றி விருப்பு வெறுப்புக்களால் மயங்கி உண்மை உணராமல் கலங்குவோர் பலர். அவர்கள் வீணாக வாதித்தும் போரிட்டும் வாழ்க்கையைக் குழப்பிக் கெடுக்கிறார்கள். அவர்களுக்கிடையே அவ்வக்காலத்துச் சான்றோர் ஒரு சிலர் தோன்றிப் பல நிலைகளிலும் உண்மையை ஊடுருவி நோக்கித் தெளிந்து, அந்தத்தெளிவை உலகத்திற்கு வழங்குகிறார்கள். அவர்களால் தான் உலகம் வாழ்கிறது. குழப்பங்களையும் போர்களையும் கடந்து மனித சமுதாயம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் போற்றி வருவதற்கு உதவியாக இருப்பது அந்தச் சான்றோர்களின் தொண்டே ஆகும். பழங்காலத்தில் தோன்றிய அத்தகைய சான்றோர்களில் திருவள்ளுவரும் ஒருவர். அவருடைய தெளிந்த குரல் திருக்குறளில் கேட்கிறது.

—பம்பாய்த் தமிழ்ச் சங்க
நாடக விழா மலர்

மாணவருக்கு :

# இளைஞனே, விழித்தெழு!

எஸ். மீனாட்சிசுந்தரம் பி ஏ., எல்.டி.

கற்கால மனிதர்கள் வாழ்ந்த காலத்திலும் ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரம்தான்; இன்றும் ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரம்தான். காலம் நீள்வதில்லை.

பழைய கற்கால மனிதன் புதிய கற்கால நிலைக்கு வரப் பல ஆயிரமாண்டுகள் ஆயின. மனிதன் பறக்கத் தொடங்கியது 1919-ஆம் ஆண்டில்தான். இந்த ஒரு சில ஆண்டுகளுக்குள் அவன் ஒரு மணிக்கு 20,000 மைல் வேகத்தில் பறக்கத் தெரிந்துகொண்டான். சில ஆண்டுகளுக்குள் அவன் பிற மண்டலங்களுக்குப் பறந்து செல்ல இயலுமென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நமது தோட்டத்துத் தென்னை மரத்தில வாழும் தூக்கணாங் குருவியின் கூட்டைப் பாருங்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தூக்கணாங் குருவிகளின் கூடுகள் போலவேதான் இன்றும் அவைகள் கட்டுகின்றன. ஆனால் குகைகளிலும், வனங்களிலும் வாழ்ந்து வந்த மனிதன் இன்றைக்கு நூறு அடுக்குக் கட்டிடங்கள் கட்டி வாழ முடிகின்றது.

நமது முன்னோர்கள் பனையோலையில் எழுத்தாணி கொண்டு நூல்கள் எழுதினார்கள். இன்று புதிய அச்சு இயந்திரங்களில் ஒரு நாளில் ஆயிரக்கணக்கான நூல்கள் வெளியிடப்படுகின்றன. உலகில் பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும் ஒரு ஆண்டுக்குச் செலவாகும் மை அரபிக் கடலின் நீரை விட அதிகம் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். இவ்வளவும் அறிவு வளர்ச்சிக்காகத் தானே.

கற்காலத்திற்கும் அணுக் காலத்திற்கும் உள்ள வேறுபாட்டை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று அறிவின் ஆழமும் அகலமும் வெகு வேகமாக வளர்ந்துகொண்டே போகின்றன. ஒவ்வொரு துறையிலும் இதை நாம் நாள்தோறும் பார்க்கின்றோம்.

இந்த நிலையில் அறிவு பெறப் பள்ளிக்கும், கல்லூரிகளுக்கும் செல்லும் மாணவ, மாணவிகளின் கடமை என்ன? **வளராத நேரம்—வெகு வேகமாக வளர்ந்து வரும் அறிவு.** இச்சூழ்நிலைக்குத் தகுந்தபடி அறிவு பெற்று உயர்வடைய வேண்டுமானால் மாணவர்கள் காலத்தை ஒரு சிறிதும் வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். கவனமாகக் கற்க வேண்டும்; நிறையக் கற்க வேண்டும்.

இந்த உண்மை தெரிந்த காலத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் நாடுகள்தாம் உலக்

அரங்கில் முன்னேறி வருகின்றன. மற்ற நாடுகளில் மக்கள் தொகை எவ்வளவு அதிகமாக இருந்தாலும், இயற்கை வளம் நிறைய இருந்தாலும் அவை பின் தங்கிய நாடுகளாகவே இருக்கும்.

நம் நாட்டில் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. விஞ்ஞான அறிவு வளர வேண்டும், அதற்கு அடிப்படையான கணித அறிவு வளர வேண்டும் என்று சொல்லுகின்றோம். ஆனால் 30% இவ்விரு பாடங்களிலும் பெறுவதைப் பெரிய சாதனையாகக் கருதுகின்றோம். உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் நமது சென்னை மாநிலத்தில் 50,000 மாணவர்கள் வெற்றி பெறவில்லையென்றால், இதனால் ஏற்பட்ட கால இழப்பு, பொருள் இழப்பு, உடல் வலிமை இழப்பு முதலியவைகளை எண்ணிப் பார்க்கவேண்டாமா? இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் காலத்தை வீணாக்கியவர் என்று துணிந்து கூறலாம்.

உலக வரலாற்றில் தமக்கென்று ஒரு தனி இடம் தேடிக்கொண்ட பெரியோர்கள் பலர் தங்கள் காலத்தை வீணாகக் கழித்திருந்தால், எல்லோரையும் போலத் தான் அவர்களும் வாழ்ந்து மடிந்திருப்பார்கள். மறைந்த நம் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு இரவில் நான்கு மணி நேரம் மட்டும் தூங்குவார். மீதி 20 மணி நேரமும் உழைப்பார். அமெரிக்கக் கோடீசுவரர் ராக்ஃபெல்லர் நம்மைப் போலத் தூங்கிக் கொண்டு இருந்திருந்தால், இத்தனைப் பொருளீட்டி வாரி வழங்கி வள்ளலாக மாறியிருக்க முடியுமா? இப்படிப்பட்ட பெரியோர்களின் வாழ்க்கையைப் பற்றிப் படித்து, நாமும் காலத்தைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்"

என்றார் வள்ளுவர். மறதி காலம் நீட்டித்தல். சோம்பல், அளவு மீறிய தூக்கம் இந் நான்கும் கெடுகின்ற இயல்பை உடையவர் விரும்பி ஏறும் மரக்கலம் என்பது இதன் பொருள். இந்நாட்டின் வருங்காலத் தலைவர்களாகிய மாணவ மணிகள் இந் நான்கு பண்புகளையும் விலக்கி, முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை நரம்புகளில் பாய்ச்சி, குறைந்த காலத்தில் நிறைந்த அறிவு பெற முயற்சி செய்ய வேண்டும்.

காந்திஜி கீதை முழுவதையும் பாராமல் படிக்க விரும்பினார்; நேரம் கிடைக்கவில்லை. எனவே, அன்றாடம் பல் துலக்கும் இடத்தில் இரண்டு சுலோகங்களை எழுதித் தொங்கவிட்டுக் கொண்டு, பல் துலக்கிக் கொண்டே அவற்றைப் பாராமல் படித்து விடுவாராம். இளைஞர்கள் காலையில் ஆறு மணிக்கு எழுவதற்கு மாறாக ஐந்து மணிக்கு எழுந்திருப்பது என்று

(32-ஆம் பக்கம் பார்க்க)

# பள்ளியும் படிப்பும்

உண்மையிலேயே மூடவற்ற பொருள் இது! பழங்காலத் தொகுப்புகளிலும் பள்ளிப் புத்தகங்களிலும் இது பற்றி எத்தனை பழமொழிகளைக் காண்கிறோம். "சாந்துணையும் கல்," "அறிவே சக்தி" "விரைவான வாழ்வின் அனுபவங்களைச் சுருக்கி அளிப்பதே கல்வி" இவைபோல் இன்னும் பல. இவற்றிற்கு விளக்கமும் தேவையே! சில சமயங்களில் இவற்றைப் பயனற்ற சொற்களைப் போல கிண்டலாகச் சிலர் சொல்வதுமுண்டு. ஆயின் அவை உண்மையிலேயே பயனற்றவை தானா?

ஒரு குழந்தை எழுத்துக்களை நன்கு கற்றுத் தேர்வதற்கு முன்னரே அறிவைப்பெற முடியாதா? எண்ணுவதைத் தொடர்ந்து கணக்கு, கணக்கைத் தொடர்ந்து அல்ஜிப்ரா, அதன் பின் ஜியோமிதி, அதைத் தொடர்ந்து கணிதம், என்று முறையாகத் தான் சொல்லிக் கொடுக்க வேண்டுமா? பாரம்பரைப் பழக்கவழக்கங்களால் புனிதப் படுத்தப் பட்டுவிட்ட பழங்கால முறையிலிருந்து வேறுபடுவதற்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியையும் தடைசெய்த சிலபழங்காலக்கல்வியாளர்கள் "கற்றலின் தருக்கமுறை" என்று கூறுகிறார்களே, அதன் பொருள் என்ன?

விரைவான வாழ்வின் அனுபவங்களைப்பற்றிய நமது கண்ணோட்டம் எதுவாக இருக்க வேண்டும்? ஒரு மனிதனின் வாழ்நாள் மிக மிக அதிகமாக இருந்த போதிலுங்கூட, அவனது வாழ்க்கை அனுபவங்கள் மூலம் மட்டும் கற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு அறிவு வளர்ந்துவிடவில்லையா? வாழ்வின் அனுபவங்கள் எவ்வளவு பரந்தவையாக இருந்த போதிலும்கூட அணுவைத் துருவி ஆய்வதற்கோ, உயிரினங்களின் அடிப்படையாகிய செல்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கோ, அண்டவெளியிலிருந்து நம் உலகைக் கண்டுகளிப்பதற்கோ, அவை எல்லோருக்கும் தகுதி அளித்து விடுவதில்லை. சாந்துணையும் கற்க வேண்டுமென்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இந்தக் 'கல்வி'யில் பள்ளிகளின் பங்கு என்ன? அவை எந்த அறிவைக் கொடுக்க வேண்டும்?

ஒரு சிறிதளவாவது அறிந்து கொள்ள வேண்டுமென்றால் மிக அதிகமாகப் படிக்க வேண்டுமென்று மான்டெஸ்கு கூறினார். பள்ளியில் பெற்ற அறிவு வெகு சீக்கிரத்திலேயே மறந்துவிடு

ஏ. ஐ. மார்குஷேவிச்

கிறது. எல்லாம் மறக்கப்பட்ட பின் எஞ்சி நிற்பது எதுவோ, அதுவே, கலாச்சாரம் என்றார். மற்றொரு பிரஞ்சுக் காரரான இ. ஹெர்ரியட், புலனாகாத இந்த 'மிச்சம்' எதுவாக இருந்த போதிலும், பள்ளியை விட்ட பின்னும் தொடர்ந்து படிக்கும் திறன் அதன் ஒரு பகுதியாகும். மீண்டும். நாம், "சாந்துணையும் கல்" என்ற பழைய பழமொழிக்கே வந்து சேருகிறோம்.

புரட்சிக்கு முன் கல்வி கற்ற ரஷ்யர்களில் சிலர் இன்றுகூட இலத்தீன் இலக்கியத்திலிருந்து ஒரு பகுதியைச் சிரமமின்றி மொழிபெயர்த்து விடுவதையும் பைச்கொவ்டன் புத்தகத்திலிருந்து கூட்டு வட்டிக்கணக்கொன்றைச் சுலபமாகப் போட்டுவிடுவதையும் பார்க்கிறோம். பள்ளியிலிருந்து வெளியேறிய பின்னர், இத்துறைகளுடன் அவர்களுக்கு எத்தகைய தொடர்பும் இல்லாதிருந்த போதிலுங்கூட அவர்கள் இதைச் செய்து விடுகிறார்கள். சோவியத் பள்ளி மாணவர்கள் இவ்விதம் செய்ய முடியுமென்று கூறுவதற்கில்லை. ஏனெனில் மனப்பாடம் செய்வதற்கு நாம் அவ்வளவு முக்கியத்துவம் அளிப்பதில்லை.

> எதிரி உண்டாக்கிய காயம் விரைவில் ஆறிவிடும். தானே உண்டாக்கிக் கொண்ட காயங்கள் சீக்கிரமாக ஆறாது.
>
> —நேருஜி

## கல்வியின் புதிய தரம்:

நமது நாட்டில், நமது காலத்தில், பொருளாதாரமும், தொழில் நுணுக்கமும், விஞ்ஞானமும், கலாச்சாரமும், கலைகளும் என்றும் கண்டிராத வேகத்துடனே முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நாளில், பள்ளியிலே கற்ற அறிவிலிருந்து, தேவையான போது, தேவையான செய்திகளை உடனடியாக எடுத்துக் கொள்ளும் திறமைக்கு நாம் முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பது தெளிவு. அதற்கு மாறாகப் புதிய உண்மைகள், நிகழ்ச்சிகள், கருத்துக்கள் இவற்றை ஆழ்ந்து சிந்தித்து நிர்ணயிக்கவும், அவற்றின் சாரத்தைத் தனித்தெடுத்துத் தனது சொந்த வேலையிலே சரியாகப் பயன்படுத்தவும் கற்றுத் தருதலுக்கே முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. இந்தத் திறமையைப் பெற வேண்டுமானால், ஒரு நபருக்கு எல்லாத் தகுதிகளும் இருக்க வேண்டுமென்பதையோ, சென்ற காலத்தில் கற்றறிந்தவற்றில் பெரும் பகுதியை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டுமென்பதையோ நான் ஒரு கணமேனும் மறுக்கவில்லை. புதிய நிலைகளுக்கு ஏற்ப, பழைய முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய கல்வித் தரம் வேண்டுமென்பதையே நான் வற்புறுத்த விரும்புகிறேன். புதிய அறிவைப் பெறுவதற்கு விருப்பமும், முயற்சியும், இப்புதிய முறையின் முக்-

கியமான, முதன்மையான அம்சங்களாக இருக்கும்.

நமது கலாச்சாரத்தின் அடிப்படையை லெனின் பின் கண்டவாறு, மிக அற்புதமாக நிர்ணயித்துள்ளார்: "மனித குலத்தால் சிருஷ்டி செய்யப்பட்டுள்ள அறிவனைத்தையும் கொண்டு உன் மனதைச் செழுமைப் படுத்திக் கொண்டாலே நீ கம்யூனிஸ்ட் ஆக முடியும்". கலைக் களஞ்சியம் போன்ற தனது நினைவிலே துழாவி, ஒவ்வொரு விஞ்ஞான ரீதியான கேள்விக்கும் ஏற்ற விடையை ஒருவன் கொடுக்க வேண்டும் என்பதல்ல இதன் பொருள். மனிதனது செய்கைகளின் எல்லாத் துறைகளிலும் ஒரு ஆர்வத்தை அவனுள்ளத்தே தோற்றுவிக்க வேண்டும். ஒரு கேள்விக்குச் சிறந்த முறையில், விரைவாக விடை கூறுவது எப்படி என்பதை அவன் புரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். கலைக்களஞ்சியங்கள், குறிப்புப் புத்தகங்கள், புள்ளிவிவரப் பட்டியல்கள், பாடப்புத்தகங்கள், சிறப்பு ஆய்வுரைகள், சஞ்சிகைக் கட்டுரைகள் இவற்றை எப்படி உபயோகிப்பது என்று கற்றுத் தரவேண்டும். ஒரு விடையைக் கண்டு பிடித்தவுடன் அதைப் படித்துத்தன்மயமாக்கி கொள்வதற்குத் திறமையை உண்டாக்க வேண்டும்.

## எழுத்தறிவுமட்டும் போதுமா?

இதற்கு எழுத்தறிவு மட்டும் போதாதா என்று சிலர் கேட்கலாம். போதவே போதாது. புத்தகங்கள், விரிவுரைகள், டெலிவிஷன், ரேடியோ, திரைப்படங்கள் இவற்றின் மூலம் வெள்ளமெனப் பெருகிவரும் விஷயங்களைத் தெரிந்து கொள்ள, ஒருவருக்குத் தன் சொந்த மொழியில் திறமை இருந்தால் மட்டும் போதாது. விஞ்ஞானத்துறைச் சொற்களையும், குறியீடுகளையும், சரளமாகவும் அறிவுடனும் உபயோகிக்கத் தெரிந்திருப்பதோடு, குறைந்த பக்ஷம் ஒரு அன்னிய மொழியிலாவது தேர்ச்சி இருக்க வேண்டும். இது மிகவும் அதிகமானதா, அல்லது குறைவானதா?

பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தை, கல்வித் தரத்திற்கு ஒரு குறியீடாக நாங்கள் கருதுவதில்லை என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். கல்வியிலிருந்து போதித்தலைப் பிரித்துப் பார்க்கமுடியாது. அறிவுத் தேர்ச்சி, எந்த அளவிற்கு மனம், குணம், உணர்ச்சிகள், நம்பிக்கைகள், இவற்றில் புதிய பண்புகளைத் தோற்றுவித்திருக்கிறது என்பதைச் சார்ந்துள்ளது போதனையின் வெற்றி. இந்தத்துறையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பங்கு உண்டு. உதாரணமாகக் கணக்கை நன்கு சிந்தித்து முறைப்படி போதிப்பதின் மூலம், எப்படி மனமும்,

பிறரிடம் உள்ள தீய தன்மையை உணராதொழிக. அது அறிவின்மையும் தளர்ச்சியும் ஆகும்.

—விவேகானந்தர்.

குணமும் பண்படுகின்றன என்று பார்ப்போம். (எனது துறையிலேயே உதாரணம் கொடுப்பது எனக்குச்சுலபமாக இருக்கிறது.

கருத்தியல்பாகச் சிந்திக்கும் திறனை கணிதம் உண்டாக்குகிறது. ஒரு பிரச்சனையைக் கணித ரீதியாகக் கையாள்வதற்கு இன்றியமையாத விஷயங்களை மட்டும் ஒரு குறிப்பிட்ட வடிவிலே அமைக்கும் திறமையை ஊக்குவிக்கிறது. கொடுக்கப் பட்ட வாதங்களிலிருந்துசரியான முடிவுகளை எடுக்கவும், பொருட்களைப் பகுத்து ஆராயவும் திறமையை உண்டாக்குகிறது. தத்துவார்த்த விசாரணைகளிலிருந்து கிடைக்கும் முடிவுகளை ஸ்தூலமான பிரச்சனைகளில் பயன்படுத்தவும், முடிவுகளைப் பொதுமைப் படுத்தவும், புதிய பிரச்சனைகளைக் கிளப்பவும் மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். கணிதத்தைப் போதிக்கும் போது, தங்கள் எண்ணங்களைத் துல்லியமாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும் வெளியிடுவதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். கவனக் கட்டுப்பாடு, மன ஒருமை, ஒரு குறிக்கோளை அடைவதில் விடா முயற்சி, ஒழுங்கான முறையிலே வேலை செய்யும் பழக்கம், இவற்றையும் மாணவரிடையே தோற்றுவிக்க வேண்டும்.

இயற்கை விஞ்ஞானங்கள், மனித இயல் பாடங்கள் போன்ற மற்ற பாடங்களைப் போதிக்கும் போதும் இப்பண்புகள் பலவும், வேறுபல புதிய பண்புகளும் வளர்க்கப் படுகின்றன. ஒரு பள்ளி எத்தகைய பண்புகளை வளர்க்கிறது என்பதே முக்கியமானது. பள்ளிப் பாடமுறைகளிலிருந்துதான் இது தோன்ற வேண்டும் என்பது இல்லை.

## பள்ளிப் பாடத் திட்டங்கள் :

என்ற போதிலும் சரியான பாட முறையும் முக்கியமானதே. இதில் மிகவும் சிக்கலான பிரச்சனை ஒன்று நம்மை எதிர் நோக்கி உள்ளது. ஒரு புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்போ, கருத்தோ தோன்றிய உடன் எந்த அளவில் அவற்றைப் புத்தகங்களிலும், பாடத்திட்டத்திலும் சேர்க்க வேண்டும் என்பதே அந்தப் பிரச்சனை.

புதிய கருத்துக்களையும், உண்மைகளையும், மாணவனோ, ஆசிரியரோ, புறக்கணித்துவிட முடியாது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஒரு விஞ்ஞானக் கோட்பாட்டில், (வகுப்பு அறைக்கு உள்ளோ, வெளியேயோ) ஆர்வங் காட்டுவதற்கும், அதைப் பாடத் திட்டத்தில் கட்டாயப் பாடம் ஆக்குவதற்கும் பேதம் உண்டு. இந்தப் புதுமைகளில் அனேகம் பள்ளிப் படிப்பு முடிவதற்கு முன்பே மறைந்து விடலாம், பின்னணிக்குத் தள்ளப்படலாம், அல்லது பொது விதிகளுடன் ஒன்றைக் கலந்து விடலாம். இந்தப் பிரச்சனைக்குப் பொதுவான ஒரு விடையைக் கூற முடியாது. எனினும், நடைமுறையில் இருக்கும் பாடத்

திட்டத்திலுள்ள நிகழ்ச்சிகளை இந்தக் கண்டு பிடிப்புகள் தான் திருப்திகரமாக விளக்க முடியும் என்று நிரூபிக்கப்பட்டாலொழிய புதிய கண்டுபிடிப்புகளை பாடத் திட்டத்தில் சேர்க்கக் கூடாது என்று நான் எண்ணுகிறேன். அல்லது சில விஷயங்கள் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கப்படாது இருந்தபோதிலுங்கூட அவை செயல் முறை முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கலாம். அத்தகைய புதிய கண்டுபிடிப்புகள் விளக்குமேயானால் அப்போதும் அவற்றைப் பாடத் திட்டத்திலே சேர்த்துக் கொள்ளலாம்.

**நவீனமாக்கல் :**

ஒரு குறிப்பிட்ட துறையிலே ஏற்படும் மாறுதல்களால் மட்டும் அல்லாமல், போதனு இயலிலும், உளவியலிலும் ஏற்படும் வளர்ச்சிகளின் மூலமும் பாடத் திட்டங்கள் சுருக்கம் அடைகின்றன. உதாரணமாக எல். வி. ஷாங்கோவ், டி. பி. எல்கோனின் அவரது சகாக்கள் ஆகியோர் உள இயலில் செய்த ஆராய்ச்சிகளின் பயனாக, இதுவரை நமது குழந்தைகளுக்கு ஆரம்பப் பள்ளியின் முதல் நான்கு ஆண்டுகளில் போதிக்கப்பட்டு வந்த கணக்கு அறிவும், திறமையும், மூன்று ஆண்டுகளிலேயே போதிக்கப் படலாம் என்று ஊர்ஜிதப் படுத்தப்பட்டு விட்டது. குழந்தைகளின் இயற்கையான விருப்புகளையும், கணக்கு ரீதியில் சிந்திப்பதற்குள்ள திறமையையும் சரியாகப் பயன்படுத்துவதே இந்த முறையின் இரகசியம். இதற்கு மிகுந்த பிரயாசையும் தேவை இல்லை. குழந்தைகள் முதல் மூன்று ஆண்டுகளில் அடையும் முன்னேற்றத்தைக் கொண்டு, எதிர்மறை அளவுகளையும், எளிய சமன்பாடுகளையும் தெரிந்து கொள்கிறார்கள். எனவே 4வது 5 வது வகுப்புகளில் 'அல்ஜீப்ரா' முறையைக் கற்றுத் தரலாம். (முன்னர் இது ஆறுவது வகுப்பிலேயே சொல்லித் தரப்பட்டது).

நவீன மாக்குதல் என்ற பெயரால், உண்மையை நோக்கி விஞ்ஞானம் முன்னேறிய காலத்தில், முக்கியமான நிலைகளாக இருந்த கோட்பாடுகளையும், முறைகளையும் முற்றிலும் நீக்கிவிடக் கூடாது. விஞ்ஞானச் சிந்தனை பல நூற்றாண்டுகளாக எந்தப் பாதையைப் பின்பற்றி வந்திருக்கிறது என்பதை ஒரு குழந்தை கற்றுக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பது அறிவுடைமை ஆகாதுதான். எனினும் பள்ளிப் பாடத்தின் வரம்பிற்கு உட்பட்டு இந்த முன்னேற்றப் பாதையின் முக்கியமான பகுதிகளைக் காட்டத்தான் வேண்டும். உதாரணமாக பௌதிகத்தில் புவிஈர்ப்பு விதிகளை அறிந்து கொள்வதற்குக் காரணமாக இருந்த கெப்ளர் விதிகளையும், இரண்டு நூற்றாண்டு காலம் வளர்ச்சி அடைந்து விசேஷ தொடர்புக் கொள்கையாகப் பரிணமித்த நியூடனின் விதிகளையும் குறிப்பிடலாம்.

**வாழ்க்கைப் பள்ளிக்குத் தயாரிப்பு :**

அறிவு, ஒழுக்கம், செயல் முறை, பல்தொழில் நுணுக்கம், உடலுழைப்பு, அழகுணர்ச்சி, ஆகிய துறைகளிலே ஒரு குழந்தையின் கல்வி, பள்ளிக்கு முன் வீட்டிலும் பாலர் பள்ளிகளிலும் ஆரம்பித்து பள்ளிக்கூட நாட்களிலே தொடர்கிறது. பள்ளி வாழ்வு முடிந்தவுடன் கல்வியும், முடிந்து விட்டதாகக் கருதக் கூடாது. ஒரு நபரை வாழ்க்கைப் பள்ளிக்குத் தயார்படுத்துவதற்கு, அவரிடத்தில் மனித யத்தனத்தின் முக்கியமான துறைகளிலே—தொழில், விவசாயம், பொது ஊழியங்கள், விஞ்ஞானம், கலாசாரம், கலை, விளையாட்டுகள், சமூக, அரசாங்க நடவடிக்கைகள் ஆகிய துறைகளிலே—ஆர்வம் ஏற்படுத்தினால்மட்டும் போதாது. தன்னைத்தானே உணர்வதற்கும், தனது தனிப்பட்ட ஆசை அபிலாஷைகளைத் தெரிந்து கொண்டு, அவற்றைக் கூடுமானவரையில் நிறைவேற்றிக் கொள்வதற்கும் திறமை உண்டாக்க வேண்டும்.

பல்வேறு துறைகளிலும் உள்ள மக்களைப் பார்க்கும்போது ஒன்று தெளிவாகத் தெரிகிறது. ஒரு துறையில் திறமையும், மனத்தையும், உணர்ச்சிகளையும் விரிவு படுத்திக் கொள்ள வாய்ப்பும் இருக்கும்போது, அவரது அறிவு வளர்ச்சி அடைந்து, கண்ணோட்டம் விரிவடைந்து, சிறப்பான உளச் செயல் பழக்கங்கள் தோன்றி, தொடர்பற்ற மற்ற துறையிலே அவர் சுலபமாக,எளிதாக, இயற்கையாக அறிவைப் பெற்று விடுகிறார். (இதற்குச் சில விதிவிலக்குகள் இருக்கலாம்.)

**பள்ளிப் படிப்பின் காலம் :**

தற்காலப் பள்ளிகளைப் பற்றி விவாதிக்கும்போது, பள்ளிப் படிப்பின் காலத்தைப் பற்றிக் குறிப்பிடாது இருக்க முடியாது. மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இது 12 ஆண்டாக உள்ளது. சோவியத் யூனியனில் இது 10 ஆண்டாக இருப்பதால் நவீன தரங்களுக்கு ஏற்ப நமது குழந்தைகளுக்கும் கல்வி கற்பிக்கப் போதுமான காலம் இருக்கிறதோ என்ற ஐயம் ஏற்படலாம். மேல் நாடுகளில் வாரம் 5 நாட்களே பள்ளி உண்டு. நம் நாட்டிலோ ஆறுநாட்கள் பள்ளி உண்டு. மேலை நாடுகளில் 5 அல்லது 6 வயதிலிருந்து கல்வி ஆரம்பிக்கப்படுகிறது என்பதும், நம் நாட்டிலே 7 வது வயதிலிருந்து கல்வி ஆரம்பிக்கப்படுகிறது என்பதும் உண்மையே. ஆனால் நமது பாலர் பள்ளிகளின் உயர்மட்டத்திலே முதல் ஆண்டுக் கல்வி முழுவதும் சொல்லிக் கொடுக்கப்பட்டு விடுகிறது. எனவே உயர்தரக் கல்வியைப் பொருத்தமட்டில் நமது போதனை நேரம் மேலை நாடுகளைப்போன்று தான் உள்ளது.

முடிவாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நவீன விஞ்ஞானத் தொழில் நுணுக்க சாதனைகளை, போதனை முறையை அபிவிருத்தி செய்வதற்குப் பயன் படுத்த வேண்டும்.

# இந்தோனேஷியா

இந்தியாவுக்கும் இந்தோனேஷியாவுக்கும் பல வகையில் நெருங்கிய தொடர்பும், ஒற்றுமையும் உண்டு.

சுமத்திரா, ஜாவா, போர்னியோ, செலிபிஸ் ஆகிய கிழக்கு இந்தியத் தீவுகள், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஆசியா கண்டத்தோடு நிலத் தொடர்பு கொண்டு இணைந்திருந்ததாக நினைக்கிறார்கள். பிறகு கடல் பொங்கி, அவை தனித்தனி தீவுகளாகப் பிரிந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

எது எவ்வாறாயினும், வரலாறு அறிந்த நாட்களிலிருந்து இந்தத் தீவுகளில் குடியேறிக் காணப்பட்டவர்கள் இந்தியர்கள் தான். ஏசுகிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பே, நாகரிகத்தில் செழித்த இந்தியர்கள் கடல் கடந்து சென்று கிழக்கிலும் மேற்கிலும் வர்த்தகம்செய்து வந்ததுண்டு. இவ்வாறு திரை கடல் ஓடிச்சென்ற இந்தியர்கள் பலர் சுமத்ரா, ஜாவா தீவுகளில் நிரந்தரமாகக் குடி புகுந்தார்கள். இதனால் இந்து சமயப் பழக்க வழக்கங்கள் அங்கு நிலைபெற்றன. காலப்போக்கில் பல சிற்றரசுகளும், பேரரசுகளும்தோன்றின. இன்றும் இந்தோனேஷியாவில் பழக்கத்திலுள்ள பல பெயர்களும், சொற்களும் வடமொழியின் சிதைவுகளாகவே காணப்படுகின்றன.

இந்தியாவில் புத்த மதம் செழித்து ஓங்கியபோது சுமத்ராவுக்ும், ஜாவாவுக்கும் அது பரவியது.

அக்காலத்திலேயே சுமத்ரா மிளகுக்கு உலகெங்கும் பெயர் பெற்றிருந்தது. பாரசீக மன்னர் ஒருவர், எடைக்கு எடை பொன் தந்து மிளகைப் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது! கி. பி. முதல் நூற்றாண்டிலேயே, அங்கு ஸ்ரீவிஜயா சாம்ராஜ்யம் கடல் வாணிபத்தில் செல்வாக்குடன் விளங்கியது.

அதன்பின் மினங்கபா, மத்யாபகித் போன்ற பல இந்து சாம்ராஜ்யங்கள் தோன்றி, ஒன்றுக்கொன்று போட்டி போட்டு மறைந்தன.

எருமைச் சண்டைக்குப் பெயர் பெற்றிருந்தது ஜாவா. இதற்காக தனிக்கவனத்தோடு எருமைகளைக் கொழுக்க வைப்பார்கள்.

ஒரு சமயம் ஜாவா மன்னர் மினங்கபா அரசரை எருமைச் சண்டையில் போட்டிக்கு அழைத்துச் சவால் விட்டாராம். ஆனால் மினங்கபா நாட்டில் ஜாவா எருமைகளை வெல்லத்தக்க எருமைகள் இல்லை. எனவே மினங்கபா மந்திரி ஒரு யுக்தியைக் கையாண்டார். ஒரு சிறு எருமைக் கன்

றைப் பிடித்து வந்து, அதைப் பல நாட்கள் பட்டினி போட்டுப் பூட்டி வைத்தார். போட்டி தினத்தன்று, கூரிய இரும்புக் கொம்புகளைக் கவசமாக அதன் தலையில் பொருத்தி விட்டார்.

போட்டி அரங்கில் மன்னர்கள் கொலுவீற்றிருந்தனர். மக்கள் ஆவலோடு ஆரவாரம் செய்தனர். ஜாவா எருமை அவிழ்த்துவிடப் பட்டு, அரங்கிலே பீடு நடை போட்டது. குறிப்பிட்ட சமயத்தில் மினங்கபா மந்திரி கன்றின் கட்டை அவிழ்த்து விடச் சொன்னார். பல நாட்கள் பட்டினியால் வாடிய கன்று தாவிச் சென்று, ஜாவா எருமையின் மடியில் ஆவேசமாக முட்டி, பசி தீர்க்க முனைந்தது. அதன் தலையில் பொருத்தப்பட்டிருந்த கூரிய இரும்புக் கொம்புகள் ஜாவா எருதின் வயிற்றைக் கிழித்து விட்டன. அது சாய்ந்தது. மினங்கபா மன்னர் வெற்றி கொண்டார். அன்று முதல் மினங்கபா மக்களின் தலை அணி, எருமைக் கொம்பின் உருவாக மாறியது.

இம்மாதிரி போட்டியும் பொறாமையும் கொண்டு இந்த மன்னர்கள் ஒருவருக் கொருவர் போரிட்ட வண்ணமிருந்ததால், பின்னால் வந்த சீனர்களும், அதன் பிறகு வந்த அராபியர்களும் இந்தத் தீவுகளில் ஆதிக்கம் பெற முடிந்தது.

அராபியர் வந்தவுடன் ஜாவா, சுமத்ரா போர்னியோ தீவுகளில் இஸ்லாம் பரவலாயிற்று. பல சிற்றரசர்களும், பிரபுக்களும் இஸ்லாம் மதத்தைத் தழுவலாயினர். ஒரே ஒரு மன்னர் மட்டும் இஸ்லாம் மதத்தைத் தழுவ மனமில்லாமல் தனது பரிவாரங்களோடு பாலி தீவுக்குச் சென்று, அங்கு ஒரு தனி இந்து ராஜ்யத்தை அமைக்கலானார். இன்றும் பாலி தீவில் மட்டும் இந்து மதம்தான் ஓங்கி நிற்கிறது.

பாலி மக்களின் எளிய வாழ்க்கையும், கலைத் திறமையும், பண்பும், மதச் சடங்குகளும் ஒரு தனி நாகரிகமாகவே விளங்குகிறது. உள்ளத்தைக் கவரும் பாலி நடனம், உலகப் பிரசித்தமானது.

இந்தோனேஷியாவிலும்முதன் முதலில் போர்ச்சுகீசியர்தான் கால் வைத்தார்கள். 1511-ம் ஆண்டில் அல்புகர்க் மலாக்கா தீவைக் கைப்பற்றினார். பிறகு வியாபாரம் செய்வதாகச் சொல்லி மற்ற தீவுகளில் ஆதிக்கம் பெறலாயினர். ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு டச்சுக்காரர்கள் மலாக்காவைக்கைப்பற்றி போர்ச்சுகீசியரை விரட்டினர். இந்தோனேஷியா முழுவதும் ஆதிக்கம் பெற முயன்றனர்.

மிளகு, ஏலம் போன்ற வாசனைப் பொருள்களை வாங்கிப் போக வந்த டச்சு கம்பெனியார், நாட்டு மண்ணை வசமாக்கிக் கொண்ட பின், இன்னும் லாபகரமான பொருள்களையும் உற்பத்தி செய்ய முயன்றார்கள். தேயிலை, ரப்பர், கொய்னா, காப்பி தோட்டங்கள் எல்லாம் பெருகலாயின.

இந்த லாபகரமான பயிர்களுக்காக, நெல் வயல்கள் அழிக்கப்பட்டன. அரிசி உற்பத்தி குறையவும் நாட்டு மக்கள் தொகை பெருகவும் தொடங்கவே மக்கள் அதிருப்தி கொள்ளலாயினர். கம்பெனி முதலாளிகளின் அக்கிரமத்தை எதிர்த்து சுதேசி மன்னர்கள் போரிடலாயினர். டச்சு கம்பெனி பல போர்களில் ஈடுபடலாயிற்று.

இவ்வாறு வர்த்தகத்தில் இடைத்த லாபமெல்லாம் மன்னர்களுடன் போராடுவதில் செலவாகி விடவே, கம்பெனியின் பொருளாதார நிலை மோசமாயிற்று. அதோடு கம்பெனி சிப்பந்திகளின் அட்டகாசங்களும் அக்கிரமங்களும் ஐரோப்பாவுக்கு எட்டின. எனவே, ஹாலந்து அரசாங்கம், கிழக்கு இந்தியத் தீவுகளின் நேரடி நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது. அப்படியும் நிலைமை சீர்திருந்த வில்லை.

இதே சமயத்தில் கிழக்கிந்தியத் தீவுகளில், மக்களிடையே தேசிய உணர்ச்சி பெருக ஆரம்பித்தது. ஜாவானிய மக்களிடையே புது கருத்துக்கள் பரவலாயின. சோஷலிஸம் கம்யூனிஸம் ஆகிய கொள்கைகள் மக்களைச் சிந்திக்க வைத்தன. விடுதலை இயக்கம் பரவியது.

பிரிட்டனைப்போல் டச்சு ஏகாதிபத்தியமும் அவ்வப்போது சிற்சில சீர்திருத்தங்களை அளிக்க முன் வந்தது. இதனால் மக்களின் சுதந்திரதாகம் வளர்ந்ததே தவிர, குறையவில்லை அதோடு அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனிபோன்ற நாடுகளும் கிழக்கிந்தியப் பகுதி வியாபாரத்தில் அக்கறை கொண்டன.

இந்தச் சமயத்தில்தான் இரண்டாவது உலக யுத்தம் ஏற்பட்டு, ஹாலந்து, நாஜி ஆக்கிரமிப்புக்குப் பணிய நேர்ந்தது. சில மாதங்களுக்கெல்லாம் நேச நாடுகளை எதிர்த்து ஜப்பான் கிழக்கே போரில் இறங்கியது. கிழக்கிந்தியத் தீவுகளைத் தாக்கி எளிதில் வசமாக்கிக் கொண்டது. கிழக்கு இந்தியத் தீவு மக்களை டச்சு ஆதிக்கத்திலிருந்து விடுவித்து, சுதந்திரம் வழங்குவதாகவும் பிரசாரம் செய்தது.

யுத்தத்தில் ஜப்பான் தோல்வி அடைந்தவுடன், நேச நாடுகள் இந்தத் தீவுகளை மீண்டும் ஹாலந்திடமே ஒப்படைக்கத் திட்டம் வகுத்தன. இதை எதிர்த்து இந்தோனேஷிய மக்கள் தங்களை ஒரு சுதந்திரக் குடியரசு என்று பிரகடனப் படுத்திக் கொண்டனர்.

டச்சுக்காரர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டி, மீண்டும் அத்தீவுகளில் ஆதிக்கம் செலுத்த ப்படையை அனுப்பினர். ஆனால் குடியரசாகி விட்ட இந்தோனேஷியாவின் சுதந்திரவீரர்கள்பணியமறுத்து பலமாகப் போரிட்டார்கள். வெற்றி பெறமுடியாது என்று கண்ட டச்சு சர்க்கார் பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொண்டது.

1949-ல்தான் இந்தோனேஷியா, டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்து முழு விடுதலையும்

## "ஆரம்பக் கல்வி"

ஆபீஸ்.

**94–95, புதுத்தெரு,**

**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of Income

வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.


பெற்றது. விடுதலை இயக்கத்தில் முன் நின்று நடத்திய இந்தோனேஷிய தேசியக் கட்சித் தலைவரான டாக்டர் சுகர்ணோ, சுதந்திர இந்தோனேஷியாவின் முதல் ஜனாதிபதியானார். டாக்டர் ஹாட்டா பிரதமர் பதவி யேற்றார்.

அன்று முதல் இந்தோனேஷியா வியக்கத்தக்க வகையில் முன்னேறி வருகிறது. இந்தியாவைப் பின்பற்றி எந்த ராணுவக் கூட்டிலும் சேராமல் மேற்கு கிழக்கு அரசியல் போட்டியில் நடுநிலைமை வகிக்கிறது.

—"ஆனந்த விகடன்"

---

22-ம் பக்கத் தொடர்ச்சி

பழக்கப்படுத்திக் கொண்டால், ஒரு ஆண்டிற்கு 365 மணி நேரம் நமக்கு அதிகம் கிடைக்குமல்லவா?

இழந்த பணத்தை மீண்டும் பெறலாம். இழந்த பலத்தை மீண்டும் பெறலாம். ஆனால் இழந்த காலத்தை எவரும் எக்காலத்திலும் பெற முடியாது. ஆதலால் இளைஞனே, உனது காலத்தைச் சிறிதும் வீணாக்காதே. நீ உலகில் தோன்றுவது ஒரு முறையே. உனது தோற்றமும், வாய்ப்பும், சிந்தனையும் கொண்ட இன்னொருவன் இனிப் பிறப்பதில்லை. நீ உனது உயிரை இழப்பதற்குள் உனது முத்திரையை இவ்வுலகில் பதித்துவிடு.

—நல்வழி

# இடம் பெறாத இலக்கியம்

அ. மு. பரமசிவானந்தம்

இந்த இலக்கியம் கல்லா மக்கள் வெறும் பொழுது போக்குக்காக மட்டும் பாடப் படும் ஒன்று எனப் பலர் நினைக்கின்றனர். ஆய்ந்து பார்ப்பின் இந்த வாய்மொழி இலக்கியத்தின் பெருமை நன்கு விளங்கும்.

எழுதப்பெறா இலக்கியம் தமிழில் மொழி வரலாறு வரையறுக்க முடியாத காலந்தொட்டே இருந்து வருகின்றது. தமிழ் நாட்டின் தொன்மையை விளக்குவது தொல்காப்பியமாகும். ஏட்டில் எழுதப்பெற்ற இலக்கியங்களோடு இந்த எழுதப்பெறா இலக்கியமும் நாட்டில் உலவிற்று என்பதைத் தொல்காப்பியரும், அவர் நூலுக்கு விளக்கந்தந்த உரையாசிரியர்களும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்கள். 'பொருளொடு புணராப் பொய்மொழி', 'பொருளொடு புணர்ந்த நகைமொழி', 'பிசி', 'பண்ணத்தி', 'வாய்மொழி' என்றெல்லாம் தொல்காப்பியம் இந்த இலக்கியத்தை எடுத்துக் காட்டுகின்றது.

'பொய்மொழி' கண்டிக்கத் தக்கதாயினும் அதுவே பொருளோடு புணராததாயின் இலக்கியமாகும் முறையை நன்கு அறிகின்றோம். அப்படியே வேடிக்கைக் கதைகளும் விடுகதைகளும் (பிசி) பிற நாடோடிப் பாடல்களும் (பண்ணத்தி) அக்காலத்தில்—இன்றைக்கு இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்தன என்பது தேற்றம்.

## பழந்தமிழ் இலக்கியங்களில்...

எத்தனையோ கிராமச் சூழலும் நானில இயற்கை வாழ்வும் நம் முன் காட்டப்பெறினும், கடைச் சங்ககால வஞ்சியும், காஞ்சியும், புகாரும், மதுரையும் அன்றைய மனிதன் இயந்திர வாழ்வை மேற்கொண்டதைக் காட்டுகின்றனவே. எனவே அந்த இயந்திர வாழ்வுக்கு இடையிடையே இளங்கோவடிகள் இயற்கை வாழ்வு வாழ்ந்த பரதவர்—வேடுவர்—ஆயர்—குறவர் முதலியவர்களை நம் முன் கொண்டு வந்து நிறுத்தி, அவரவர் தம் 'வாய்மொழி இலக்கியங்களை' வண்ணப் பாடல்களாக நமக்கு வடிக்கிறார். அவர் தம் வரிப்பாடல்களும் குரவைப் பாடல்களும் கூடி ஆடிப்பாடும் வாய்மொழி இலக்கியங்களாக இருந்து, அவராலேயே ஏட்டில் இடம் பெற்றவையாக வேண்டும். எனவே, நாட்டிலே வாய்மொழி இலக்கிய வழக்காறு மங்குகின்றது என்றால் மனிதன் செயற்கையை நாடிச் செல்லுகிறான் என்பது பொருள் போதும்.

இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் எத்தனையோ வகையான 'வாய்மொழி' இலக்கியங்கள் தோன்றலாயின. வழிநடைப் பதம், சிந்து, நாடக மரபு, நலுங்குப் பாட்டு, கதைப்பாட்டு முதலி

யன இடைக்காலத்தில் எல்லை யின்றி விரிந்தன. கடைச்சங்க கால இலக்கியமாகிய பரிபாடலில் ஆடற்பாணியும் வழிநடைப் பாணியும் எழுதப்பெறு இலக்கியங்களாக உள்ள தன்மையைக் காண்கிறோம்

## எழுதாத இலக்கியத்தின் பெருமை

இலக்கியம் கல்லாமாக்கள் வெறும் பொழுது போக்குக்காக மட்டும் பாடப்படும் ஒன்று எனப் பலர் நினைக்கின்றனர். ஆய்ந்து பார்ப்பின் இந்த வாய்மொழி இலக்கியத்தின் பெருமை நன்கு விளங்கும். எனது இளமைக் காலத்திலே நான் கேட்டறிந்த சில இருசொல் முச்சொல் அலங்காரங்களை எண்ணிப்பார்க்கும் போது அவற்றின் சிறப்பும் சிலேடைப் பொருள்திறனும் பிற உண்மைகளும் விளங்குவதை இன்று அறிய முடிகின்றது.

'ஆலிலை பழுப்பதேன்?
'இராவழி நடப்பதேன்?

இவை இரண்டும் கேள்விகள். இரண்டிற்கும் ஒரே பதில் சொன்னால் எத்துணை சிறக்கும்! சொல்லுகிறார் ஒருவர். யார்? இந்த ஆசிரியர் பெயர் தாம் அறிய முடியாதே! எனவே ஒரு நல்ல அறிஞர் அவர். என்ன சொன்னார்? 'பறிப்பாரற்று' என்பதே பதில். ஆம், ஆலிலை பறிப்பார் இல்லாதகாரணத்தாலே பழுத்து விடுகின்றது வழியில். பறிக்கும் கள்வர் இல்லாத காரணத்தாலே அனைவரும் நடக்கின்றனர். இவ்வாறு இரு பொருள்பட விளக்கும் திறன் சிறந்ததல்லவா!

இப்படியே,

'ஆட்டுக்கறி கசப்பதேன்?'
'ஆண்டி பட்டினி கிடப்பதேன்?'

என்ற இரண்டு கேள்விகளுக்கும் 'பிச்சை எடாமல்' என்ற பதில் உண்டு. இப்படியே,

'எருக்கிலை பழுப்பதேன்?'
"எருமைக் கன்று சாவதேன்?'

என்ற இரு வினாக்களுக்கும் 'பாலற்று' என்பது பதில். இவற்றை விரித்துப் பொருள் காணும்போது நம்மை நாம் மறக்கிறோமல்லவா! இப்படியே முச்சொல் அலங்காரங்கள். இவற்றுள் ஒரு சில அச்சிலும் வந்து, மெல்ல மறுபடியும் மறைந்து கொண்டிருக்கின்றன என நினைக்கிறேன். இவையெல்லாம் இன்று வழக்கு வீழ்ந்து விடுமோ என்று அஞ்சத்தக்க வகையில் உள்ளன. இவ்வாறே எத்தனை பழமொழிகளும், அவற்றின் அடியெழுந்த பாடல்களும் சிற்சில இடங்களில் வாழ்ந்து மறைகின்றன. எழுத்து வாசனையறியாத—கல்லாத குக்கிராமங்களில் இருக்கும் இளையரும் முதியரும் இதுபோன்ற வாய்மொழி இலக்கியங்களை இன்றும் பாடிக்கொண்டே இருக்கின்றனர். கருத்தும் காதும் வேண்டும் கேட்பதற்கு!

## விடுகதைகளும் வாய்மொழி இலக்கியமே

விடுகதைகளைப் பற்றித் தொல்காப்பியத்திலேயே குறிப்பு வருகின்றது. இதுவும் ஒருவகை வாய்மொழி இலக்கியமேயாகும். உயர்ந்த வேதாந்தக் கருத்தில்

தொடங்கி, எளிய உலக வாழ்க்கைப் பொருள் வரையில் இந்த விடுகதைகளில் இடம் பெறக் காண்கின்றோம். இந்த இலக்கியமும் இன்று நாட்டில் அருகியே வருகின்றது. காரணம் நாம் மேலே கண்டதுதான். மனிதன் இயந்திரமாக மாறிக்கொண்டு போவதுதான் இதற்குக் காரணம்.

இவைகளைத் தவிர்த்து காவடிச் சிந்து, புலந்திரன் களவு, அல்லி அரசாணி மாலை, நொண்டி கடி மாலை முதலிய ஒரு சில, சென்ற இரண்டொரு நூற்றாண்டுகளில் வந்தன. முருகன் சன்னதிக்கு அடியவர்தாம் வேண்டும் வரம் பெற்றபின் காணிக்கை செலுத்த க்காவடி எடுத்துக்கொண்டு செல்லும் மரபு இன்றுமுள்ளது. அவ்வாறு செல்லும்போது அவர்கள் பாடிக்கொண்டு செல்லும் ஆரவாரம் செந்தில், பழனி, தணிகை முதலிய முருகன் திருநகரங்களில் இன்றும் ஒலிக்கின்றது அதையே 'காவடிச்சிந்தாக' அழகுபடப் பாடி வைத்தனர். புலந்திரன் களவு போன்றவை கதைக்கூறுகளை மையமாகக்கொண்டு, கல்லாத மக்கள், எழுத்தறியா மக்கள்—சொல்லிச் சொல்லி உணர்ந்து மகிழத்தக்க வகையில் ஆக்கப்பெற்றன. அதன் பின் வந்த தேசிங்குராஜன் கதை போன்றவைகளும் இந்த வகையில் இணைக்கப்பெற வேண்டுபவையே. இவற்றுள் சில அச்சிடப்பெற்றுள்ளன.

### தாலாட்டும் ஒப்பாரியும்

இவைகளைத் தவிர்த்துக் குழந்தையைத் தாலாட்டுவதும் கையற்றுக் கதறி அழுவதும்கூட 'வாய்மொழி' இலக்கியமாகக் கொள்ளத்தக்கவையே. இழவு வீட்டில் பெண்கள் கூடிக் கட்டித் தழுவிக் கதறிப்பாடும் பாட்டுக்களும் எதுகை மோனை நயத்தோடு கருத்தாழமும் கொண்டு விளங்கவில்லையா!

### கூட்டுச் சமுதாயம்—கூட்டுப் பாடல்கள்

இனி, இந்த வாய்மொழி இலக்கியம் பாடும் வகை கண்டு அமைவோம். எங்கேயோ ஓரிரு பாடல்கள் தனிப் பட்டவரால் பாடப்படுவன என்றாலும், பெரும்பாலான பாடல்கள் கூட்டுப் பாடல்களே. இன்று கூட்டுச் சமுதாயம் காண விரும்பும் நிலையில் உள்ள நமக்கு, இந்தக் கூட்டுச் சமுதாயத்தை உருவாக்கி வளர்த்து வாழவைத்து வரும் 'வாய்மொழி இலக்கியம்' இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இவ்வாறு கூடிப்பாடும் சிறப்பினையெல்லாம் தொகுத்துத் தான் பாரதியார்,

"ஏற்றநீர்ப் பாட்டின் இசை
யினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார்'குக்கு'வெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார் தம் சுவை
மிகுந்த பண்ணையிலும்
பண்ணை மடவார் பழகுபல
பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்
கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்"

தம் நெஞ்சைப் பறிகொடுத்ததாகக் கூறுகிறார்.—"கிராம நலம்"

# செய்திச் சுருள்

## வரலாற்றில் புகழ் பெற்ற மயில் சிம்மாசனம்

### உலகக் கண்காட்சிக்கு அனுப்பிவைக்கப்படலாம்

மாண்ட்ரீல், மே. 27—தற்போது ஈரான் வசம் இருந்து வரும், சரித்திரப் பிரசித்தி பெற்ற மயில் சிம்மாசனம் 1967–ம் வருஷத்தில் கனடாவைச் சேர்ந்த மாண்டரீலில் நடைபெறவிருக்கும் உலக வர்த்தகக் கண்காட்சியில் வைக்கப்படும் சாத்யக்கூறு உள்ளது.

இதை ஈரான் மன்னர் அண்மையில் நிருபர்களிடம் குறிப்பிட்டார்.

மயில் சிம்மாசனத்தை இந்தக் கண்காட்சியில் ஈரான் பிரிவில் வைக்கும் உத்தேசம் உண்டா என்று ஒரு நிருபர் கேட்டபோதே ஈரான் மன்னர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சிம்மாசனம் உள்ளிட்ட ராஜபரம்பரை ஆபரணங்கள் தம் தந்தையின் காலத்தில் ராஜாங்க கஜானாவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், சொல்லப்போனால் அவை நாட்டின் பொருளாதாரத்துக்கு ஆதாரமாகவைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். நாட்டை விட்டு இதை வெளியில் அனுப்பி வைப்பது சட்டப்படி அனுமதிக்கக் கூடியதுதானா என்பது தமக்குத் தெரியாது என்றும், ஆனால் அப்படிச் செய்ய முடியலாம் என்றும் அவர் கூறினார்.

"மோனா லிஸா ஓவியத்தைப் பிரெஞ்சுக்காரர்கள் அரிய பொக்கிஷமாக வைத்துப் பாதுகாத்து வருகிறார்கள். அப்படியிருந்தும் காட்சியில் வைப்பதற்காக அதை அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறார்கள் அல்லவா; மயில் சிம்மாசனத்தைப் பொருத்த வரை, அது களவு போகும் சாத்தியம் குறைவு தானே? அது மிக மிகப் பளுவானதாயிற்றே!' என்று வேடிக்கையாக ஈரான் மன்னர் கூறினார்.

## கெட்டிக்கார ஏழை மாணவருக்குச் சிறப்புக் கல்லூரி

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மிகுந்த கெட்டிக்கார மாணவர்களுக்காகச் சிறப்புக் கல்லூரியொன்று பஞ்சாபில் அமையும். அவர்களின் கல்வி, தங்குமிடம், உணவுச்செலவு அனைத்தையும், அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும்.

முதற்கண் கெட்டிக்காரர்களான 50 ஏழை மாணவர்களைச் சில நல்ல கல்லூரிகளில் அரசாங்கச் செலவில் படிக்க வைக்க மாநில அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. படிப்படியாக அந்த எண்ணிக்கை 200 ஆக உயர்த்தப்

படும். பின்னர் அவர்களைப் போன்ற மாணவர்களுக்காக ஒரு கல்லூரி அமைக்கப்படும்.

### "ரெடிமேட்" சிறைச்சாலை

மே 21—"ரெடிமேட்" சிறைச்சாலைகள் மேற்கு ஜெர்மனியிலுள்ள கோலோன் நகரில் தயாரிக்கப்படுகின்றன. இந்தச் சிறைச்சாலையின் ஒவ்வொரு அறையும் 16 அடி நீளமும் 8 அடி அகலமும் கொண்டது. ஒவ்வொரு அறையிலும், கழுவு மிடம், காற்றோட்ட ஜன்னல், விளக்கு, ரேடியோ எல்லாம் அமைந்துள்ளன. கைதிகள் கன்னம் வைத்தோ உடைத்தோ ஓடிவிடாதபடி அறைச்சுவர் கனமாக உள்ளது. இதுபோன்ற சிறைச்சாலை அறைகளை ஆயத்தமாகத் தயாரித்து வைத்திருக்கிறார்கள்.

### இந்தியாவில் 25 சத விகித குழந்தைகளுக்கு ஊட்டக் குறைவு

லக்னோ, மே, 25—இந்தியாவில் பொதுவாக புரதச் சத்துக் குறைவினால் 25 சதவிகிதக் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கவுன்சிலும், உலக சுகாதார ஸ்தாபனமும் நடத்திய ஒரு சர்வேயிலிருந்து தெரிய வந்துள்ளது.

இச் சர்வே இந்தியாவில் சுமார் 12 ராஜ்யங்களில் நடத்தப்பட்டு 4,500 குழந்தைகள் ஆராயப்பட்டனர்; சத்துணவு இல்லாததால் உண்டாகும் குவாஷிோர், மாராஸ்மஸ் ஆகிய இரு நோய்களும் பெரும்பாலான குழந்தைகளிடம் இருந்ததாக அச் சர்வேயில் தெரிய வந்தது.

ஆராயப்பட்ட குழந்தைகளில் 30 சதவிகிதம் பேருக்கு சீரம் அல்புமின் குறைந்த அளவில் இருப்பதாகத் தெரிய வந்தது.

பெருவாரியான குழந்தைகளுக்கு ஏ வைட்டமின், பி—காம்ளக்ஸ், கால்ஷியம் ஆகியவை இருப்பதாகவும் தெரிய வந்தது.

சத்துணவுப் பொருட்களின் அதிக விலை காரணமாகவும், தவிர போஷாக்களிக்கும் பால், முட்டை, பழம், காய்கறிகள் ஆகியவை போதிய அளவில் கிடைக்காத காரணத்தால் அரிசி, அல்லது கோதுமை, அல்லது சோளம் ஆகியவற்றை மட்டுமே உண்பதாலும் போஷாக்குக் குறைவு உள்ளதாகக் கருதப்படுகிறது.

### ஜெர்மனி பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சி

மேற்கு ஜெர்மனியிலுள்ள பழம் பெரும் பல்கலைக் கழகங்களில், ஒன்றான ஹைடல்பர்க் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் இந்தியா — ஆசியா கழகம் நிறுவப்பட்டிருக்கிறது. வளர்ந்து வரும் நாடுகளுக்கு இக்கழகம் கல்வி உதவி அளிக்கிறது. இக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சித் துறை, தமிழ், இந்தி, உருது, வங்காளி ஆகிய மொழிகளில் ஆராய்ச்சி நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்கிறது. இக் கழகத்தின் மற்றொரு பிரிவான 'இந்தியா — ஆசியா கல்லூரி' யில் ஆசிய நாடுகளுக்குப் பணி

யாற்றச் செல்லும் ஜெர்மன் அறிஞர்கள், ஆசிரியர்கள், நிபுணர்கள் ஆகியோருக்குத் தனிப்பயிற்சி அளிக்கிறது. இவர்களுக்குப் பல்வேறு இந்திய மொழிகள் போதிக்கப்படுகின்றன.

கல்வி போதனை, ஆராய்ச்சி ஆகிய துறைகளில் உதவும் இந்தக் கழகத்தில் பல துறைகள் உள்ளன. இவற்றில் 10 துறைகள் இப்பொழுது முழு வீச்சில் இயங்கி வருகின்றன. இக் கழகம் சமீபத்தில்தான் தொடங்கப்பட்டது. இதற்கு "யுனெஸ்கோ" உதவி அளிக்கிறது மேற்கு ஜெர்மனியிடம் உதவி பெறும் இந்திய மற்றும் ஆசிய நாடுகளின் தேவைகள் குறித்து இக்கழக நிபுணர்கள் நேரில் சென்று ஆராய்ந்து, அந்த நாடுகளுக்கு ஏற்றபடி எவ்விதமான உதவிகளை வழங்க வேண்டும் என்பதை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்கிறார்கள்.

## இறக்கத்தில் இன்பம் கண்ட "உயர்ந்த" மங்கை

லண்டனில் — 20 வயதான ஆன் ரோஸ்டன் வீட்டு வாசற்படியிலிருந்து ஒவ்வொரு தடவையும் தெருவில் அடியெடுத்து வைத்தபோதெல்லாம் அவள் துயரத்தால் மனம் நொடிந்து போனாள். "நெட்டைப் பனை மரம்" போல 6 அடி 7 அங்குல உயரம் இருந்த அவளைத் தெருவில் போகிறவர்கள் ஏற இறங்க அதிசயமாகப் பார்த்த போது அவளுக்கு மனம் நோகாமல் இருக்குமா?

அவளுடைய கட்டுமீறிய உயரம் அவளுக்கு ஓயாத கவலையை அளித்து வந்தது. செஷயரில் ஹைறட் என்னுமிடத்தில் வசிப்பவளான அவள் உயரத்தைக் குறைத்துக் கொள்வது பற்றி ஒரு நாள் டாக்டரின் ஆலோசனையை நாடினாள். அவரும் அதற்கு ஏற்பாடு செய்தார்.

ஆஸ்பத்திரியில் 7 மாத காலம் தங்கி தொடர்ச்சியாகப் பல ஆப்ரேஷன்களைச் செய்துகொண்ட பிறகு ஆன் இப்போது சந்தோஷமாக இருக்கிறாள். "இப்போது நான் 6 அடி ஒரு அங்குல உயரம் தான் இருக்கிறேன்" என்று தோழிகளிடம் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறாள். உயரத்தில் 6 அங்குலத்தைக் குறைத்துக் கொண்டதானது அவளுடைய வாழ்க்கையை முற்றிலும் மாற்றிவிட்டது

அவள் சொன்னதாவது:—"நான் உலகிலேயே மிக சந்தோஷமான பெண்ணாக இருக்கிறேன். இந்த ஆபரேஷன்கள் எனக்கு என்ன மகிழ்ச்சியை அளித்துள்ளன என்பது எனக்குத்தான் தெரியும். இப்போது நான் மற்றவர்களைப்போல் இருக்கிறேன். இனிமேல் நான் தெருவில் போகும்போது வழியில் போகிறவர்கள் நின்று நிதானித்து என்னை ஏற இறங்க வேடிக்கை பார்க்க மாட்டார்கள்".

டாக்டர்கள் அவளுடைய கால் எலும்புகளில் சில அங்குலத்தை வெட்டி அகற்றினர். அதற்குத் தக்கபடி கைகளின் நீளத்தையும் குறைத்தனர்.

# ஜாக்ஸன் சரிதை

ஆண்ட்ரு ஜாக்ஸன் அமெரிக்காவின் ஏழாவது ஜனாதிபதி; மக்கள் மனம் கவர்ந்த வீரர்; வேறு எந்த அமெரிக்க ஜனாதிபதியும் இவரைப்போல் இவ்வளவு கடும் போராட்டத்துக்கிடையில் இவ்வளவு நெடுங்காலம் ஆட்சி புரிந்ததில்லை. பாமரர் தலைவர் ஜாக்ஸன் போர் வீரராகவும் அரசியல் தலைவராகவும் அரசியலறிஞராகவும் அழியாப் புகழ்பெற்றார். 1767 மார்ச் 15-ல் பிறந்த அவர் 78 ஆண்டுகள் வாழ்ந்தார்.

நாட்டின் மேற்குப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஜாக்ஸனுக்கு முன்பு ஜனாதிபதியானதில்லை; ஜனாதிபதி பதவி நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்ற கருத்துக் கொண்டவரும் இவருக்கு முன்பு இல்லை. முதல் ஆறு ஜனாதிபதிகளும் பிரபுக்கள்; வர்ஜீனியா, மாஸசூஸட்ஸ் மாநிலங்களைச் சேர்ந்த பெருமக்கள். முதலில் 13 மாநிலங்களாக இருந்த நாடு 1821-க்குள் 24 மாநிலங்களாகப் பரவியது; பாமர மனிதனின் அரசியல் அதிகாரமும் வளரலாயிற்று.

1824-ல் ஜனாதிபதித்தேர்தலில், நால்வர் போட்டியிட்டனர். ஜாக்ஸனுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. ஆனால் தேர்தல் சபை வாக்குகளில் ஒருவருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆகவே தெரிந்தெடுக்கும் பொறுப்பு பிரதிநிதி சபை மேல் விழுந்தது. அது ஆடம்ஸைத் தேர்ந்தெடுத்தது. தாங்கள் நியாயமாகத் தேர்ந்தெடுத்தவரைப் பிரதிநிதி சபையார் அழித்தெழுதி ஏமாற்றி விட்டார்கள் என்று பாமர மக்கள் கொதித்தார்கள். நான்காண்டு கழித்து அடுத்த தேர்தலில் அவர்களுக்கு மற்றொரு முறை வாய்ப்பு கிடைத்தது; இத்தடவை மக்கள் வாக்குகளிலும் தேர்தல் சபை வாக்குகளிலும் ஜாக்ஸன் பெரும்பான்மை பெற்றார். மறுபடி 1832லும் அவர் வென்றார்.

தேர்தல் வெற்றியோடு நிற்பவர் அல்ல ஜாக்ஸன். அவரது ஆட்சியின் முக்கியமான நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும் ஜாக்ஸன் ஆற்றல் மிளிரக் காணலாம். இன்றைய ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் அவரே. அமெரிக்கத் தேசியத்தை ஆதரித்துப் போராடியவரும் அவரே. ஜனாதிபதிக்குரிய கடமைகளுக்கும் அதிகாரங்களுக்கும் அவர் புது முறையில் விளக்கங் கூறினார். அவருக்கு முன்பிருந்த ஜனாதிபதிகள் தங்கள் அதிகாரங்களைப் பற்றித் தீவிரமாக இல்லை. ஆனால், அமெரிக்க ஜனாதிபதி ஆற்றல் மிக்கவராக இருந்து ஊக்கமும் தலைமையும் விளங்கச் செயலாற்றினால்தான் அமெரிக்க

ஆட்சிமுறை திறம்பட நடக்க முடியும் என்றார் ஜாக்ஸன்.

வட, தென் கரோலினா எல்லைப் புறத்தில் வந்து குடியேறிய ஏழை அயர்லாந்து மக்கள் மரபில் தோன்றியவர் ஜாக்ஸன். படிப்பு மிகக் குறைவு. பதின்மூன்றாம் வயதில் பட்டாளத்தில் சேர்ந்து பிரிட்டனுக்கு எதிராகப் போர் புரியலானார். சண்டை முடிந்ததும், சட்டம் படிக்கலானார் ஜாக்ஸன் 1787–ல் வழக்கறிஞரானார்.

ஆண்ட்ரு ஜாக்ஸன் 35–வது வயதில் டென்னஸி மாநிலக் குடிப் படையில் மேஜர் ஜெனரல் ஆனார். 1812–ல் பிரிட்டனோடு நடந்த போரில் ஜாக்ஸன் திறமை நன்கு விளங்கிற்று. தென் மேற்கில் சிவப்பிந்தியரின் கிளர்ச்சிகளை அவர் ஒடுக்கினார். 1851 ஜனவரி 8–ம் தேதி, நியூ ஆர்லியன்ஸ் நகரில் பிரிட்டிஷ் படைகளை அவர் தோற்கடித்தார். அப் போரில் அமெரிக்கப் படையினர் பெரும் சண்டை ஒன்றில் வெற்றி பெற்றது இந்த ஓர் இடத்தில் தான்.

ஜாக்ஸன் ஜனாதிபதியானதும் செய்த முதல் பெரிய வேலை, மத்திய ஆட்சியின் வேலைகளைப் புது முறையில் வழங்கியதாகும். அதனை அவரும் அவர் ஆதரவாளர்களும் சீர்திருத்தம் என்றனர்; எதிரிகள் அது "கொள்ளையைப் பங்கிடுதல்" என்றனர். அதன் விளைவு என்னவாயிருப்பினும், ஜாக்ஸன் கருத்து தெளிவாகவே இருக்கிறது. பதவியில் இருப்பதும் அலுவல் பார்ப்பதும் ஒருவகை மக்களுக்கே ஏக போகம் என்று தோன்றிய முறையை ஒழித்து, பாமர மக்களும் அமெரிக்க அரசாங்கத்தில் வேலை பார்க்கலாம் என்று வழி வகுப்பதே அவர் நோக்கமாகும்.

பாமர மக்களின் அரசியல், சமூக, பொருளாதார ஆவல்களை நிறைவு செய்ய அதன்பின் பல நடவடிக்கைகள் வந்தன. இவற்றில் எல்லாம் மிகப் பெரியது பாங்க் ஆப் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் என்னும் தனியார் ஆதிக்கத்திலுள்ள ஒரு லேவாதேவி நிலையத்தை எதிர்த்து ஜாக்ஸன் நடத்திய போராட்டமேயாகும். நாட்டின் செலாவணி, கடன் வசதி முழுவதிலும் இந்தப் பாங்கின் செல்வாக்கும் ஆதிக்கமும் ஓங்கியிருந்தன; இவ்வளவு நிதி ஆதிக்கம் தனிப்பட்டவர் கையில் இருப்பது ஜனநாயகக் கொள்கைக்குப் பொருத்தமாயில்லை என்று நினைத்தார் ஜாக்ஸன். பாங்கின் சாசனத்தைப் புதுப்பித்துக் கொடுக்கும் மசோதா வந்தபோது, ஜாக்ஸன் அதில் கையொப்பமிட மறுத்து விட்டார். அப்போது அவர் சொன்னார்:

"பணமும் அதிகாரமும் படைத்தவர்கள் பெரும்பாலும் அரசாங்கத்தின் சட்டங்களைத் தங்கள் சுயநலமான காரியங்

களுக்கே உதவும்படிச் செய்வது வருந்தத் தக்கது...சட்டங்களின் நோக்கம்....செல்வரை மேலும் செல்வராக்குவதும் அதிகார முள்ளவரை மேலும் அதிகார முள்ளவராக்குவதுமாக அமையும்போது, அத்தகைய நலன்களைத் தேடிப் பெறுவதற்கு நேரமும் வாய்ப்பும் இல்லாத விவசாயிகள், மெக்கானிகருகள், தொழிலாளர்கள் முதலான சமுதாயத்தின் எளிய மக்கள் தங்கள் அரசாங்கத்தின் அநீதி குறித்து முறையிடுவது அவர்கள் உரிமையேயாகும்."

அன்று அவர் மேல் ஏற்பட்ட கோபமும் வெறுப்பும் எவ்வாறாயினும், ஜாக்ஸன் பெயர் வரலாற்றிலிருந்து என்றும் மறையாது. "இது தங்கள் நாடு. இது தங்கள் அரசாங்கம் என்ற அமெரிக்க மக்களின் அசைக்க முடியாத உறுதியை" அவர் புலப்படுத்தினார் என்கிறார் வரலாற்றறிஞர் நூலாசிரியர் ஆர்தர் ஷ்லஸிங்கர்.

"அமெரிக்கன் ரிப்போர்ட்டர்"


# புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி. B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# வள்ளுவர் உவமை

தி. சுந்தரம், பி. காம்.

உலகப் பெரும் புலவர்கள் சொல்லழகு, பொருளாழம், உயர்ந்த நடை முதலியவற்றில் சிறந்து விளங்குவதைப் போன்றே உவமையணியை நயம்பட எடுத்தாள்வதிலும் தலைசான்று இலங்குகின்றனர். இவர்களுள் உவமைகளைக் கற்பார் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வண்ணம் எடுத்தாள்வதில் வள்ளுவர் பெருமான் முன்னணியில் நிற்பது நினைந்து மகிழத்பாலது. செல்வம் நிலைத்து நிற்காது என்பது எல்லாரும் அறிந்த உண்மைதான். இன்று மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் நாளை கண்டார் வெறுத் தொதுக்கும் நிலைக்குத் தாழ்ந்து விடுதல் வாழ்க்கைப் புதுமைகளில் ஒன்றாகும். இதைப் பல புலவர்கள் பலவாறு ஒப்புமை கூறி விளக்கியுள்ளனர். என்றாலும் வள்ளுவர் பெருமான் போன்று மிகப் பொருத்தமாகவும் உளம் கொள்ளவும் இதை யாரும் விளக்கி இருப்பதாகத் தெரியவில்லை.

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

என்ற குறளில் உயர்ந்த நிலையில் இருந்து தாழ்ந்தவரைத் தலையில் இருந்து உதிர்ந்த கூந்தலுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளமை எண்ணுந்தோறும் இன்பம் அளிக்க வல்லது. கூந்தல் தலையில் நிலை பெற்று இருக்கும் வரை அதற்குக் கிடைக்கும் சிறப்பு வேறெந்த உறுப்புக்கும் கிடைப்பதில்லை. என்றாலும் அது நிலை பெயர்ந்து விழுந்தவுடன் அதைப்போன்று இழிவாக நடத்தப்படும் உறுப்பும் வேறெதுவும் கிடையாது. பெருஞ் சிறப்புக்கு உள்ளான கூந்தல் உதிர்ந்த அக்கணமே மறைவான ஒதுக்குப் புறத்தில் தூக்கி எறியப்படுகிறது. அதைப் போற்றி வளர்த்தவர் அதைப்பற்றிப் பிறகு ஒருகணமும் சிந்திப்பது இடையாது. அதைப்போன்றே, செல்வம் சிறந்து உயர்ந்து விளங்கும் வரை ஒருவரை மக்கள் அனைவரும் உறவும் நட்பும் பாராட்டிப் போற்றுகின்றனர். ஆனால் அவர் செல்வம் இழந்து, நிலை தளர்ந்து, வறுமைவாய்ப்பட்டவுடன் அவர் அருகில் நெருங்கவும் மக்கள் தயங்குகின்றனர். இது உலக இயல்பு. இதை வள்ளுவர் பெருமான் அழகுற உவமித்துள்ளதைப் போன்று வேறெவரும் ஒப்பிட்டுக் கூறவில்லை என்று துணிந்து கூறலாம்.

இனி, உவமையோடு நகைச்சுவையையும் கலந்து அளிப்பதில் வள்ளுவருக்கு நிகர் அவரே தான். எடுத்துக்காட்டாகக் கீழ் மக்களைப் பற்றிக் கூற வந்த விடத்து,

'மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்'

என்று நகைச்சுவையுடன் அழகுற உவமித்துள்ளார். கீழ்மக்களைத் தாழ்ந்த விலங்குகள் கொடிய அரக்கர்கள் முதலியவற்றோடு ஒப்பிட்டுக் கூறுவதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் கயவர்களுக்கு மக்களையே உவமையாகக் கூறியது மிகப் புதுமையாகும். இதில் கயவர்கள் மனிதர்களே என்று கூறும் நகைச்சுவையோடு, அவர்கள் உருவத்தில் தவிர வேறு எந்த வகையிலும் மக்களாகக் கருத அருகதையற்றவர்கள் என்ற அழகிய கருத்தும் அடங்கியிருப்பதைப் பார்க்கிறோம்.

அடுத்து, காமத்துப் பாலில் வள்ளுவர் கையாளும் ஒரு உண்மையை மட்டும் இங்கு எடுத்துக் கூறுதல் பொருத்தமெனத் தோன்றுகிறது. தமிழ்ப் பெண்டிர் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு நற்பண்புகளை அணிகலனாகக் கொண்டவர். அன்பும் பொறுமையும் சிறந்தவர். கற்பை உயிரினும் சிறப்பாக மதிப்பவர். கணவனைத் தெய்வத்தினும் உயர்வாகப் போற்றுபவர். எனினும் மானமும், வீரமும் சிறந்தவர்களாதலின் கணவன்மார் பிழை புரிகையில் அதைக் கண்டு அவர்கள் சினம் உறுதல் இயல்பேயாகும். சான்றாக, தன்னைப் பிரிந்து அடிக்கடி பரத்தையரிடம் சென்று உறையும் கணவனைப் பற்றி, அவனில்லாத போது நினைத்துப் பார்க்கும் தலைவி சினம் உறுகிறாள். கணவன் வந்தவுடன் அவனுக்குத் தக்க தண்டனை விதிக்கப் போவதாகத் தோழியிடம் சீற்றத்துடன் கூறுகிறாள். கணவன் வந்தவுடன் தனது வாக்குறுதியைச் செயலாக நிறைவேற்றுவதற்கு மாறாக அவனை அன்புடன் வரவேற்கிறாள். தலைவியின் முன்னுக்குப் பின் முரணான இச்செய்கையைப் பற்றிப் பிறகு தோழி வினவும்போது தனது நிலையை அவளுக்கு எடுத்துக் கூறுதல் எந்தத் தலைவிக்கும் எளிதன்று. ஆயினும் இந்த மன நிலையை ஓர் அழகிய உவமையின் மூலம் வள்ளுவர் பெருமான் எளிதாக விளக்கித் தோழியை மட்டுமின்றி நம்மையும் மனநிறைவு கொள்ளச் செய்துவிடுகிறார்.

'எழுதுங்கால்' கோல்காணாக் [கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து'

என்னும் குறளில் அாரத்தே உள்ள போது பார்வைக்குத் தெளிவாகத் தெரியும் மை தீட்டுக் கோல் கண்ணை மிக நெருங்கி அஞ்சனம் எழுதும் போது பார்வைக்குப் புலப்படாமல் மறைந்து விடுவதைப் போன்று, கணவன் பிரிந்து இருந்தபோது பெரிதாகத் தோற்றமளித்த அவனது பிழைகள் அவன் தலைவியை நாடி வந்தபோது அவள் எண்ணத்தினின்றும் மறைந்து விடுகின்றன என்பதைத் தலைவி வாயிலாக ஈடும்

47ஆம் பக்கம் பார்க்க

# "டாலர்" பருப்பு!

400 வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் குடியமர்ந்த போர்ச்சுக்கீசியர், இந்நாட்டுக்குக் கொண்டுவந்த முந்திரிக்கொட்டை இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் குறிப்பாய் டாலர் நாணயம் சம்பாதிப்பதில் முக்கிய இடத்தை வகித்து வருகிறது

1959—ல் மொத்தம் சுமார் ரூ. 15·18 கோடி மதிப்புக்கு இந்தியாவிலிருந்து முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வருடம் முதல் ஆறு மாதங்களில் இது ரூ. 9·32 கோடியை எட்டியிருக்கிறது. வெளிநாடுகளில், முக்கியமாய் அமெரிக்காவில், முந்திரிப் பருப்பு மிகவும் பிரபலமடைந்திருக்கிறது. சிற்றுண்டி உணவுக்கும், சாக்கலேட் தயாரிப்புக்கும் இது உபயோகப்படுகிறது.

சுமார் 35 நாடுகள் இந்தியாவிலிருந்து முந்திரிப் பருப்பு இறக்குமதி செய்து வருகின்றன. அந்நாடுகளில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், கானடா, ஜெர்மனி, சிங்கப்பூர், ஹாங்காங், ஜப்பான், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை முக்கியமானவை. சென்ற வருடம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட முந்திரிப் பருப்பின் மொத்த அளவில் அமெரிக்காவின் பங்கு மட்டும் சுமார் ரூ. 10.60 கோடியாகும்.

முந்திரிப் பருப்பு ஏற்றுமதிக்காக புதிய மார்க்கெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியில் ஓரளவு வெற்றி கிடைத்திருக்கிறது. வெளிநாடுகளில் உள்ள முக்கிய நகரங்களில் நடைபெறுகிற வர்த்தகக் கண்காட்சிகளிலும், இந்திய வர்த்தக நிலையங்களிலும் முந்திரிக் கொட்டைகளும் முந்திரிப் பருப்பும் காட்சியில் வைக்கப்படுகின்றன. கவர்ச்சிகரமான பிலாஸ்டிக் பைகளில் முந்திரிப் பருப்புகள் அடைக்கப்பட்ட மாதிரிப் பொட்டலங்கள் தூதராலயங்கள் மூலமாகவும், வர்த்தகப் பிரதிநிதிகள் மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன.

## ஏற்றுமதி அபிவிருத்தி

வெளிநாடுகளிலுள்ள வர்த்தகர்களுடன் தொடர்பு கொள்வதற்காக முந்திரிப் பருப்பு ஏற்றுமதியாளர்களின் வர்த்தக பிரதிநிதி கோஷ்டிகள் அனுப்பப்பட்டு வருகின்றன. சென்ற வருடம் இரண்டு கோஷ்டிகள் அனுப்பப்பட்டன. அவற்றில் ஒன்று சிங்கப்பூர், ஹாங்காங், ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் மற்றொன்று ஈரான், ஈராக், சிரியா, எகிப்து, துருக்கி, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்தன.

ஏற்றுமதி செய்யப்படுகிற சரக்குகள் உயர்தரமானவையாக இருக்கும்படி பார்த்துக் கொள்வதற்காகக் கச்சா முந்திரிக்கொட்டையின் தரக் கட்டுப்பாடுத் திட்டமும், கப்பலில் ஏற்றப்படுவதற்கு முன்னால் தரப் பரிசோதனை செய்வதற்கானதொரு ஏற்பாடும் அமுல் நடத்தப்பட்டு வருகின்றன.

ஏற்றுமதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பக்குவம் செய்யப்பட்ட முந்திரிப் பருப்பை ஏற்றுமதி செய்கிறவர்கள், தாங்கள் ஏற்றுமதி செய்யும் அளவுக்குச் சமமான அளவுக்குக் கச்சா முந்திரி கொட்டையை இறக்குமதி செய்துகொள்ள லைசென்சு பெறுகின்றனர்.

அதோடு ஏற்றுமதியாளர்களுக்குச் சலுகை விலைகளில் டின் தகடுகள் சப்ளை செய்யப்படுகின்றன. சிறு சிறு சிப்பங்களில் முந்திரிப் பருப்பை ஏற்றுமதி செய்கிறவர்களுக்கு அதிக அளவில் டின் தகடுகள் ஒதுக்கிக் கொடுக்கப்படுகிறது.

## உள்நாட்டு உபயோகம்

உள்நாட்டிலுங்கூட, சமீப காலங்களில் முந்திரிப் பருப்பு வர்த்தகம் மிகவும் மும்முரம் அடைந்திருக்கிறது. சிற்றுண்டிச் சாலைகளிலும், ரயில்வே நிலையங்களிலும், உப்பிட்டு பக்குவம் செய்யப்பட்ட முந்திரிப் பருப்பு நன்கு விற்பனையாகிவருகிறது. முந்திரிப் பருப்பு பாதாம் பருப்பைப் போலவே சத்துள்ள உணவுப் பொருளாக விளங்குகிறது.

முந்திரிப் பருப்பில் 2·12 சதவிகிதம் புரதச் சத்து 46.9 சதவிகிதம் கொழுப்பும், கந்தகம். இரும்புச் சத்து. "ஏ" வைட்டமின் ஆகியவையும் அடங்கியுள்ளன.

தற்போது இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 70,000 டன் முந்திரிக் கொட்டை உற்பத்தியாவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த உற்பத்தியை இரு மடங்காக ஆக்குவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

முந்திரிப் பருப்பை பக்குவம் செய்யும் தொழிற்சாலைகள் தற்போது 200—க்கும் அதிகமாக இந்நாட்டில் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கேரளாவில் அமைந்துள்ளன.

தற்போது இந்நாட்டில் உற்பத்தியாகிற கச்சா முந்திரிக் கொட்டை இந்தத் தொழிற்சாலை

---

வாழ்வதில் நான் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் முறையாக வாழ்வதில், நான் என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

—அலெக்ஸாண்டர்.

நான் எப்பொழுதாவது ஆசிரியனானல், நான் கற்பிப்பதைவிட, கற்றுக் கொள்வதே அதிகமாயிருக்கும்.

—டெலுஸி.

களின் ஐந்து மாதத் தேவை களுக்கே போதுமானதாக இருக்கிறது. எனவே, இதற்குச் சமமான அளவுக்கு கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து கச்சா முந்திரிக் கொட்டை ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்திலிருந்து சென்னை, கேரளா, மைசூர், ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம் ராஜ்யங்களிலும் காட்டுப் பிரதேசங்களிலும் காடு அல்லாத பிரதேசங்களிலும் அதிகப்படியாக 1,05,000 ஏக்கரா நிலத்தில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

## "ஒட்டுக் கட்டுதல்"

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 'ஒட்டுக் கட்டிய" செடிகளை உபயோகிப்பதன் மூலம் கணிசமான நிலப் பரப்பில் முந்திரி சாகுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

"ஒட்டுக் கட்டும்" முறைப்படி தயாரிக்கப்பட்ட பதியங்கள் 20 மாத காலத்தில் பலனளிக்கக் கூடியவையாக இருக்கின்றன. விதை போட்டு முளைக்கும் செடி பலன் கொடுப்பதற்கு நான்கு வருடங்கள் வரை ஆகிறது

பதியம் தாய் மரத்திலிருந்து வெட்டி அகற்றப்படுவதற்கு முன்பே புஷ்பித்துக் காய்க்கும் பக்குவத்தை அடைந்துவிடும்படி செய்வதே இந்தப் புதியமுறை. அதை வெட்டி நடும்போது வேருடனும், இலைகளுடனும்கூடிய ஒரு இளஞ்செடியே கிடைத்துவிடுகிறது. இந்தச் செடிகள் தாய் மரத்தின் ஒரு பகுதியாகவே இருப்பதால் தாய்மரத்துக்குள்ள தன்மைகள் எல்லாவற்றையும் பெற்றிருக்கும். விதைபோட்டு முளைத்துவரும் செடி இவ்வாறிருக்காது.

பிரேசிலிலும் கிழக்கு ஆப்ரிக்க நாடுகளிலும் முந்திரி சாகுபடி வர்த்தக ரீதியில் நடைபெற்று வந்த போதிலும், இந்தியாவில் மட்டும்தான் முந்திரியை பக்குவம் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிலில் பயிற்சி பெற்றவர்கள் இங்கே ஏராளமாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

## பல்வேறு உபயோகங்கள்

இந்தியாவில் தற்போது முந்திரி மரம் ஒன்றுக்குச் சராசரியாக 9 பவுண்டு வீதமே முந்திரி கொட்டை கிடைக்கிறது. ஆனால் பொறுக்கி எடுத்த விதைகளை உபயோகித்து வெகு கவனமாக வளர்க்கப்பட்ட தனிப்பட்ட மரங்கள் சிலவற்றில் 100 பவுண்டுக்கு மேல் கூட கிடைத்திருக்கிறது.

முந்திரிப் பழம் மிருதுவாகவும், சாறு நிறைந்ததாகவும் இருக்கிறது. இதைப் பச்சையாகத் தின்னலாம். இதில் "சி" வைட்டமின் நிறைய இருக்கிறது. காரோடீனும் அடங்கியிருக்கிறது. முந்திரிப் பழச் சாற்றிலிருந்து மதுரமான சர்பத் தயாரிக்கலாம். இந்தச் சாறு புளிக்க வைக்கப்பட்டு மதுபானம் தயாரிக்கப்படுகிறது. வாந்தி எடுப்

பதை நிறுத்துவதற்கும், தொண்டைப் புண் இருந்தால் கொப்பளிப்பதற்கும் முந்திரிப் பழச் சாற்றை உபயோகிக்கலாம்.

முந்திரிக் கொட்டையின் மேல் ஓட்டிலிருந்து முந்திரி எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் முக்கியமானதும் உபயோகமுள்ளதுமான ஒரு வர்த்தகப் பண்டமாகும். கரும் பழுப்பு நிறமுள்ள இந்த எண்ணெய் தண்ணீர் ஒட்டாத ஒரு சாதனமாகவும், படகுகள், மீன் வலைகள், மரச்சாமான்கள் ஆகியவற்றின் மீது பூசப்பட்டுள்ள வர்ணத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு மேல் பூச்சு சாதனமாகவும் உபயோகிக்கப்படுகிறது. வார்னிஷுகள், தொழில்துறை உபயோகத் தளவரிசைக் கற்கள், சிலவகை சிமிட்டி தயாரிப்புகள், டைப் ரைட்டர் ரோலர்கள், மோட்டார் பிரேக் சாதனங்கள், பசைப் பொருள்கள், வர்ணத் தயாரிப்புக்கான பசைப் பொருள்கள், இங்கி, எண்ணெய் பூச்சுத் துணி, வர்ணங்கள், தண்ணீர் ஊறாத காகிதங்கள், அட்டை தயாரிப்பு முதலிய பல்வேறு தயாரிப்பு வேலைகளுக்கு முந்திரி எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது.

மண்ணெண்ணெய் அல்லது டீசல் எண்ணெயுடன் ஐந்து சதவிகிதம் முந்திரி எண்ணெயைக் கலந்து கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான சிறந்த பூச்சி நாசினியைத் தயாரிக்கலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

முந்திரி சாகுபடி விஸ்தீரணத்தை விஸ்தரிக்க வேண்டியதன் அவசியத்தை சர்க்கார் நன்கு உணர்ந்து இதற்கான நடவடிக்கைகளை நாடெங்கிலும் மேற்கொண்டு வருகின்றனர். கொட்டாரக்கரா (கேரளா) மங்களூர், ரத்னகிரி (மகாராஷ்டிரா) ஆகிய மூன்று இடங்களிலும் முந்திரி ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

வறுத்த முந்திரிப் பருப்பையும், உப்பிட்டுப்பக்குவம்செய்யப்பட்ட முந்திரிப் பருப்பையும் நீண்ட காலங் கெடாமல் பாதுகாத்து வைப்பதற்கான முறைகளை மைசூரில் உள்ள மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருக்கிறது.

—“ நவ இந்தியா ”

---

43ஆம் பக்கத் தொடர்ச்சி

எடுப்புமற்ற எளிய, பெண்களுக்கே உரித்தான ஒரு உவமையின் மூலம் வள்ளுவர் விளக்குதல் போற்றிப் பாராட்டி மகிழ்தற்குரிய தொன்றாகும்.

பொதுமறை தந்த புலவர் பெருமானின் நூற்றுக்கணக்கான உவமை மணிகளில் மூன்றை மட்டுமே இங்கு எடுத்துத் தந்தேன். மற்றவற்றையும் விரும்பும் தமிழன்பர்கள் குறள் கருவூலத்தில் புகுந்து காண்பார்களாக.

—மதுரை எழுத்தாளர் மன்ற ஆண்டு விழா மலர்.

# ஆவியீந்த மகனுக்கு அமெரிக்கர் உதவி

வாஷிங்டன்—அமெரிக்கக் குழந்தையொன்றின் உயிரைக் காக்கத் தன்னுயிரைத் தியாகம் செய்த அம்பளே வெங்கட்ராமன் குடும்பத்துக்கு உதவி அமோகமாகப் பெருகி வருகிறது. அமெரிக்கர்கள் மனமுவந்து தாராளமாக நன்கொடை வழங்குகின்றனர்.

லூஸியானா மாநிலத்தில் பேட்டன் ரோக் என்ற இடத்துக்கு அருகே ஒரு ஆற்றில் அமெரிக்கக் குழந்தையொன்றைக் காப்பாற்றுகையில் மூழ்கி மாண்டார் அம்பளே வெங்கட்ராம். அமெரிக்கக் குழந்தை உயிர் தப்பியது. 34 வயதானவர்; மைசூரைச் சேர்ந்தவர் வெங்கட்ராம். அவருக்கு மனைவியும் இரண்டு சிறு குழந்தைகளும் இருக்கின்றனர். வெங்கட்ராமின் வீரத்தைப் பாராட்டி இரண்டு பரிசுகளை திருமதி வெங்கட்ராமிடம் யு. எஸ். துணை ஜனாதிபதி ஹம்ஃப்ரி வழங்கினார்.

வெங்கட்ராம் குடும்பத்துக்கு தனிப்பட்ட அமெரிக்கர்கள் அமைத்துள்ள நிதி 18,473,80 டாலர் எட்டியுள்ளது. அமெரிக்கா நெடுகிலுமிருந்து அன்பளிப்பு இன்னும் வந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிதியை ஏற்படுத்திய சமுதாய மன்றத்தின் காரியதரிசி எதிர்பார்த்ததைவிட அன்பளிப்புகள் மிக மிக மிஞ்சிவிட்டன என்றும், 1319 நன்கொடைகள் வந்துள்ளன என்றும்; 86 வயதான கைம்பெண் அனுப்பிய 2 டாலர் முதல், திருச்சபை குழு ஒன்று அனுப்பிய 1000 டாலர் வரை இந்த நன்கொடைகள் இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு அன்பளிப்புடனும் திருமதி வெங்கட்ராமுக்கு துக்கம் தெரிவித்தும் அவருடைய கணவனின் வீரத்தைப் பாராட்டியும் கடிதங்கள் வந்துள்ளன என்றும் அவர் சொன்னார்.

பேட்டன் ரோக் பள்ளியின் 4—வது வகுப்பு மாணவர்கள் 33 பேர்களிடமிருந்து திரட்டப்பட்ட 2 டாலருக்கு ஒரு செக் வந்தது. அத்துடன் இணைக்கப்பட்டிருந்த குறிப்பிலே, "இது ஒரு சிறிய நன்கொடைதான். இதை உங்கள் குழந்தைகளுக்கு வழங்க விரும்புகிறோம்" என்று எழுதப் பெற்றிருந்தது.

பேட்டன் ரோக்கில் இருக்கும் யு. எஸ். விமானப் படைப் பிரிவு, அன்பளிப்புடன் ஒரு சிறிய குறிப்பையும் வைத்திருந்தது. "ராணுவத்தினர் என்ற முறையிலே பிறர் உயிரைக் காக்கத் தன்னுயிரைத் தியாகம் செய்ததைவிட மேலான கவுரவம் இருக்க முடியாது; என்பது எங்கள் கருத்து." "யு. எஸ். ஐ."

# கேள்விக்குப் பதில் சொல்லும் இயந்திரம்

புதுப்புது நூல்கள் இப்பொழுது வெளிவரும் வேகத்திலும் அளவிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தால் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு இடம் இல்லாமல் போய்விடும் என்று கூறினாராம் ஒரு நூலக அதிகாரி !

நியூயார்க் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் பல்வேறு விஷயங்களில் வந்து குவியும் புதுப்புது புத்தகங்களை வைக்க சேர்க்கப்படும் அலமாரிகள் 2 மைல் நீளமாகிறதாம் !

“ தகவல் வெள்ளம் ” என்று வியப்பூட்டும் இந்த அறிவுத்துறை வளர்ச்சி வருணிக்கப்பட்டிருக்கிறது. பௌதிகம், ரசாயனம் விண்வெளி ஆராய்ச்சி, இன்னும் இதர விஞ்ஞானிகளின் புதுப் புதுத் துறைகளில் மனிதன் வெற்றி கொண்டிருப்பதுதான் இந்தத் “ தகவல் வெள்ளத்திற்கு ” காரணம்.

மனிதனின் ஒவ்வொரு முயற்சித் துறையிலும் மிகுதிப்படியான தகவல் இருக்கிறது. மருத்துவம், பொறியியல், அணு விஞ்ஞானம், ரசாயனம், உயிர் இயல், வேளாண்மை முதலிய ஒவ்வொரு முயற்சியிலும் மிகுதியாக தகவல் இருக்கிறது. வானிலை அறிவிப்பாளரிடம் கூட இருக்கிறது.

வானிலை அறிவிப்புப் பணி மிகவும் கேலி செய்யப்பட்டு வந்துள்ளதொரு பணி. இந்த அறிவிப்பை இன்னும் துல்லியமாகச் செய்ய வேண்டிய தகவல்களை வழங்கவே ‘டைரோஸ்’ செயற்கைக் கோள் தயாரிக்கப்பட்டது. விண்வெளியில் அது செலுத்தப்பட்ட பின் மூன்று மாத காலத்தில், அது செயல்படும் காலத்தின் முடிவுக்குள், ‘டைரோஸ் –1’ பூமியின் மேகமூடாக்கின் 22000 படங்களைப் பிடித்துள்ளது. ஆனால் வானிலை அறிவிப்பு இலாகா தகவல் வெள்ளத்தில் மூழ்கிவிட்டபடியால், இந்தத் தகவல்களைப் பிரித்து ஒழுங்குபடுத்தி வைக்க நான்கு நிபுணர்களை வேலைக்கு வைக்க வேண்டியதாயிற்று.

மனித மூளைக்கு எல்லாவற்றையும் கிரகித்துக் கொள்ளுவதென்பது இயலாத காரியம். இன்று உலகில் கிட்டும் தகவலில் பெரும் பகுதியைக் கிரகித்துக் கொள்ள முடியாது. ஆனால் எல்லாவற்றையும் கிரகித்துக் கொள்ளக்கூடிய இயந்திரம் ஒன்றை அமைக்கும் ஆற்றலைப் பெற்று விட்டது மனித மூளை.

குறிப்பிட்ட துறைகளில் தொழில்நுட்ப அறிவுகள் அனைத்தையும் கிரகித்துக் கொள்ளக் கூடிய ஒரு இயந்திரம் சென்ற ஆண்டு சிக்காக்கோவில் விளக்கிக் காட்டப்பட்டது. ஆங்கிலத்தில் இதற்கு ஒரு முழு நீளப் பெயர் வைக்கப்பட்டிருந்தது. அதைச் சுருக்கி 'இஸ்ரால்ஸ்' என்று அழைத்தனர். "தகவல் கிடங்கு" என்பது அந்தப் பெயரின் பொருள். பல்லாயிரக் கணக்கான மனித மூளைகளின் திறமைகளுக்கு அறைகூவல் விடுக்கும் முறையில் இந்த மின் அணுக் கருவி தகவல்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறுகிறது.

திகைப்பு மூட்டும் மின் அணுக் கருவியான இந்த இயந்திரம் கணக்கிடவும் செய்யும். இதன் திறமைகள் வியப்பூட்டுபவை. அம்புலியை நோக்கிப் பாய்ச்சலை கணக்கிடுவதிலிருந்து ஒரு அமெரிக்கத் தேர்தலின் முடிவுகளை முன்கூட்டியே புள்ளி விபரமாகத் தெரிவிப்பது வரை இந்தக் கருவியின் பணிகள் பலதரப்பட்டவை. ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி தயாரித்துள்ள இந்த இயந்திரத்தில் 225டிரான்ஸிஸ்டர்கள் இருக்கின்றன, 8192 வார்த்தைகளை அது நினைவில் வைத்துக் கொள்ளக் கூடியது. இலக்கியத் துறை ஆய்வுக்குரிய சில சிறப்பு இயல்புகள் இருக்கின்றன.

---

24 மணி நேரம் கொண்ட ஒரு நாளின் ஒவ்வொரு 60 விநாடிக்கு உலகில் எங்காவது 2000 பக்கங்கள் கொண்ட நூல்கள், செய்தித் தாள்கள், அறிக்கைகள் பிரசுரமாகின்றன ஒரு நபர் ஒரு ஆண்டுக்குத் தமது நேரம் முழுவதையும் படிப்பதற்காகப் பயன்படுத்துவதாக இருந்தாலும் அவர் வாசிக்க முடியாமல் 105,12,00,000 பக்கங்கள் எஞ்சி நிற்கும். உலகில் கணக்கிலடங்கா தகவல் மேலும் மேலும் குவிகின்றன என்பது வாகையால் தனி நபர் எல்லாவற்றையும் அறிவது சாத்தியமல்ல. இந்த அறியாமை மேலும் அதிகரித்து வருகிறது.

இஸ்ரால்ஸ் இயந்திரம் ஒரு ஆண்டில் தொழில் நுட்பப் பிரசுரங்கள் அனைத்தையும் சில மணி நேரங்களில் படித்து முடிக்கவல்லது. கேட்கும் கேள்வி பொதுவாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட தொரு விஷயத்தைப் பற்றியதானாலும் சரி, எளிதானாலும் சரி, இயந்திரம் மிகத் துல்லியமாக, நம்ப முடியாத, வியப்பூட்டும் முறையில் விடை பகருகிறது.

இயந்திரத்தினிடம் "மூளை அறுவை மருத்துவம் புற்றுநோய் சிகிச்சை பற்றி அண்மையில் என்ன பிரசுரிக்கப்பட்டுள்ளது" என்று கேட்டால், ஒருசில நிமிடங்களில் இந்த விஷயத்தில் முந்திய இரண்டு வாரத்திலோ அல்லது சென்ற ஆண்டிலோ அல்லது குறிப்பிட்ட பிரசுரங்கள் அனைத்தையும்பற்றிக் குறிப்பிட்டு விடுகிறது. அகர வரிசை அல்லது ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள

தொழில் நுட்பக் கட்டுரைகள் உரிமைப் பதிவுகள், அரசாங்க, அறிக்கைகள் முதலியவற்றிலிருந்து இந்தக் கருவி வேண்டிய தகவலை மணிக்கு லட்சம் என்ற வேகத்தில் தேடி எடுக்க முடியும். ஒரே சமயத்தில் 10 வெவ்வேறு கேள்விகளுக்குப் பதில் கூறவும் முடியும்.

இவ்வளவு சிறப்புத் தன்மைகளைக் கொண்ட இந்த இயந்திரத்தை இயக்குவதில் மனித அம்சம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. கட்டுரைகளைப் பொருளும் அவை எழுதப்பட்ட மொழிகளும் தெரிந்த விஞ்ஞானிகள் ஒழுங்குபடுத்த வேண்டும்; பிறகு இருவித சுருக்கங்கள் எழுதப்பட வேண்டும். ஒன்று சாதாரண ஆங்கிலத்திலும் மற்ற சங்கேதத்திலும் எழுதப்பட வேண்டும். சங்கேதத்தில் எழுதப்படுவது தான் இயந்திரத்திற்குள் செலுத்தப்படுகிறது.

கேட்கப்படும் கேள்விகளும் கூட, இயந்திரத்தின் மொழியில் ஊழியர்களால் மொழி பெயர்க்கப்பட வேண்டும். பிறகுதான் அது இயந்திரத்தில் செலுத்தப்பட வேண்டும். பதில்கள் கிடைத்ததும், ஊழியர்கள் அவைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும்.

இந்தக் கருவி இப்பொழுது துவக்க நிலையில்தான் இருக்கிறது. தகவல் ஆராய்ச்சி முறை தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

—“நவ இந்தியா”

---

**வெறும் ஓடு**

பண்டைக் காலத்தில் எப்படி இருந்த போதிலும் இப்போது ஸ்தாபனங்களாக வழங்கி வரும் மதத்தில் வெறும் ஓடுதான் இருக்கிறது. உயிர் இல்லை. ஒரு கூட்டில் அதனுடைய இயற்கையான சத்துப் போய்விட்ட பிறகு அந்தக் கூட்டுக்கு இயல்பாயில்லாத பொருள்கள் வந்து வெளியே அடைந்துகொண்டு அந்தக் கூட்டின் பழைய உருவமும் அமைப்பும் கெடாமல் இருப்பதுபோல் மதமும் இருக்கின்றது.

நேருஜி.

# நாமும் மனமும்

மலர்களிலே மனோரஞ்சிதம் என்ற ஒருவகை மலர் உண்டு. யார் எந்த மலரை நினைத்துக் கொண்டு முகர்ந்து பார்த்தாலும் மனதால் நினைத்த பூவின் மணத்தை அது தரும் என்பது நம்மவர்களின் நம்பிக்கை. இது உண்மையாக இருக்குமானால் நம்முடைய மனத்தையும் மனோரஞ்சிதப் பூவுடன் ஒப்பிடலாம். ஏனென்றால் எவரெவர் எதை நினைத்துக்கொண்டு ஆராய முற்படுகின்றார்களோ அதற்கேற்றவாறெல்லாம்காட்சியளிக்கக் கூடியது மனம். கிரேக்க நாட்டினர் மனம் என்பது மனிதனுக்குள்ளே, நீக்கமற நிறைந்து மறைந்து நிற்கும் மாயா சக்தியாம் ஆன்மாவாகும் என்றார்கள். கீழை நாட்டைச் சேர்ந்த நம்மவர்கள், மனித உள்ளம் எப்போதும் ஒன்றின் மீது மட்டும் நிலைத்து நில்லாமல் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத்தாவும் குரங்கின் செயலை ஒத்திருக்கிற காரணத்தால் மனம் ஒரு குரங்கு என்கிறார்கள். பேய் சிலரைப் பிடித்துக்கொண்டு ஆட்டி அலைக்கழிப்பது போல மனத்தின் விருப்பு, வெறுப்புகளே மனிதரை ஆட்டிப் படைப்பதால் மனம் ஒரு பேய் என்று சொன்னார்கள் மற்றும் சிலர்.

மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தி வைப்பதே மனம்தான். அத்தகைய ஒன்றை அதிசயமான ஆன்மா, அருவருப்பூட்டும் பேய் என்றெல்லாம் விளக்குவது கேட்டுச் சிலர் வேதனைப்பட்டார்கள். அதிலும் அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்தவர்கள் மனம் என்பது மனிதனுக்கு அமைந்த மகத்தான செல்வம், மாபெரும் நிதி என்று கூறுகிறார்கள்.

மனம் என்பது சில சக்திகளின் கூட்டுச் சரக்குத்தானே தவிர தனி உறுப்பல்ல. அது ஒரு கருத்துப் பொருள். கண்ணால் கண்டறியவும், கையால் தொட்டுணரவும் கூடிய காட்சிப் பொருள் அல்ல. இத்தகைய ஒன்றை எப்படி இருப்பதாக நம்புவது என்ற ஐயம் நம் உள்ளத்தில் எழலாம். ஆனால் ஒரு எடுத்துக்காட்டு இதனை நன்கு விளக்கும் மின்சக்தியை நாம் அறிந்திருக்கிறோம். அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து நிற்கிறது மின் சக்தி. இருளை அகற்றுகிறது; இனிய ஒளிபரப்புகிறது. இயந்திரங்களையெல்லாம் இயங்கவைக்கின்றது. இத்தகைய மின் சக்தி செயல்படும் போதுதான் ஒளியாகவும், விசையாகவும், வெளிப்படுகிறது. எனவே செயலைக் கொண்டுதான் மின் சக்தியை அறிய முடியுமே தவிர தனித்த ஒரு காட்சிப் பொருளாகக் கண்டறிய முடியாது. ஏனெனில் மின் சக்திக்கு உருவமில்லை. இதைப்

போலவே மனம் என்பதையும் அதன் சக்திகளால் தான் உணர முடியுமே தவிர தனித்த ஒரு காட்சிப் பொருளாகக் கண்டறிய முடியாது.

மனிதன் செயல் படும்போது தான் அவனுடைய உள்ளத்தின் சக்திகளும் நமக்குப் புலப்படுகின்றன. அந்த சக்திகளின் தொகுப்பு தான் மனம். அதுவே மனிதனின் மாபெரும் செல்வம்.

செல்வம் என்றதும் நன் செய், புன் செய், காடு, கழனி, மாடு, மனை, மாளிகை, மச்சு, தோட்டம் துரவு ஆகியனவும், பணக் குவியலும் நம் நினைவுக்கு வருகின்றன. இவையெல்லாம் உலக வாழ்வுக்கு உரிய செல்வங்கள். ஆனால் இவற்றைவிட உயர்ந்த செல்வம் மனமேயாகும். ஏனென்றால் இந்த உலக வாழ்வுக்குரிய செல்வங்களைச் சேர்ப்பதற்கு உறு துணையாக இருப்பதே நம் மனம்தானே?

மனிதன் சிந்திக்கிறான், கற்பனை செய்கிறான், ஆனந்தப்படுகிறான், ஆச்சரியப்படுகின்றான் ஒன்றை விரும்புகின்றான்; மற்றொன்றை வெறுக்கின்றான்; சிரிக்கின்றான், பிறரைச் சிரிக்கவும் வைக்கிறான். இந்தச் சிந்தனை கற்பனை, விருப்பு, சினம், சிரிப்பு ஆகிய இத்தனை சக்திகளும் மனத்தின் செல்வங்களே ஆகும். மனம் என்ற செல்வத்தை மூலதனமாகக் கொண்டு தான் மனிதன் வாழ்வு என்னும் வாணிபத்தை நடத்துகின்றான்.

மனத்தின் சக்திகளிலேயே சிறந்தது பகுத்தறிவு. மனிதன் சிந்திக்கக் கூடியவன். அதனால் தான் நாளுக்கு நாள் நாகரிகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கிறான். மனிதருக்கே உரிய இந்த மகத்தான ஆறாவது அறிவின் துணையால் தான் எதையும் ஏன்? எப்படி? என்ற கேள்விகளைத் தொடுத்து காரண காரிய விளக்கம் கண்டு உண்மை அறிவைப்பெற முடிகிறது. இதனால் தான் உண்ணும் முறையிலும், உடுக்கும் விதத்திலும், வாழும் வகையிலும், வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதிலும் மனிதன் சிறந்து விளங்குகிறான். சிந்தனைத் திறன் தான் சிலரை மேதைகளாக ஆக்குகின்றது. சிலரை விஞ்ஞானிகளாகவும் சிலரை மெய்ஞ்ஞானிகளாகவும் ஆக்குகின்றது. இந்தச் சிந்தனைத்திறன் தான். நான் யார்? என் உள்ளம் யார்? என் ஞானங்கள் யார்? என்ற தத்துவ விசார

ஜி. கலியராஜுலு

# மனம் ஒரு செல்வம்

லையில் நம்மை ஈடுபடுத்துகின்றது.

மனத்தின் இரண்டாவது செல்வம் கற்பனையாகும். உயிரற்ற உணர்ச்சியற்ற, ஒரு சாதாரணக் கல், சிற்பியின் உளிபட்டதும் நம் சிந்தையைக் கவரத்தக்கதாய், உயிர் உள்ளதாய், உணர்ச்சியை வெளிப்படுத்திக் காட்ட வல்லதாய், சிலை என்னக் கலையாய் அமைந்துவிடுகிறது. ஒன்றுமில்லாத இடத்தில்வரையப்பட்ட ஓவியம், ஓவியனின் கை வண்ணம் காரணமாக மெய் வண்ணம் கொண்டு பேசும் பொற் சித்திரமாக நம்மிடம் உறவு கொண்டாடுகிறது. அன்றாட வாழ்க்கையில் நிகழும் ஒரு சிறு நிகழ்ச்சி, எழுத்தாளனின் திறமையால் அருமையான சிறு கதையாக அமைந்துவிடுகிறது. உள்ளத்தைத் தொடும் உலக இயற்கை, கவிஞனின் திறமையாய்க் கவிதையாக மலர்கின்றது. இதனால் தான், நமக்கு சாதாரணமாகத் தோற்றும் நிலவு, கவிஞனுக்கு 'நீல முக்காட்டுக் காரி நிலாப் பெண்ணாள்' ஆக நீலவான் ஆடைக்குள்ளே உடல் மறைத்து நிலாவென்று காட்டுகின்ற ஒளி முகத்தாள்' ஆகக் காட்சி அளிக்கிறது.

இத்தகைய கலைத்திறமைகளை கலைஞர்களின் கைத்திறன், கை வண்ணம் என்றெல்லாம் கூறுகிறோம். ஆனால் இப்படிக் கூறுவது பெரும் தவறாகும். ஏனென்றால் அக்கலைத்திறன்கள் எல்லாம் கலைஞர்களின் கையகத்தே இல்லை. அவை இருக்குமிடம் அக்கலைஞர்களின் மனமே ஆகும். எனவே கலைத்திறன்கள் யாவும் மனத்தின் கற்பனைச் செல்வங்களே எனலாம். அவை வெளிப்பட கைகள் உதவுகின்றன. ஆனால் கையுள்ளவர்களெல்லாம் கலைஞர்களாகிவிட முடியாது. கற்பனைத்திறன் என்ற மனத்தின் செல்வம் உடையவர்களே கலைஞர்களாக ஆக முடியும். சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்பது போல, மனத்தில் கற்பனை வளம் இருந்தால் தான் கைவழியே வெளிப்பட முடியும். இன்னும் ஒருபடி மேலே போனால் கற்பனை, கலைஞர்க்கு மட்டுமல்ல விஞ்ஞானிகளுக்கும்கூட அடிப்படை எனலாம். பறவையைப் பார்த்து மனிதனும் பறக்க விரும்பினான். கவிஞனாகிய மனிதன் கற்பனை செய்தான். கவிதையில் புஷ்ப விமானத்தைப் படைத்தான். விஞ்ஞானியாகிய மனிதனும் கற்பனை செய்தான். உண்மை விமானத்தைப் படைத்திருக்கிறான். எனவேதான் மனிதனின் படைப்பு ஆற்றல்கள் மனத்தின் கற்பனைச் செல்வம் என்று சொல்கிறோம்.

மனத்தின் மூன்றாவது செல்வம், ஞாபக சக்தியாகும். இலக்கணத்தில் காலம் மூன்று வகைப்படும் என்று படிக்கிறோம். அவற்றிலே ஒன்று இறந்த காலம். ஞாபக சக்தி என்பது இறந்த கால அனுபவங்களின் தொகுப்பு. ஞாபக சக்தி இன்றேல் இறந்த காலம் என்பதே இருக்க முடியாது. வீட்டை விட்டுப் புறப்

பட்டால் எங்குப்போக வேண்டும் என்பதை மறந்து எங்காவது சுற்றிக்கொண்டே இருப்போம். வெளியில் போனவர்கள் திரும்பி வீடு வந்து சேரமாட்டோம். மனைவி, மக்கள், வீடு, குடும்பம் பற்றிய நினைவுகூட இருக்காது. ஏன்? நாம் மனிதராகக் கூட வாழ மாட்டோம். ஞாபக சக்தி மூலம் மனம் தொகுத்து வைக்கும் அநுபவங்கள் அதன் அறிவுச் செல்வமாக அமைகின்றன. அநுபவப்பட்டுப்பெற்ற அறிவைத்தான் பட்டறிவு என்று சொல்கிறோம். அநுபவங்களைத் தொகுத்து வைக்கலாம். அப்போதைக்கப்போது மறந்துவிட்டால் அறிவு வளராது. எடுத்துக்காட்டாக தீச்சுடரைப் பழம் என்று எண்ணி, விட்டில் பூச்சி விளக்கின் மீது வீழ்ந்து அதன் வெப்பத்தால் இறக்கைகளைப் பொசுக்கிக் கொள்ளும். இப்படி எத்தனை முறை அநுபவப்பட்டாலும் நெருப்பு சுடும் என்ற நினைவு அதற்கு ஏற்படுவதில்லை. காரணம் பழைய அநுபவங்களை உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளும் ஆற்றல், அதாவது ஞாபக சக்தி, அதனிடம் இல்லை.

ஆனால் அதே நேரத்தில் ஒரு தடவை விளக்கில் விரலை வைத்துச் சுட்டுக்கொண்டு வேதனைக்கு ஆளான குழந்தை அதைக் கண்டால் மறுமுறை நெருங்க அஞ்சுகின்றது. ஏனென்றால் அநுபவங்கள், ஞாபக சக்தியாக உள்ளத்தில் குறைந்து விடுவதே காரணமாகும். இதனால்தான் வயது வந்த நாமெல்லாம் கூட நெருப்பு, தேள், பாம்பு ஆகியவற்றை நெருங்க அஞ்சுகிறோம்.

மனத்தின் மற்றொரு செல்வம் கனவு ஆகும். உண்மையில் நிறைவு செய்துகொள்ள முடியாத சில நினைப்புகளைக் கனவுதான் நிறைவேற்றி வைக்கின்றது. பணக்காரப் பெண்ணொருத்தியை மணக்க விரும்புகிறான் ஓர் ஏழை. அவளோ இவனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவள் காதலைப்பெற முயற்சிக்கிறான், முடியவில்லை. வேறு வழிகளைக் கையாண்டால் தனக்கு ஆபத்தாயிற்றே என்று உணர்கிறான். ஆசை நிறைவேறாது என்பதை அறிந்து, அதை அடக்கிவைத்து முயற்சியைக் கைவிடுகிறான். ஆனால் இந்த ஆசை நிச்சயம் நிறைவேறலாம். எப்போது என்றால் அவன் கனவு காணும்போதுதான். தான் விரும்பிய பெண்ணை தன்னைக் காதலிப்பது போன்று கனவு காண்கின்றான் எண்ணம் நிறைவேறிவிட்டதாக இன்பமும் கொள்ளுகின்றான். இது அவன் ஆசைக்கோர் ஆறுதல்.

பணத்தைப் பாங்கில் போட்டு வைக்கிறோம் பாங்க் கடனில் மூழ்கி விடுகின்றது பணம் போயிற்றே என்று நாம் பரிதவிக்கின்றோம். அந்த நேரத்தில் அரசாங்கம் தலையிட்டு ஏதோ ஒரு விகிதத்தில் நஷ்டஈடு தருவதாக அறிவிக்கின்றது. இது நமக்கு ஓரளவு ஆறுதல் தரவில்லையா? இது போன்றது

தான் கனவும் ஆகும். மனமானது நனவுமனம் Conscious mind துணை நனவு மனம் Sub-Conscious mind நனவற்ற மனம் Un conscious mind என மூன்று வகைப்படும். நனவு மனம் எண்ணங்களையும் ஆசைகளையும் திரட்டி துணை நனவு மனம் என்ற பாங்கில் சேமித்து வைக்கின்றது. இயலாமை, பயம், மறதி போன்றவை நம் எண்ணங்களையும், ஆசைகளையும் அடக்கி அழிக்கின்றன. ஆனால் நனவற்ற மனம் கனவு என்ற நஷ்ட ஈடு அளித்து நமக்கு ஆறுதல் தருகின்றது எனவே நிறைவேறாத நினைப்புகள், அடக்கி வைக்கப்படும் ஆசைகள், ஒடுக்கி வைக்கப்படும் உணர்ச்சிகள் ஆகியவற்றை நிறைவேற்றி வைக்கும் கனவும் ஒரு செல்வம் ஆகும்.

பழக்கமும் மனத்தின் ஒரு செல்வமாகும். பழக்கம் என்பது ஒன்றைத் திரும்பத்திரும்பச் செய்வதால் உண்டாகும் திறமையாகும். பழக்கம் குறைந்த உழைப்பில் நிறைந்த பயனைப் பெற உதவுகிறது. தட்டெழுத்துப் பழக்கம் உள்ளவர்கள் ஒரு பக்கத்துச் செய்தியை ஐந்தே நிமிடங்களில் விரைவாக அடித்து முடிக்க முடியும். ஆனால் பழக்கம் இல்லாமல் புதிதாக முயலுபவர்கள் பத்து நிமிடங்கள் ஆனாலும் அடித்து முடிக்க இயலாது. எனவே, பழக்கம் தான் ஒருவனைப் பரிபூரண மனிதனாக ஆக்குகின்றது என்று சொல்லலாம். இதனால்தான் சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்றார் ஔவையார்.

முதலில் கனவு நிலையில் நாம் பெறும் அநுபவங்கள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் ஏற்படுமானால் அவை நனவற்ற செயல்களாக மாறிவிடுகின்றன. முதன் முதலில் சைக்கிள் ஓட்டக் கற்கும்போது கால்களால் மிதிப்பது, கைகளால் திருப்புவது போன்ற செயல்கள் நனவுச் செயல்களாகும். ஆனால் அதில் முழுப் பயிற்சி பெற்று ஓட்டும்போது அச்செயல்கள் நனவு அற்ற நிலையில் நிகழ்கின்றன. காரணம் பழக்கமேயாகும்.

செல்வத்தைப் பெருக்கவும் செல்வம் மூலதனமாக ஆக வேண்டும். நனவு மனம் என்பது அறிவு, உணர்வு, நடத்தை என்ற மூன்று செல்வங்களை மூலதனமாகக் கொண்டது. நாம் இன்று பெற்றிருக்கிற பௌதீகம் ரசாயனம் போன்ற விஞ்ஞானங்கள், நனவு மனத்தின் அறிவுச் செல்வமாகும். இசை, இலக்கியம், சிற்பம், சித்திரம், நடனம், நாடகம், அழகுக் கலை. கட்டடக்கலை போன்றவை நனவு மனத்தின் உணர்வுச் செல்வங்களாகும். நாம் கொண்டிருக்கிற கொள்கைகள், கோட்பாடுகள், ஒழுக்க நெறிகள், சட்டதிட்டங்கள் யாவும் நனவு மனத்தின் நடத்தைச் செல்வங்களாகும்.

துணை நனவு மனம் என்பது பட்டறிவு, ஞாபக சக்தி ஆகிய

58ஆம் பக்கம் பார்க்க

# தொழில் தகராறுகளில்

## பஞ்சாயத்து முறை

### அமெரிக்க நிபுணர் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 22—மனப் பூர்வமான பஞ்சாயத்து முறை அமெரிக்காவில் வெற்றி பெற்றுள்ளதென்பதைக் கடந்த 30 ஆண்டு அனுபவம் புலப்படுத்தியுள்ளது. அனைவரும் ஒப்புக் கொள்ளும் நன்கு நிலைபெற்று விட்ட ஒரு முறையாகி விட்டது அது என்று கூறுகிறார், பேராசிரியர் மாரிஸன் ஹாண்ட்ஸேக்கர்; இவர் புகழ்பெற்ற அமெரிக்கத் தொழில் துறை உறவு நிபுணர்.

பென்ஸில்வானியா மாநிலத்தில் ஈஸ்ட்டன் நகரிலுள்ள லஃபாயக் கல்லூரியில் பொருளாதாரப் பிரிவுத் தலைவராக இருக்கும் பேராசிரியர் இங்கு செவ்வாயன்று, மனப்பூர்வமான பஞ்சாயத்து முறை பற்றிய ஒரு கருத்தரங்கில் உரை நிகழ்த்தினார். அமெரிக்காவில் பெரும்பாலான தகராறுகளை ஆரம்பக் கட்டத்திலேயே தீர்த்துவிடுகிறார்கள் என்றும், ஒரு சில தகராறுகளிலேயே பஞ்சாயத்தார் ஒருவரின் பணி தேவைப்படுகிறதென்றும் அவர் கூறினார். தொழில் துறையில் அமைதி நிலவப் பெருமளவு துணை செய்யும் இந்த முறை ஒரு சிறந்த — நடைமுறையில் கடைப்பிடிக்கக் கூடிய—ஒரு வழியாகும் என்றார் அவர்.

சென்னை உற்பத்தித் திறன் கவுன்சில் (எம்.பி.சி.), புது டில்லியிலுள்ள இந்தியத் தொழிலாளர் நலப் பஞ்சாயத்தார் கழகம் (ஐ.ஏ எல்.ஏ.) ஆகிய இரண்டும் ஏற்பாடு செய்த இந்தக் கருத்தரங்கு அமெரிக்கத் தகவல் நிலைய (யு எஸ்.ஐ.எஸ்.) அரங்கில் நடைபெற்றது. நிர்வாக அதிகாரிகள், தொழிலாளர் தலைவர்கள். பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், அரசாங்க அதிகாரிகள் முதலானோர் வந்திருந்த இந்தக் கருத்தரங்குக்கு எம். பி சி. துணைத் தலைவர் கே. ஈஸ்வரன் தலைமை வகித்தார்.

மனப்பூர்வமான பஞ்சாயத்து முறை அமெரிக்காவில் நல்ல முறையில் பாரபட்சமற்ற விதத்தில் செயல்படுகிறதென்று ஈட்வரன் கூறினார்.

#### சிறந்த வழி

ஐ. ஏ. எல். ஏ. காரியதரிசி டாக்டர் அர்ஜுன் பி. அகர்வால் அடுத்துப் பேசுகையில், நாட்டுக்குத் திட்டமிடுவோர் பஞ்சாயத்து முறைக்கு முக்கிய இடமளித்துள்ளதாகவும், இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு வகுக்கப்பட்டுள்ள கொள்கையில் அது தெளிவாகப் புலப்படுகிற

தென்றும் கூறினர். மற்ற வழிகளைவிடப் பஞ்சாயத்து முறையையே விரும்ப வேண்டுமென்றும், ஏனெனில் இது பரஸ்பர நன்மைக்குரிய சகிப்புத் தன்மையையும் பரிவையும் ஏற்படுத்துகிறதென்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் பஞ்சாயத்து முறை தோன்றி வளர்ந்த விதம் பற்றிப் பேராசிரியர் ஹாண்ட்லேக்கர் எடுத்துரைக்கையில், நிர்வாகிகளும் தொழிலாளர்களும் முத்தரப்பு முறையைப் பயன்படுத்திப் பார்த்ததாகவும், அது அவ்வப்போது பயனளித்தாலும், பொதுவாகக் குறைபாடுள்ளதாகவே இருந்தது என்றும் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:— பின்னர், நடுநிலைப் பஞ்சாயத்து முறை வர வர அதிகமாகப் புழக்கத்துக்கு வந்தது. தொழிலாளர்கள், நிர்வாகிகள் ஆகிய இரு சாராருமே அதிகம் விரும்புவதால் இது அதிக நன்மை விளைவிப்பதாகப் புலனாகியுள்ளது.

மற்றொரு புது முறை! நிலையான மத்தியஸ்தர் முறை. இதன்படி, குறிப்பிட்ட ஒரு ஒப்பந்தக் காலத்துக்கு நிலையான பஞ்சாயத்தார் ஒருவரை வைத்துக்கொள்ள முதலாளிகளும் தொழிலாளரும் சம்மதிக்கின்றனர். இது கூட்டுபேர ஒப்பந்தத்திலேயே இடம் பெறுகிறது. இந்த முறையிலுள்ள ஒரு தெளிவான நன்மை; மெதுவாக வேலை செய்தல், வேலை நிறுத்தம், கதவடைப்புகள் ஆகியவற்றை இது தவிர்ப்பதோடு கூட, பஞ்சாயத்து விரைவாக நடக்கவும் வகை செய்கிறது.

அமெரிக்க பஞ்சாயத்தார்கள் நேர்மைக்குப் பேர் போனவர்கள்; பெரும்பாலும் கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் வழக்கறிஞர்களுமே அவர்கள்.

மூன்று நாள் சென்னையில் தங்கிய அமெரிக்க நிபுணர், தொழிலாளர் தலைவர்களையும், அரசாங்க அதிகாரிகளையும் இங்குக் கண்டு பேசினர் பேராசிரியரும் அவரது மனைவியும் புதனன்று சென்னையிலிருந்து புது டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

—“ யு. எஸ். ஐ. ”

---

56ஆம் பக்கத் தொடர்ச்சி

மூலதனங்களை உடையதாகும். இவற்றின் துணையால் வரலாற்று நிகழ்ச்சிகள், வாய்பாடுகள், இலக்கண விதிகள், இலக்கிய நயங்கள் ஆகியவற்றைச் சேமித்து வைக்கிறோம்.

பழக்கங்கள், கனவுகள் ஆகியவை நனவற்ற மனத்தின் செல்வங்களாகும். இவையே வாழ்க்கையின் சுமையைக் குறைத்துத் தன்னம்பிக்கையுடன் வாழச் செய்கின்றன. பணச் செல்வத்தில் மட்டும் கவனம் செலுத்தும் நாம், இந்த மனச் செல்வத்தையும் பெற்றால்தான் உயர்ந்த மனிதரெனச் சிறந்து விளங்க முடியும். வையகத்தில் வாழ்வதற்கு மனச் செல்வமே சிறந்த செல்வமாகும்.

—“ வானொலி ”

## ஆப்ரகாம் லிங்கன்...

16-ம் பக்கத் தொடர்ச்சி

முடியும் மட்டும் அவர் இப் பிரச்னையை மறக்கவில்லை.

ஜனநாயகத்தில் லிங்கனுக்கிருந்த நம்பிக்கை அவரது வாழ்க்கையால் வளம் பெற்றது. மனிதனுக்கு மனம் இருந்தால் எவ்வளவு தூரம் முன்னேறலாம் என்பதற்கு அவர் கண்கண்டசான்றாக விளங்கினார். 1809 பிப்ரவரி 12–ஆம் தேதி ஒரு மரக் குடிசையில் பிறந்த அவர் 1861–இல் அமெரிக்க ஜனாதிபதி மாளிகையில் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்றார்.

பாடுபட்டு, மெல்ல மெல்லத் தான் அவர் முன்னுக்கு வந்தார். அவர் பள்ளி சென்று படித்த நாட்களைக் கணக்கிட்டால், ஓர் ஆண்டு கூடத் தேறாது. ஆயினும் அவர் பகலில் வேலை செய்த பின்னர், இரவில் புத்தகமும் கையுமாக இருப்பார். அக்கம் பக்கத்தவர்களிடமிருந்து புத்தங்களை இரவல் வாங்கிப் படிப்பார்

ஊராருடன் எப்போதும் நன்கு பழகுவர் லிங்கன். எனவே, இல்லினாய்ஸ் மாநிலச் சட்ட சபைக்குத் தேர்தலில் நின்றார்; ஆனால் தோற்றுப்போனார். 1834–ல் அடுத்த தேர்தலிலும் நின்றார்; இத்தடவை வென்றார். இவ்வாறு மூன்று தடவை சட்ட சபை உறுப்பினரானார். இதற்குள் அவரது வழக்கறிஞர் தொழிலும் வளர்ந்துவிட்டது. சட்ட சபைப் பணியை விட்டுவிட்டு வழக்கறிஞர் வேலையில் கருத் தோன்றினார். நுண்ணறிவு, பரிவு, நாணயம் இவற்றுக்குப் பெயர் பெற்றார்.

1850 வாக்கில் அமெரிக்க மக்கள் புதிதாகக் குடியேறிய மேற்குப் பகுதிகளிலும் அடிமை முறை அடியெடுத்து வைத்துவிடும்போல் தோன்றிற்று. உடனே லிங்கன் மீண்டும் அரசியலில் புகுந்தார். "பாதிப் பேர் அடிமைகளாகவும் பாதிப் பேர் சுதந்திரமுள்ளவர்களாகவும் இருக்க இந்த அரசாங்கம் நிலைக்க முடியாது" என்றார். "அடிமை முறை தவறாகாது என்றால், ஒன்றுமே தவறாகாது" என்பது தான் லிங்கன் என்றுமே எண்ணிய எண்ணம்.

1860–ல் லிங்கன் அமெரிக்காவின் 16–வது ஜனாதிபதியானார். அடிமை முறைவேண்டுமா வேண்டாமா என்பது பற்றி நாடெங்கும் கொதிப்பு. குடியரசு உடைபடும்போல் தோன்றிற்று. லிங்கனுக்குப் போர் செய்ய விருப்பமே இல்லை; என்றாலும், அமெரிக்கா சிதறுண்டு தனித்தனி நாடுகளாகப் பிரிந்து போவதைக் காண அவர் தயாராக இல்லை.

நாட்டு ஐக்கியத்தைக் காப்பது அவரது முதல் குறிக்கோள் என்றால், அமெரிக்க நீக்ரோ அடிமைகளை விடுவிப்பது இரண்டாவது குறிக்கோளாகும். அமெரிக்க நீக்ரோ விடுதலைப் பிரகடனத்தில் 1863 ஜனவரி முதல் தேதி அவர் கையெழுத்திட்டார்; அமெரிக்க

வரலாற்றின் மாபெரும் சாசனங்களில் அது ஒன்று. அடிமைகளை அது விடுதலை செய்தது. மனிதனின் சுதந்திரப் போராட்டத்தில் அது மேலும் ஒரு முன்னேற்றமாயிற்று.

இதற்குள் போரும் லிங்கனுக்கு அநுகூலமாக மாறிற்று. 1863-ல் கெட்டிஸ்பர்க் ஊரில் நடந்த சண்டையில் யூனியன் படைகளுக்குப் பெரு வெற்றி. அங்கு ராணுவக் கல்லறைத் தோட்டத்தை ஏற்படுத்தும் நாளில் லிங்கன் கூறிய மொழிகள் யூனியனின் இலட்சியங்களை நன்கு எடுத்துரைத்தன ; "கடவுளின் கீழ் இந் நாட்டுக்குப் புதியதொரு சுதந்திரம் பிறந்தே தீரும்; மக்களுக்காக மக்களால் ஆன மக்கள் ஆட்சி இத் தரணியிலிருந்து அழியாது".

இறுதியாக 1865-ல் அமைதி ஏற்பட்டது. தோல்வியுற்ற தென் பாகத்துக்கு மீண்டும் வாழ்வளிக்க அவர் பெருந்தன்மையோடு திட்டம் வகுத்திருந்தார். இரண்டாவது தடவையாக அவர் பதவியேற்றபோது, "ஒருவர் ஒரும் தீய எண்ணம் கொள்ளாமல், அனைவர்பாலும் அன்பு கொண்டு .....நாட்டின் புண்களை ஆற்றவும்.... நமக்குள்ளும் எல்லா நாடுகளுடனும் நீதியான நிலையான அமைதி உருவாகவும் அது பேணி வளர்க்கப்படவும் உகந்த யாவற்றையும் செய்ய நாம் முனைவோமாக" என்று கூறினார்.

ஆனால், அவர் தம் கனவை நனவாக்கும் பேறு பெற்றாரில்லை ; அவர் இரண்டாவது முறை பதவி ஏற்ற ஒரு மாதத்தில் வெறியன் ஒருவன் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டான்.

மக்களிடத்தில், சுதந்திரத்தில், மனிதனின் நன் மனத்தில் நம்பிக்கை வைத்தவர் லிங்கன் ; இதனால்தான், அமெரிக்காவில் மட்டுமல்ல, சுதந்திரமும் ஜனநாயகமும் பேணி வளர்க்கப்படும் எல்லா நாடுகளிலும் மக்கள் அவரிடம் அன்பு பாராட்டுகின்றனர்.

காலஞ்சென்ற பிரதம மந்திரி நேருவுக்கு லிங்கனிடம் பெரு மதிப்பு உண்டு. லிங்கனது வலக் கையின் பித்தளை உருவம் ஒன்று நெடுநாளாக அவரது மேசைமீது இருந்தது. "அது ஓர் அழகான கை ; வன்மையும் உறுதியும் மென்மையும் பொருந்திய கை. நாள்தோறும் நான் அதைப் பார்ப்பேன் ; எனக்கு அது வலுவூட்டுகின்றது" என்று அடிக்கடி கூறுவார் நேரு.

---

நாம் கருத்துக்களை நிறையக் கற்பிக்க வேண்டும். இதுவரை நிகழ்ச்சிகளையே அதிகமாகக் கற்பித்து வந்துள்ளோம்.

—அனடோல் ஃபிரான்ஸ்

# கல்வித் துறைச் செய்திகள்

## தனியார் பள்ளி ஆசிரியர்கள்

### பென்ஷனை உயர்த்துவது பற்றிப் பரிசீலனை

சென்னை, ஜூலை, 27—பென்ஷனர்களுக்கு அளிக்கப்படும் கிராக்கிப் படியை உயர்த்தும் உத்தேசம் இல்லை என்றும், ஆனால் தனியார் பள்ளிக்கூடங்களிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் பென்ஷனை ரூ. 20—க்கு உயர்த்துவது பற்றிப் பரிசீலிக்கப் படுவதாகவும் முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இன்று அசெம்பிளியில் தெரிவித்தார். சர்க்கார் சர்வீஸிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஏற்கனவே குறைந்த பட்ச போனசாக ரூ. 20 பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

## தமிழ்நாட்டில் 30,000 ஆரம்பப் பள்ளிகள்

### முதல்வர் தகவல்

தஞ்சாவூர், ஜூலை. 15—கல்வி வசதிக்குத் தேவை அதிகரிப்பதால் ஒவ்வொரு வருடமும் ராஜ்யத்தில் புதிய உயர்நிலைப்பள்ளிகளை சர்க்கார் திறப்பதாக இன்று இங்கு முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினார். ஆண்டுக்கு 200 வீதம் 600 உயர்நிலைப் பள்ளிகள் கடந்த மூன்றாண்டுகளில் திறக்கப்பட்டதாக அவர் சொன்னார்.

அரண்மனைக் கட்டிடத்தில் ராஜா உயர்நிலைப் பள்ளியை அவர் திறந்து வைத்தார். இந்த வருடம் இதுவரை அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் இது 125வது என்று அவர் சொன்னார். தமிழ்நாட்டில் 30,000 ஆரம்பப் பள்ளிகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இப் பள்ளிகளில் அதிக இட வசதியும், ஆய்வுக்கூட சாதனங்களும் தேவைப்படுவதைப் பற்றி சர்க்கார் கவலையை அவர் தெரிவித்தார்.

## புதிய பாட திட்டம்: ஆங்கில போதனைபற்றி அறிவிப்பு

சென்னை, ஜூலை. 8 — 1—லிருந்து 9 வகுப்புகளுக்கு புதிய கல்வி அமைப்பின் பிரகாரம் பாடத் திட்டத்தை சர்க்கார் அறிவித்திருக்கிறது. ஆங்கிலம் சம்பந்தப்பட்டவரை 3—லிருந்து 8—வது வகுப்புவரை பாடத் திட்டத்தின் நோக்கம், 1750 வார்த்தைகளை நன்கு பூரணமாகத் தெரிந்து கொள்வதாகும். பாடத் திட்டத்துடன் உள்ள பகுதி ஒன்றில், போதனை அம்சங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கிய அமைப்புகளுடன் 1750 வார்த்தைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். 3—வது வகுப்புக்கு ஆங்கில போதனைக்காக தினசரி 20 நிமிடம் ஒதுக்

கப்பட்டுள்ளது. 4—லிருந்து 8 வகுப்புகளுக்கு ஆங்கில போதனை நேரம் தினமொன்றுக்கு 40 நிமிடங்கள்.

1750 வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளும் வகுப்புவாரி விவரம்: 3 வது வகுப்பு 200 வார்த்தைகள் 4வது வகுப்பு கூடுதலாக 200 வார்த்தைகள்; 5 வது வகுப்பு மேலும் 300 வார்த்தைகள்; 6,7, 8 வகுப்புகள் ஒவ்வொன்றுக்கும் கூடுதலாக 350 வார்த்தைகள்.

3 வது வகுப்பில் ஆசிரியர் குறிப்புப்புத்தகமொன்றின் அடிப் படையில் வாய்மொழியாகக் கற்றுக் கொள்வதாக இருக்கும. படிக்கவோ அன்றி எழுதவோ கற்றுக்கொடுக்கப்பட மாட்டாது. 4வது வகுப்பிலிருந்து ஒவ்வொரு வகுப்புக்கும் அந்த வகுப்புக்கான போதனை அம்சங்களின் அடிப் படையில் பாடப் புத்தகம் இருக் கும்.

3லிருந்து 5வது வகுப்பு வரை துணைப் புத்தகங்கள் எதுவும் இராது. 6லிருந்து 8வது வகுப்புவரை இரு துணைப்புத்தகங் கள் இருக்கும்.

## ஆரம்பக் கல்விக்குத்தனி டைரக்டர் அவசியமில்லை

## மேல் சபையில்கோரிக்கையை முதல்வர் நிராகரித்தார்

சென்னை, ஆக 2 ராஜ்யத்தில் ஆரம்பக்கல்விக்காகத் தனியாய் ஒரு டைரக்டரை நியமிக்கவேண் டும் என்ற கோரிக்கையை முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் இன்று நிராகரித்தார்.

உப மான்யக் கோரிக்கை மீது மேல் சபையில் நடந்த விவாதத் திற்குப் பதிலளிக்கையில், தற் போதைய 11 வருஷப் பள்ளிப் படிப்பு இணக்கமான கல்வித் திட்டம் என்றும், எனவே, ஆரம்பக் கல்விக்குத் தனியாக ஒரு டைரக்டரை நியமிப்பது அவசியமில்லை என்றும் திரு பக்த வத்சலம் கூறினார்:

பள்ளிக்கூடம் போகும் குழந் தைகளின் எண்ணிக்கை அதிகரித் துக் கொண்டிருப்பதால், ஆரம் பக் கல்விக்காக ஒரு டைரக்டரை நியமிக்க வேண்டும் என்று திரு. ராஜா அய்யரும் திரு. க. அன்பழ கனும் விவாதத்தில் கேட்டுக் கொண்டனர்.

## இந்தியாவில் பாட திட்டம் காலத்துக்கு ஒவ்வாதது

## கல்விக் கமிஷன் கருத்து

சென்னை, ஜூலை. 31—காலத் துக்கு ஒவ்வாததாயுள்ள, தற் போதைய பாடத் திட்டத்தை, தர உயர்வை நோக்கமாகக் கொண்டு உடனடியாக மாற்றி யமைக்க வேண்டுமென்று கல்விக் கமிஷன் சிபாரிசு செய்யக்கூடும் எனத் தெரிகிறது. கல்வியின் தரம் குறைந்து விட்டிருப்பதாக அது கருதுகிறது.

இந்தக் கமிஷன் இந்திய சர்க் காரால் நடத்தப் பட்டதாகவும், இந்தக் கமிஷனின் தலைவர் டாக்

டர் டி. எஸ். கோத்தாரியும் அங்கத்தினர்களும் இன்று செகரடேரியட்டில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது, கமிஷனின் சிந்தனை யோட்டம் எவ்வாறு உள்ளது என்பது புலனாகியது.

கல்வி வசதிகள் விஸ்தரிப்பு கண்டு வரும் காலத்தில், தரம் ஓரளவு குறையத்தான் செய்யும் என்ற போதிலும், இந்த விஷயத்தில் பிற நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை எட்டிப்பிடித்தாக வேண்டியது அவசர அவசியமாகும் என்றார் திரு. கோத்தாரி இந்தியாவில் நாம் பல வருஷ காலம் பின் தங்கியுள்ள நிலையில் உள்ளோம் என்றார்.

செகண்டரி கட்டம்வரை இலவசக் கல்வி என்று சென்னை சர்க்கார் செய்துள்ள முடிவு துணிகரமானது, முற்போக்கானது, என்று கமிஷன் அங்கத்தினர்கள் தெரிவித்தனர். தமிழ் மொழி வளர்ச்சிக்காக செலவிடப்படும் அவகாசம், சக்தி ஆகியவை தங்களைக் கவர்ந்திருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

தமிழ், புராதன கலாசாரம் ஆகியவற்றின் போதனைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி யூட்டும் விஷயமாகும். மொழிக்காக இங்கு அதிக நேரமும், பீரியடுகளும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## $3\frac{1}{2}$ கோடி குழந்தைகளுக்கு மதிய உணவு: 'கேர்' நிறுவனத்தின் மாபெரும் திட்டம்.

திருவனந்தபுரம், ஜூலை 17—இந்தியாவில் துவக்கப் பள்ளிகளில் படிக்கும் $3\frac{1}{2}$ கோடி குழந்தைகளுக்கும் அடுத்த 5 ஆண்டுகளில் மதிய உணவளிப்பதற்கு அமெரிக்க சர்க்கார் பிரம்மாண்டமான திட்ட மொன்றை வகுத்துள்ளது.

முதல் படியாக வரும் ஆகஸ்டு 1ந் தேதி முதல் 12 ராஜ்யங்களில் உள்ள பல லட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படும் என்று கேர் ஸ்தாபன ஆக்டிங் டைரக்டர் ஜே. எஸ். லீவில் இன்று தெரிவித்தார். ரூ 30 கோடி மதிப்புள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு விநியோகிக்கப்படும் என்றார். இந்தத் திட்டம் பூரணமாக அமுலாக்கப் படுகையில் துவக்கப் பள்ளி குழந்தைகள் சம்பந்தப்பட்ட வரை ஏராளமான பேருக்கு மதிய உணவு அளிக்கும் பெரிய திட்டத்தை இந்தியாவே கொண்டதாக இருக்கும் என்றார்.

அமெரிக்காவில் 7 முதல் 19 வயதுவரையுள்ள குழந்தைகள் இந்தத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப் பட்டுள்ளனர்.

போக்குவரத்து மற்றும் இதர செலவுகளில் மூன்றில் ஒரு பகுதியை மத்திய சர்க்கார் ஏற்க இசைந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 43·7 கோடி ராத்தல் பால் பவுடர் தேவை. இது உலகம் பூராவும் பல ஸ்தாபனங்களின் கீழ் மதிய உணவுக்காக விநியோகிக்கப் படும் அளவுக்குச் சமமாகும்.

மதிய உணவில் மிகச் சத்துள்ள ஆகாரத்தை விநியோகிக்கவும் கேர் ஸ்தாபனம் இசைந்துள்ளது.

## பஞ்சாயத்துகளில் ஆசிரியர்கள் மாற்றம்

### கமிட்டிகள் நியமிக்கப்படும்

பஞ்சாயத்து யூனியன்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளி ஆசிரியர்களை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு மாற்றும் முறையைச் சீர்படுத்துவதற்காக ஒவ்வொரு யூனியனுக்கும் கமிட்டிகளை நியமிக்கும்படி சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தந்தப்பகுதியிலுள்ள ரெவினியூ டிவிஷனல் ஆபிசர்கள் இக்கமிட்டிகளின் தலைவர்களாயிருப்பார்கள்.

தாங்கள் அடிக்கடி மாற்றப்படுவதால் அசௌகரியங்கள் ஏற்படுகின்றனவென்று ஆசிரியர்கள் முறையிட்டுக் கொண்டார்கள் என்றும், அதைத் தொடர்ந்து இந்த ஏற்பாடு செய்யப்படுகிறதென்றும் ஸ்தல ஸ்தாபன மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

மாற்ற வேண்டாம் என்று ஆசிரியர்களிடமிருந்து வரும் மனுக்களும் சரி நிர்வாக சௌகரியத்திற்காக ஆசிரியர்களை மாற்ற வேண்டும் என்ற பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின் யோசனைகளும் சரி பள்ளிக்கூட வருஷம் ஆரம்பமாவதற்கு முன்பு இந்தக் கமிட்டி முன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்தக் கமிட்டி அவற்றைப் பரிசிலனை செய்து, முடிவுகள் செய்யும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், சம்பந்தப் பட்ட டிவிஷன் கல்வி அதிகாரியும் கமிட்டியில் மெம்பர்களாயிருப்பார்கள். கமிஷனர் கமிட்டியின் காரியதரிசி. இக்கமிட்டியின் முடிவுகளைத் துளிக் கூட மாறுதல் இல்லாமல் கமிஷனர் நிறைவேற்றிவைப்பார். கமிட்டி சாதாரணமாக ஏப்ரல் மே மாதங்களில் கூடி மனுக்களைப் பரிசிலனை செய்யும்.

இந்த ஏற்பாடு சிறந்ததுதானு என்பதைப் பற்றிப் பல உப கேள்விகள் கேட்கப்பட்டன. இது பஞ்சாயத்து யூனியன்கள் போன்ற ஜன நாயக ஸ்தாபனங்களின் சுய மரியாதையைப் பாதிக்கிறதென்று பல எதிர்க்கட்சி மெம்பர்கள் புகார் செய்தார்கள். ஆனல், இது நல்ல முறைதான் என்றும், நியமனங்கள் விஷயத்தில் கூட இம்மாதிரி ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்றும் காங்கிரஸ் மெம்பர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். புது ஏற்பாடு திருப்திகாமாக வேலை செய்கிறதென்றும் ஒப்புக் கொண்டார்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.